மலையகத்தில்
தொடர்கிறது
தொழிலாளர்கள்
போராட்டம்
(விரிவு: பக்.11)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 310 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 15, சனிக்கிழமை 01.10.2016



வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (வ-ரி,109)

## நாம் காக்கும் மௌனத்துக்கு காரணங்கள் இருக்கின்றன

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 1

நாங்கள் கடைப்பிடிக்கும் மௌனத்துக்குக் காரணங்கள் இருக்கின்றன. எங்கள் மக்கள் எங்களை நம்புவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. இடைக்கால அறிக்கை வெளிவருகின்ற போது எல்லா விடயங்களும் வெளிவரும். அதுவரைக்கும் மக்கள் நம்பிக்கை காக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதியின் ஊடாக மக்களுக்குப் பல்வேறு உதவித் திட்டங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று நண்பகல் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சிவசிறி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் >> 23ஆம் பக்கம்

## கோலூன்றிப் பாய்தலில் அனித்தா புதிய சாதனை

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசிய தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ஜெ.அனித்தா தேசியத்தில் சாதனை படைத்து தங்கம் வென்றார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தல் போட்டி நேற்றுக் காலை நடைபெற்றது. வடக்கு மாகாணத்தின் சார்பாக களமிறங்கிய ஜெ.அனித்தா 3 மீற்றர் 41 சென்ரி மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்தே சாதனையுடன் தங்கம் வென்றார்.

(விரிவு: பக். 27)

## உதவுங்கள்

### தீ விபத்தால் இழப்புக்களைச் சந்தித்த கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் மக்களிடம் மன்றாட்டம்

கிளிநொச்சி, ஒக். 1

எங்களுடைய வியாபாரிகள் உதவிகள் இன்றி வழமைக்கு திரும்ப முடியாத நிர்க்கதியான நிலையில் நம்பிக்கையற்றுக் காணப்படுகின்றனர். எமக்குத் தற்போது இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை எமது மக்கள் நீட்டுகின்ற கருணை மிக்க உதவிக் கரமே! கடன் சுமையைத் தாங்க முடியாது தத்தளிக்கும் உறவுகளுக்கு கை கொடுத்து உதவுங்கள் என்று சாம்பல் மேட்டில் நின்று உருக்கமாகக் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறு கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்தனர். >> 24ஆம் பக்கம்

அவன்கார்ட் மோசடி விவகாரம்:

## கோத்தபாய உட்பட எண்மருக்கு பிணை

கொழும்பு, ஒக். 1

அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியத்தில் இடம் பெற்ற மோசடிகள் >> 23 ஆம் பக்கம்



## பொலிஸ் நிலையம் வந்து சேர்ந்த கனவு

### தோண்டிப் பார்த்த போதும் எதுவும் அகப்படக் காணோம்

மன்னார், ஒக். 1

வீட்டு வளவில் அம்மன் சிலை புதைக்கப்பட்டுள்ளதாக கனவு வருகின்றது என்று ஆசிரியர் ஒருவரால் மன்னார் >> 23ஆம் பக்கம்



## விளக்கமில்லாமல் அவசரப்படக்கூடாது

### ஹிஸ்புல்லாவுக்கு சுமந்திரன் பதில்

யாழ்ப்பாணம், ஒக். 1

செய்தியைச் சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளாமல் அவசரப்பட்டு அறிக்கை விடக்கூடாது. நான் சொல்லாத ஒன்றை எப்படிப் பொய் என்று கூற முடியும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார்.

“வடக்கு-கிழக்கு இணைப்புக்கு அஷ்ரப் ஒருபோதும் இணங்கவில்லை. தவறான தகவல்களை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் >> 24ஆம் பக்கம்

## அரசியல் கைதிகளுக்கு மீண்டும் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 1

தமிழ் அரசியல் கைதிகள் 23 பேர் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்று அரசினால் தெரிவிக்கப்பட்டது. அவர்களில் >> 23 ஆம் பக்கம்

## யாழ். நகரில் நேற்றிரவு மூவர் மீது வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் ரயில் நிலையம் எதிரே இருந்த வர்த்தக நிலையத்தில் >> 24ஆம் பக்கம்



## இது சிறிலங்கா, தமிழ் நாடு அல்ல வவுனியாவில் நேற்று ஊர்வலம்

### பொதுபல சேனா அமைப்பால் முன்னெடுப்பு

வவுனியா, ஒக். 1

“இது சிறிலங்கா, தமிழ் நாடு அல்ல” என்ற கோசத்தோடு பொதுபல சேனா அமைப்பால் அதன் பொதுச் செயலர் ஞானசார தேரர் தலைமையில் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. நூற்றுக் கணக்கானோர் இதில் கலந்து கொண்டு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகவும் கோசம் எழுப்பினர். >> 23ஆம் பக்கம்



## பிரபாகரனின் இடத்தை பிடிக்க நினைப்பது வெறும் கனவு

### இப்படிக் கூறுகிறார் ஐ.தே.கட்சி எம்.பி.

கொழும்பு, ஒக். 1

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் இடத்தைப் பூர்த்தி செய்ய முதலமைச்சர் விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் தற்போது மக்களிடையே எழுந்துள்ளது. அந்த >> 23ஆம் பக்கம்

சிங்களவர்களுடன் நன்கு பழகிய

## விக்னேஸ்வரன் முதல்வராவதை பொதுபல சேனா விரும்பியது

### சொல்கிறார் ஞானசார தேரர்

வவுனியா, ஒக். 1

தென்னிலங்கையில் வாழ்ந்த சிங்கள மக்களுடன் நன்கு பழகிய விக்னேஸ்வரன் வடக்கு முதல்வராக வரவேண்டும் என்று நாங்கள் விரும்பியிருந்தோம். அவர் வடக்கு முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் இப்போது அவருடைய நிலைப்பாடு நாட்டுக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது. இவ்வாறு >> 04ஆம் பக்கம்

புசல்லவா இளைஞன் சாவு;

## பொலிஸ் நிலையத்தில் நீதிவான் தீவிர விசாரணை

### மூன்றுமுறை தூக்கு மாட்டிக்காட்டச்சொன்னார்

கொழும்பு, ஒக். 1

புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரி >> 23ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# யாழ். நகரில் நாளை நாடக ஆற்றுகைகள்

யாழ்ப்பாணம், ஒக். 1
செயல் திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில், 'யுத்தமின்றி விடியலை நோக்கிய கலைப் பயணம்' கருத்துரைகளும் நாடக ஆற்றுகைகளும், நாளை ஞாயிற்றுக் கிழமை இரு அமர்வுகளாக யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
நாளை காலை 10.30 மணிக்கு இடம்பெறும் காலை அமர்வுக்கு, ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் தே.தேவானந்த் தலைமை வகிக்கிறார். கருத்துரைகளை, யாழ். பல்கலைக் கழக சட்ட விரிவுரையாளர் திருமதி ம.கோசலையும், தேசிய கலை இலக்கிய பேரவையின் தலைவர் சோ.தேவராஜாவும், உதயன் பத்திரிகையின் ஆசிரியரும் வழங்கவுள்ளனர்.
அத்துடன் மரணச் சான்றிதழ், புதையுண்ட சடங்கு, தூவானம் நாடகங்களும் அரங்கேற்றப்படவுள்ளன.
பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும் மாலை அமர்வுக்கு தாயகம் - இலக்கிய இதழின் ஆசிரியர் க.தணிகாசலம் தலைமை தாங்கவுள்ளார். கருத்துரைகளை, நாடக நெறியாளர் ச.பாலசிங்கம், தினக்குரல் பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஆ.சபேஸ்வரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வ.முருகதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.
ஏகாந்தம், மரணச் சான்றிதழ், தூவானம் ஆகிய நாடகங்கள் இதன்போது அரங்கேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-5)

# நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டில் அரசின் முன்னெடுப்புக்கள் தோல்வி

## மன்னார் பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 1
இலங்கையின் நிலைமாறுகால நீதிச் செயற்பாடு தோல்வியடைந்துள்ளதாக, மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்தது.
இலங்கையின் நிலைமாறுகால நீதிச் செயற்பாடு தொடர்பான கலந்துரையாடல், மன்னாரில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மன்னார் பிரஜைகள் குழுவால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில், இலங்கை அரசு பல்வேறு விடயங்களைச் செயற்படுத்துவதாக உறுதியளித்திருந்தது. காணாமற்போனோருக்கான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், உண்மை, நீதி மற்றும் மீண்டும் நிகழாமை தொடர்பிலான அலுவலகம், பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கல், பாதுகாப்புத்துறை சீர் திருத்தம், பொதுநலவாய மற்றும் ஏனைய வெளிநாட்டு நீதியரசர்கள் பங்கேற்கின்ற பிரதிதரப்பு வழக்கறிஞர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வழக்குத் தொடுநர்கள் மற்றும் புலனாய்வாளர்களை கொண்ட சிறப்பு வழக்குரைஞருடனான நீதிப் பொறிமுறை உள்ளிட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த இணங்கியிருந்தது.
நடைமுறையில் எதுவும் இதய சுத்தியுடன் செயற்படுத்தப்படவில்லை. நிறைவேற்றப்பட்ட ஒரு சில பொறிமுறைகளும் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை புறந்தள்ளியே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
பொலிஸ், பாதுகாப்புத் தரப்பு தமிழ் மக்கள் மீது குற்றம் புரிந்தவர்களாக காணப்படும் நிலையில் அவர்களால், சாட்சியங்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு வழங்க முடியும். தமிழ் மக்கள் போர் முடிந்து 7 ஆண்டுகள் கடந்தும் மாற்றங்களை உணரவில்லை, போராளிகள் அச்சத்துடன் வாழும் நிலை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, காணி அபகரிப்பு, புலனாய்வாளர்களின் தொடர்ச்சியான தலையீடுகள் என்பன தொடர்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நிலைமாறுகால நீதியை நடைமுறைப்படுத்துவது என்பது கடினமான சூழ்நிலையாகவே உள்ளது.
பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசின் மீதும், அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற நல்லிணக்க மற்றும் நிலைமாறுகால நீதி தொடர்பிலும் நம்பிக்கை இழந்துள்ளனர். விரக்தியும் அடைந்துள்ளனர் என்று மன்னார் பிரஜைகள் குழு சுட்டிக் காட்டியது.
(வ-5)

# ஆசீர்வாதப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.1
சேச் ஒப் கிறைஸ்ட் சபையினரால் ஆசீர்வாதப் பெருவிழா நடைபெற்று வருகிறது. நேற்று ஆரம்பித்த நிகழ்வுகள், இன்றும் நாளையும், அரியாலையில் நாவலர் வீதி, மாம்பழச் சந்தியில் அமைந்துள்ள சேச் ஒப் கிறைஸ் சபையில் ஆசீர்வாதப் பெருவிழா நடை பெறும். இன்றைய நிகழ்வுகள் மாலை 4 மணிக்கும், நாளைய நிகழ்வுகள் காலை 10 மணிக்கும் நடைபெறும் என்று தெவிக்கப்பட்டது.
(வ-ரி4)

# கால்நடை கூட்டுறவுச் சங்கத்தை மீளச் செயற்படுத்த நடவழிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.1
சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தை மீளவும் செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் தெரிவித்தார்.
இதற்கான கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை மு.ப 10மணிக்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்திற்குச் சங்கத்தின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆணையாளர் கேட்டுள்ளார்.
இந்தக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கடந்த ஆறு மாதத்திற்கு மேலாகச் செயற்பாடுகள் இன்றிய நிலையில் உள்ளது.
(து-17)

# சிறுவர், முதியோர் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 1
உடுவில் இந்து மகளிர் இளைஞர் மன்றத்தினரால் சிறுவர், முதியோர் தினம் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டது.
மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில்முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை கிருபானந்தன் கலந்து கொள்கிறார்.
(வ-ரி)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஒக். 1
நவாலி சென்பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் இன்று சனிக்கிழமை சிறுவர் தினமும், சிறுவர் மகிழ்முற்றம் திறப்பு விழாவும் பி.ப. 4.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.
அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில்நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்கிறார்.
(வ-ரி)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ். பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தினம் இன்று காலை 9 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
முதன்மை நூலகர் திருமதி சுகந்தி சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.
(வ-ரி)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

ஜே.101 பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உதவியாளர், கிராமசேவை உத்தியோகத்தர், பொதுமக்கள் இணைந்து நடத்தும் பன்னாட்டு முதியோர் சிறுவர் கௌரவிப்பு விழா எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம், நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி சிவதாசன் தலைமை தாங்குகிறார். இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-ரி)

# பிறக்கும் இரட்டையர்களுக்கு சிறப்புக் கொடுப்பனவுகள்

சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சினால் இன்று தொடக்கம் (ஒக்ரோபர் 01) பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு பாற்சிசுக்களுக்கான பரிசில்களாக மேலதிக நிதி உதவி வழங்கப்பட உள்ளதாக வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது.
தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளின் குடும்பத்தில் பிறக்கும் ஒரு குழந்தைக்காக வழங்கப்படும் 7,500 ரூபா பிரதி பலனுக்கு மேலதிகமாக விண்ணப்பிக்கும் அனைத்து வாழ்வின் எழுச்சிப் பயனாளிகள் மற்றும் பயனாளிகள் அல்லாத குடும்பங்களில் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளுக்காக ஒரு மாதத்துக்கு ஐயாயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு 60 ஆயிரம் ரூபாவும்மூன்று குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான குழந்தைகளைப் பிரசவிக்கும் போது ஒரு மாதத்துக்குப் பத்தாயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்துக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.
சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்காவின் ஆலோசனையின் பேரில் உலக சிறுவர் தினம் கொண்டாடப்படும் 2016 ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக வழங்கப்படும் என்று வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது.
(வ-250)



டெங்கு ஒழிப்பு வாரத்தில் நேற்று அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவிகளால் பாடசாலை சுற்றுப் புறச் சூழல் சுத்தப்படுத்தப்பட்டு, அச்சுவேலி நகர் பகுதியில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலமும் நடத்தப்பட்டது.
(வ-422)

# கரைச்சி நடமாடும் சேவையில் 700 பேருக்குக் காணி அனுமதி

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இன்று இடம்பெறும் நடமாடும் சேவையில் 700 பேருக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில், கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை இன்று நடைபெறவுள்ளது. இதன்போதே மேற்படி காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.
700 காணி அனுமதிப் பத்திரங்கள் பிரதேச செயலகத்துக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் 25 பேருக்கு அவை சம்பிரதாயபூர்வமாக இன்று வழங்கப்படும்.
இறுதிப் போரின் பின்பு மீள்குடியேற்றம் இடம்பெற்ற காலம் முதல் இன்று வரை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மொத்தம் 9 ஆயிரத்து 300 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2 ஆயிரத்து 150 பேருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளன.
இவ்வாறு வழங்கப்படவேண்டிய 2 ஆயிரத்து 150 காணி அனுமதிப்பத்திரங்களிலேயே தற்போது 700 அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. [illegible] ஆயிரத்து 450 அனுமதிப் பத்திரங்களும் அடுத்த ஆண்டு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.
(து-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்

# பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம்

### நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின்

# மாபெரும் இறுதிப்போட்டி - 2016



பலாலி விண்மீன்



இளவாலை யங்ஹென்றிஸ்

**இரவு 7.30 மணிக்கு**
**3ஆம் இடத்திற்கான ஆட்டம்**
**உடுப்பிட்டி நவஜீவன்ஸ் VS கம்பர்மலை யங்கம்பன்ஸ்**

**இரவு 8.30 மணிக்கு**
**இறுதி ஆட்டம்**
**பலாலி விண்மீன் VS இளவாலை யங்ஹென்றிஸ்**

## இடம் :
## கழக மைதானம்
## காலம் :
## 01.10.2016 இரவு 7.00 மணி



### ஆசிச்செய்தி

வீரப்பெருமான் கிருபா கடாச்சத்தில் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற மாபெரும் உதை பந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டியில் பங்கு பெறும் விளையாட்டுக் கழகங்களுக்கும் வீரர்களுக்கும் ஏனைய அதிதிகளுக்கும் எம்பெருமான் கிருபைகள் கிடைத்திட வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் இந்த மாபெரும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடந்தேற வேண்டும் என உள்ளம் நிறைந்து ஆசிகளைத் தருகின்றேன்.

பொலிகண்டி பாரதி விள்ளையாட்டுக் கழகத்தையும் நான் நன்கு அறிவேன் இந்த மக்கள் எந்த ஒரு காரியத்தையும் மிகவும் நல்ல முறையில் செய்து முடிக்கும் வல்லமையுள்ளவர் என்பதை நேரில் கண்டறிந்திருக்கின்றேன். அவர்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப் போகும் திட்டங்கள் வெற்றிகரமாய் அமையும். ஆலயம் சம்பந்தமான கருமங்களிலும் மிகுந்த பற்றும் ஈடுபாடும் உள்ளவர்கள் எனவே இவர்கள் வெற்றிகளை மட்டும் பெற்றுக்கொள்வார்களாக!

மேன்மை கொள் சைவ நீதி -
விளங்குக உலகமெல்லாம்

என்றென்றும் நல்லாசிகளுடன்
**பிரம்மஸ்ரீ பே. ரகுராம் குருக்கள்**
**பொலிகண்டி வீரபத்திரர் தேவஸ்தானம்.**



### பாரதி கண்ட கனவு பலிக்கட்டும்

வட மாகாண இளைஞர்களின் முக்கிய விளையாட்டுக்களில் ஒன்றான உதைபந்தாட்ட போட்டியை மாவட்ட ரீதியாக இரண்டாவது தடவையாக வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகத்தின் சமூகப பணியை பாராட்டி வாழ்த்துரைப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

யாழ். மாவட்ட இளைஞர்களை நோக்கி அவர்களது ஒழுக்கம், சமூக சீரழிவு, குடிப்பழக்கம், போதைவஸ்து பாவனை என்ற வாறு சிங்கள பேரினவாதத்தால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டு வரும் இவ் வேளையில் இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களது பொழுது போக்கை விருத்தி செயது போட்டி மனப்பாங்கையும், வெற்றி தோல்வியை சகிக்கும் மனப்பாங்கையும், இளைஞர் மத்தியில் விதைக்கும் இது போன்ற நிகழ்வுகள் வரவேற்கப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் அதிக அளவு நடத்தப்படும் போட்டிகளில் மைதானம் முழு நேரமும் விறுவிறுப்பாகவும் மைதானத்தில் ஒரே நேரத்தில் அதிக அளவு வீரர்கள் விரைவாக விளையாடிக் கொண்டிருக்கும் விறுவிறுப்பான ஒரு தனித்துவம் மிக்க போட்டியே இதுவாகும். இதனால் இந்த போட்டிக்கு இரசிகர்களும் மிக அதிகம்.

பெரும்பாலான உதைபந்தாட்ட போட்டிகள் இறுதிச் சுற்று நெருங்கும் வேளையில் ஏதோ ஒரு காரணத்தை கொண்டு விளையாட்டு வீரர்களுக்கு இடையில் முரண்பாடு தொடங்கி அது இரசிகர்களுக்கும் ஊடுருவி சண்டைகளில் முடிவடைந்த பல சம்பவங்கள் எம் கண்முன் உள்ளது. இவ்வாறான ஒரு பொதுவான கண்ணோட்டம் உதைபந்தாட்ட போட்டிக்கு இருப்பினும் கடந்த வருடம் (2015) இந்த பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திய இந்த சுற்றுப்போட்டி உண்மை, நேர்மை என்பவற்றை பறைசாற்றக் கூடியவாறு பாரதியின் கனவு மெய்ப்பட எந்த வித அசம்பாவிதங்களும் இன்றி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இதன் ஏற்பாடும் மிகுந்த பாராட்டைப் பெற்றது என்பதை நான் நன்கறிவேன்.

இவ் வருடமும் யாழ். இளைஞர்களுக்கு முன்மாதிரியாக அமையக் கூடியவாறு பாரதியின் கனவு பலிக்க உண்மை, நேர்மை என்பவற்றை பறைசாற்றக் கூடிய இந்த பொலிகண்டி பாரதி விளையாட்டு கழகம் நடத்தி முடிக்க என் வாழ்த்துக் களையும், ஆசீர்வாதத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ ஈ.சரவணபவன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**யாழ், கிளிநொச்சி மாவட்டம்**



### யாவராலும் பாராட்டப் படவேண்டியது

உதைபந்தாட்டம் உடலினையும் உளத்தினையும் உரமூட்டி உற்சாகப்படுத்தும் ஒரு உன்னத விளையாட்டாகும். இத்தகைய ஒரு விளையாட்டினை வளர்த்தெடுக்கும் ஒரு முகமாக பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்துவது யாவராலும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். எனவே இவ் விளையாட்டுத் துறையில் ஈடுபடுகின்ற அனைத்து வீரர்களையும் வாழ்த்துவதுடன் இதனை சிறப்பாக ஒழுங்குபடுத்தி நடத்திக் கொண்டிருக்கின்ற பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்திற்கு எமது மனப்பூர்வமான நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச் சுற்றுப் போட்டியில் 50 இற்கு மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றியிருப்பது ஒரு சிறப்பான விடயமாகும். மேலும் இதன் மூலம் யாழ்மாவட்டத்தில் இருந்து சிறந்த வீரர்களையும் இனங்கண்டுள்ளதுடன் இவர்கள் தேசிய அணியில் விளையாடுவதற்கு சந்தர்ப்பமாக அமைவதுடன் இவ் விளையாட்டு சிறப்பாக நடத்துவதற்கு இறைவன் ஆசி வழங்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**இ.த.ஜெயசீலன் (பிரதேச செயலர்)**
**வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.**

### எனது நல்லாசிகள்

இளைஞர்களின் மனோநிலையை வெற்றி தோல்விகளில் சம உணர்வாக்கி மக்களின் ஒற்றுமையை நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் பாரதி விளையாட்டுக் கழகத்தினரை பாராட்டுவதோடு சமூக அபிவிருத்தியில் அவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்க எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க.தர்மலிங்கம்**
**வடமாகாணசபை உறுப்பினர்.**



### வாழ்க வளமுடன் வளர்க விருட்சமாய்

விளையாட்டை விளையாட்டாகவே கொண்டு விளையாடி வரும் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகத்தின் இச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

1959 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பாரதி சனசமூக நிலையத்தின் ஒரு கூறான பாரதி விளையாட்டுக் கழகம் சொந்த மைதானம் இன்றியே இவ்வூர் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டது. உறுப்பினர்களின் பெரும் முயற்சியின் காரணமாக தற்போதைய விளையாட்டு மைதானம் தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு 02.01.1999 இல் திறப்பு விழாவினை மிக சிறப்பாக கொண்டாடியது. பதினெட்டு வருடங்களில் துரித வளர்ச்சி கண்டு எமது மாகாணத்தின் சிறந்த விளையாட்டுக் கழகங்களில் ஒன்றாக திகழ்கிறது.

இரு வருடங்களாக யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியினை தொடர்ந்து நடத்தி இவ் வருடம் தனது 2 ஆவது சுற்றுப்போட்டியினை இனிதே நடத்தி பெருமையடைந்துள்ளது.


கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டுப் போன்ற ஐம்பெரும் துறைகளிலும் பாரதி சனசமூக நிலையம் ஒளி பாய்ச்சி நிற்கின்றது. இவ் வளர்ச்சிக்கு மூல காரணமாக உறுப்பினர்களின் ஒற்றுமை, விடாமுயற்சி, விட்டுக்கொடுப்பு, பொறுமையாக சிந்தித்து செயலாற்றும் பண்பு போன்றன அமைகின்றது.

சிறப்பாக, இவ் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் முதியோரைக் கனம் பண்ணு எனும் முது மொழிக்கிணங்க செயலாற்றி கழக வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகின்றனர்.

Failure are The Pillars Of Success எனும் பழமொழிக்கிணங்க வெற்றியையும் தோல்வியையும் சமனாக ஏற்றுக்கொள்ளும் பண்பும் தலைமைத்துவத்தை அதிகரித்துக் (Leader Ship Development) கொள்ளும் திறனும் ஒருங்கே அமையப்பெற்ற இவ் விளையாட்டுக் கழகமும் அதன் உறுப்பினர்களும் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக மிளிர்ந்து சமூகத்திற்கும் இனத்துக்கும் உன்னத வழிகாட்டிகளாக திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

வாழ்க வளமுடன் எழுக பலமுடன்

**திரு. வே. சிவயோகன்**
**மாகாண சபை உறுப்பினர்,**
**வடக்கு மாகாணம்.**



### எழுந்தும் வீழ்ந்தும் அனுபவம் பெற்றோம்

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் ஈழ மணித்திருநாட்டின் சிரசு என போற்றப்படும் உலகத்தமிழின் அடையாளமாய்த் திகழும் எமது யாழ்ப்பாணம் வடபால் அமைந்துள்ளது. இச் சிரசின் மூளை எனக் கொள்ளப்படுவது கோயில்கள், பனைவளமுடன் விவசாயம், மீன் வளமும் நிறைந்த மகிழ்ச்சியான மக்கள் வாழ்வைக் காணும் வடமராட்சி பிரதேசமாகும். இங்கே இந்து சமுத்திரம் தந்திடும் முத்துக்கள் யாவையும் ஏற்று மகிழ்ந்திடும் எமது பொலிகண்டி தெற்கு கிராமம் நாளொரு வண்ண மாய் பொலிவுபெற்று அழகாய் தெரிகிறது. தென் பொலிகையின் மூலவராய் இருந்து அருள்பாலிக்கும் வீரபத்திரர் ஆலயம் கண்ணுக்கு வண்ணமாய் உள்ளது.

275 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்டு பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் 55 வயதிற்கு மேல் வளர்ந்து நிற்கின்றது. நமது நாட்டின் அசாதாரண சூழலிற்கேற்ப நாமும் எழுந்தும், வீழ்ந்தும் அனுபவம் பெற்றோம். ஆயினும் இன்று தன்னம்பிக்கையுடன் மீண்டும் எழுந்து விட்டோம். சின்னஞ்சிறிய சாதனைகள் நமது கைவசமாகியும் உள்ளன. இந்த எழுச்சியின் ஒரு புள்ளியே நாம் இன்று மின்னொளியில் குதூகலித்து மகிழ்வுடன் கொண்டாடும் இரண்டாவது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகளாகும். எமது சிறந்த திட்டமிடல்களாலும் செயற்பாடுகளாலும் இப் போட்டிகள் சிறப்பாக நடைபெறும். மேலும் இப் போட்டியில் 50 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றி இவ் இறுதிப் போட்டியிலே பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் ,இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் இங்கு பங்கு பற்றிய அனைத்து கழகங்களிற்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவிப்பதோடு அனைவரையும் அன்புடன் அழைத்து வல்லமையுள்ள வீரப்பெருமானின் நல் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றோம்.

**செ.நிரோயன் (தலைவர்)**
**பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம்.**

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**பொலிகண்டி பாரதி சனசமூக நிலையம், பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம்**
**பொலிகண்டி பாரதி பாலர் பாடசாலை**
**பொலிகண்டி பாரதி வெளிநாட்டுக் கிளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES
## University of Jaffna, Sri Lanka

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts upto 18.10.2016

**Unit of Allied Health Sciences, Faculty of Medicine**

Temporary Demonstrator in Nursing / Pharmacy / Medical Laboratory Sciences

| Post | Salary scale |
|---|---|
| Temporary Demonstrator | Rs.21,370/= (fixed)p.m |

Perfected applications shall be sent to the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application Forms and other details may be obtained from the office of the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self addressed stamped envelope 23x10 cm in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order / Postal Order for Rs.100/= to the application form drawn in favour of the **Bursar,University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/ Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

Registrar,
University of Jaffna,
Sri Lanka.

(c/26467) (11.18)

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம், கச்சாய்வீதி, மருதடி லேனில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 6 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 704 9048

**தேவை**

கடைச்சல் வேலை (லேத் மெசின்) தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு: 077 889 2119

**காணி விற்பனைக்கு**

கச்சாய், சாவகச்சேரியில் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 858 3437

**PERSONAL CLASS**

கணிதம்
(தரம் 6 - 11 வரை)
சி.தீபன் B.Sc
077 920 8945

**விற்பனைக்கு**

சினைப்பசுக்களும், கன்று ஈன்று ஒரு மாதத்துக்குட்பட்ட பசுவும், கன்னிக் கன்றும் (1½) வயது விற்பனைக்குள்ளன.

077 617 6423

**காணி விற்பனைக்கு உண்டு**

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் விற்கப்படும்.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

**சிறுநீரகம் தேவை**

A+ குருதி வகையைச் சேர்ந்த 48 வயது ஆண் ஒருவருக்கு A அல்லது O வகை குருதியுடையவரின் சிறுநீரகம் தேவை.

077 4085 397, 077 006 5028


## விக்னேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற 'வடக்கைக் காப்போம், நாட்டைக் காப்போம்' ஊர்வலத்தின் முடிவில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஞானசார தேரர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நடத்திய ஊர்வலம் குறித்து கவலை தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளேன். விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதல்வராகத் தெரிவாக வேண்டும் என்று நாம் நினைத்திருந்தோம். காரணம், அவர் கொழும்பில் நீண்ட காலம் வாழ்ந்தவர், தென்னிலங்கையில் பல பகுதிகளில் தொழில் புரிந்தவர், சிங்கள மக்களுடன் நெருங்கிப் பழகியவர் என்ற ரீதியில் இன, மத, மொழி பேதங்கள் பாராட்டாது செயற்படுவார் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம்.

கொழும்பில் இருந்து வடக்குக்கு வந்த அவர், வடக்கு சகோதர தமிழ் மக்களிடம் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுகின்றார். நாங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. அவர்களுடைய உடலில் ஓடும் இரத்தம்தான் எங்களது உடலிலும் ஓடுகின்றது. ஆனால் தமது அரசியல் இலாபம் கருதி இனவாதத்தை தூண்டி தமது அரசியல் இருப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். இவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களை தூண்டி தவறான கருத்துக்களை வளர்க்கின்றனர்.

கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பயந்து அவர்களுடைய நடவடிக்கைகள் பிடிக்காத தமிழ் மக்கள் தெற்கில் வந்து குடியமர்ந்தார்கள். இதன் போது தெற்கில் உள்ள எந்த ஒரு சிங்கள அமைப்புக்களும் அந்த மக்களை எதிர்க்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடந்து கொண்டதில்லை. அந்த மக்களுடன் சகோதரத்துவத்துடனேயே பழகினர். இப்போது இங்கு சிங்கள மக்கள் குடியேறுவதற்கு விக்னேஸ்வரன் எதிர்க்கின்றார். விக்னேஸ்வரனது இந்த நிலைப்பாடு எதிர்காலத்தில் நாட்டுக்குப் பெரியளவில் ஆபத்தை ஏற்படுத்தும். நாங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் விக்னேஸ்வரனுக்கு எதி ராக வழக்கு தொடருமாறு கேட்டுகொள்கின்றோம். அத்தோடு சிங்கள மக்களுக்கு ஒரு நீதி, தமிழ் மக்களுக்கு என்று ஒரு நீதி இல்லாது விக்னேஸ்வரனை முதல்வர் பதவியில் இருந்து நீக்கி சரியான நீதியை அரசு கடைப்பிடிக்க வேண் டும். இவ்வாறான இனவாதங்களை வளர்த்து பதவிகளை பெற்றுக் கொள்வது பௌத்த ஆகமத்துக்கு முரணானவிடயமாகும் - என்றார். (வ-5-21)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், துரையப்பா லேன், ஈச்சமோட்டை வீதி, 27/2ஆம் இலக்கத்தில் உள்ள நிலப்பரப்பு 2 குளி 0.25 உம் வீடும் விற்பனைக்குண்டு.

077 022 9762




இந்த வாரம் புதுவிதியில்...

- திடீர் போராளியான வடக்கு முதல்வர்!
- முடிவுறாக் காத்திருப்பு கையில் புகைப்படங்களோடு குரலற்ற கண்ணகிகள்
- எமுக தமிழால் என்ன பயன்?

குட்டீஸ்களுக்கு பரிசுப் பொதிகளை வெல்லும் வாய்ப்பு!

விலை - 20/= மட்டுமே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு விடயத்தில் முப்படையும் அவதானம்

## மகாநாயக்கர்களிடம் கூறினார் இலங்கை விமானப்படைத் தளபதி

கொழும்பு, ஒக். 1

போர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இலங்கை இராணுவத்தின் முப்படைகளும், தமது கடமையைச் சரியாகத் தொடர்ந்தும் நிறைவேற்றி வருவதாகத் தெரிவித்த விமானப்படைத் தளபதி எயார் மார்சல் கபில ஜயம்பதி, இலங்கைப் பாதுகாப்பு விடயத்தில் அவதானமாக இருப்பதாகவும் கூறினார்.

கண்டிக்கு, நேற்று முன் தினம் பயணம் மேற்கொண்ட, விமானப் படைத்தளபதி ஸ்ரீ தலதா மாளிகை, மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடத்துக்கு பயணம் மேற்கொண்டதுடன், மஹாநாயக்க தேரர்களிடம் நல்லாசியும் பெற்றுக்கொண்டார். இதன்பின்பு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

உலகிலுள்ள பல நாடுகளில் போர் இல்லாதபோதிலும், அங்கு பாதுகாப்பு விடயங்கள் மிகத் துல்லியமாக உள்ளன. இலங்கையும் அவ்வாறே பாதுகாப்பு விடயத்தில் மிக விழிப்பாக இருந்து வருகின்றது.

பொதுமக்களின் உயிருடைமை, பொதுச் சொத்து, தேசிய பாதுகாப்பு போன்ற விடயங்களில் தமது கடமையைச் செய்வதில் பாதுகாப்புத் தரப்பினர் கண்ணும் கருத்துமாக உள்ளனர். அது எமது தலையாய கடமை.

விமானப்படை அதிகாரிகளது குடும்ப நலன்கள் மற்றும் ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரிகளது சேம நலன்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (த)

# உதயங்க மீது பிடியாணை பிறப்பிக்க நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு, ஒக். 1

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவைக் கைது செய்யப் பிடியாணை பிறப்பிப்பதற்கு நீதிமன்றம் மறுத்துள்ளது.

மிக் விமானக் கொள்வனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்காக அவரிடம் வாக்கு மூலம் பெறவேண்டும் என பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்திடம் கோரினர்.

ஆகையால் வெளிநாட்டில் தங்கியிருக்கும் அவரைக் கைது செய்ய பன்னாட்டுப் பொலிஸார் மூலம் பிடியாணை பிறப்பிக்கவேண்டும் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும் உதயங்க வீரதுங்க இதுவரை சந்தேக நபராக பெயரிடப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய கோட்டை நீதிவான் லங்கா ஜெயரத்ன, அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்க முடியாது எனவும் கூறினார். (த)

# வறட்சிக் காலநிலையால் மின்சார உற்பத்தி பாதிப்பு

கொழும்பு, ஒக். 1

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையால் மின்சார உற்பத்தி நூற்றுக்கு 15 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக நாட்டில் மின்சார உற்பத்தி குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் சுலக்சனா தெரிவித்தார், மின்சாரத்தைச் சேமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தொடரும் வறட்சியான காலநிலையினால் ஒரு இலட்சம் ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள வயல்நிலங்களே வறட்சியினால் அதிகம் பாதிப்படைந்துள்ளதாக கமநல அபிவிருத்தித்திணைக்கள ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க குறிப்பிட்டார்.

இதுதவிர மேலதிக பயிர்ச் செய்கைகள் பலவற்றுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டுள்ள வயல் நிலங்களுக்காக இழப்பீடு வழங்குவது தொடர்பில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வயல்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள குளங்களினால் 60 வீதமான செய்கைகளுக்காக நீரை விநியோகிக்க முடியாதவாறு, அவற்றின் நீர் மட்டம் வற்றியுள்ளதாகவும் அந்தத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (த)

# கடலில் மூழ்கி ஒருவர் சாவு

திருமலை, ஒக். 1

திருகோணமலை, திருக்கடலூர் பகுதியில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

தமது வீட்டுக்குப் பின்புறமாகவுள்ள கடலில் குளிக்கச் சென்றபோதே இந்த நபர் நேற்று முன் தினம் மாலை நீரில் மூழ்கினார்.

கடலில் மூழ்கியவரை மீட்டுத் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்த்த பின்னர் அவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த 63 வயதான ஒருவரே கடலில் மூழ்கியுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த)


## பத்தொன்பதாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 1923 . 01 . 17



உதிர்வு 1997 . 10 . 06

### அமரர் நமசிவாயம் நடராசா

திதி: பிரதமை (01.10.2016)

அன்பின் திருவுருவமே ! பண்பின் உறைவிடமே !
எங்களுக்கெல்லாம் அன்புகாட்டி அரவணைத்த
எங்கள் அன்புத் தெய்வம் ஐயாவே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து பத்தொன்பது – ஆண்டுகள் அல்ல

எத்தனைதான் ஆண்டுகள் சென்றாலும் – உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் அகலாதையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். (J 4992) (14,17,18)

ஐயனார் கோயிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 07 . 11 . 1940



மறைவு 02 . 09 . 2016

### அமரர் துரைச்சாமி இரத்தினம்

யாழ். கரவெட்டி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி இரத்தினம் 02.09.2016 அன்று சிவபதமடைந்த செய்தியறிந்து அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மதிப்பார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் பெருந்திரளாக வந்து எமது தந்தைக்கு அனுதாபம் தெரிவித்த அன்பானவர்களின் முகங்களும், முகவரிகளும் தவறவிடப்பட்டிருப்பின் மன்னித்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நாளை (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்திரம்மன் கோயிலடி,
துன்னாலை,
கரவெட்டி.

குடும்பத்தினர்,
இ.நக்கீரன்
077 735 2008

## முதலாம் ஆண்டு திவச ஆத்மசாந்தி அழைப்பு



கடந்த 13.10.2015 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் முத்துப்பிள்ளை (முத்தாச்சி) இலட்சுமணன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த முதலாம் ஆண்டு ஆத்மசாந்தி திவசக் கிரியைகள் இன்று (01.10.2016) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்திரகாளி கோயிலடி,
நாவடி தெற்கு, கொக்குவில். (ஜே/4993)(11,18,)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### செல்லையா (சூசை) நடராசா

(நயினாதீவு -7)



நயினாதீவு .7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா 28.09.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பார்வதி தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கச்சியம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சிவக்கொழுந்துவின் பாசமிகு கணவரும் மீனாம்பிகை, தனலெட்சுமி, இராசம்மா காலஞ்சென்ற நாகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கமலாம்பாள் மற்றும் சாம்பசிவம், சிவப்பிரகாசம், சிவபாக்கியம் ஆகியோரின் அருமை மைத்துனரும் கோகுலன் (தபாலகம் - நயினாதீவு), கண்ணதாசன்(பிரான்ஸ்), கேதீஸ்வரன்(இத்தாலி), வசந்தன் (வர்த்தகர் - யாழ்ப்பாணம்), சுகந்தன் (இலங்கைவங்கி - நயினாதீவு), பார்த்தீபன்(கொழும்பு), நிவேதிகா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வினோதினி, வதனி, நகுலேஸ்வரி, பாலரோகினி, தனுஷியா, உதயசந்திரிகா, சதீஸ்குமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் டிலக்ஸன், கிசாளினி, சத்யாஜினி, கௌசல்யன், லவநிசா, ஜோனர்தன், பிரேசிலா, கிஷாந், மதுனிகா, கம்சா, ஹாவித்யன், ஹர்ஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், செல்லையா, நவரெத்தினம் மற்றும் அன்னலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான நவரெத்தினம், இராசபூரணி மற்றும் விஜயகுமாரி, சோமசுந்தரம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2016)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**021 568 2063/ 077 796 6775**


## வெளிநாட்டு வேலைக்கு ஆங்கிலம் கட்டாயம்

கொழும்பு, ஒக் 1

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு முதல், வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் அனைவரும், கட்டாயமாக ஆங்கில மொழி அறிந்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையை நடைமுறைப்படுத்த எதிர் பார்ப்பதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். (கு)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ஆறுப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - டச்சு வீதி, அளவெட்டி)



இளவாலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஆறுப்பிள்ளை நேற்று (30.09.2016) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமு - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி செல்லம்மா (சீதேவன் - ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின்அன்புக் கணவரும் காலஞ்சென்ற குகாநந்தன்(பட்டயப் பொறியியலாளர், லங்கா சிமெந்து நிறுவனம்), மற்றும் இளங்கோ(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி.சுலோசனா, திருமதி.கலையரசி(ஆசிரியை- அளவெட்டி அருணாசலம் வித்தி.) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வன்.கு.நிருஜன்(மருத்துவபீட இறுதி வருட மாணவன், கொழும்பு பல்கலைக்கழகம்) அவர்களின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி.க. செல்லமுத்து, கந்தையா(ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின்அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான தா.சரவணமுத்து(ஓய்வுபெற்ற இறைவரி விசேட ஆணையாளர், மலேசியா), திருமதி ஆறுமுகம் நாகம்மா மற்றும் திருமதி வீரசிங்கம் சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி திருநாவுக்கரசு பரமேஸ்வரி அவர்களின் அன்புத் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சுவீதி,
அளவெட்டி.**

**தகவல்:
ஆ.இளங்கோ (மகன்)**

**021 224 1040/ 077 618 3200**



# மரண அறிவித்தல்

## திருமதி எலிசபேத் சவரிமுத்து

(இல.08, இராசாவின்தோட்ட லேன், யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், இராசாவின் தோட்ட லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் சவரிமுத்து 26.09.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - றோசாம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை - ஆனாப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளை சவரிமுத்துவின் அன்பு மனைவியும், றோஸ்மேரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), ஜோஜ் வெலிங்டன் (ஓய்வுபெற்ற லக்ஸபான தோட்ட நிர்வாக அதிகாரி), காலஞ்சென்ற மேரி சொபியா ( வைத்திய கலாநிதி) மற்றும் மனோகரன் (பிரான்ஸ்),றோஸ்வினிபிரட் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற றஞ்சன் மற்றும் றஞ்சினி (பிரான்ஸ்) றாகினி (லண்டன்), சாந்தி (பிரான்ஸ்), றாஜி (லண்டன்), காலஞ்சென்ற கொண்சி மற்றும் யூலி (பிரான்ஸ்), பொபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும், ராதா (சென் ஜோசப் ஆரம்பப்பிரிவு அதிபர் மஸ்கேலியா), காலஞ்சென்ற விஸ்வலிங்கம் (வைத்திய கலாநிதி) மற்றும் யமுனா (வவுனியா), பாலகாந்தன் (ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் B.O.C & R.D.B), அன்ரோனியா, சாள்ஸ், எமில்டன், காலஞ்சென்றவர்களான நேசராஜ், சிறீ மற்றும் லோகா, நந்தன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான இம்மானுவேல், சூசைப்பிள்ளை, யேசுதாசன், பாலசிங்கம், றெஜினா மற்றும் அன்ரன், ஞானமலர் ஆகியோரின் அன்புச் சிறியதாயும், சங்கர், விஜி, ஷியாமி, நிமலன், ஜனனி, யூடி (ஆசிரியை சென். பீற்றர்ஸ் கல்லூரி), ரமேஸ் (கிறிஸ்லஸ் பாம் தோட்ட அதிகாரி கொட்டகல), சர்மிலி, அசோக், ஜோய்ப்பிங்ரன் (வைத்தியர் - தேசிய வைத்தியசாலை - கொழும்பு), சுஜி, றியாத், கென்லி, (B)பில்லி, யூட், றூபி, ஜட்ஜ், லூடி, டான்ரி, டுலால், நிஷாந்தி, டிலான், ஸ்ரைபனி, சோந்திரன் (F)பளன், வெண்டி, ஜேஷன், பிறையன், கற்தி, பிரெண்டா, மைக், ஹரி, இலிங், எலிசா ஆகியோரின் பேர்த்தியும், மைசா, ஹஷேன், ஹர்ஸதா, பீற்றர், (F)பெயித், அல்வினா, (T)ரானியா, டெமிஷிலோ ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 03.10.2016 திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.8, இராசாவின் தோட்ட லேன்,
யாழ்ப்பாணம்.**

(ஜே.5001) (13.18.17)

**தகவல்:
குடும்பத்தினர்.**

**மலர்வு
06.07.1926**

**உதிர்வு
26.09.2016**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 50 வீத மானிய விலையில் விதை உருளைக் கிழங்கு

## யாழ். விவசாயிகளுக்கு கிடைக்கும்

அச்சுவேலி, ஒக். 1

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இந்த வருடம் 50 வீத மானிய விலையில் விதை உருளைக் கிழங்கு வழங்கப்படவுள்ளது.

விவசாயி ஒருவருக்கு நான்கு அந்தர் விதை உருளைக்கிழங்கு மானிய விலையில் வழங்கப்படும். அதற்கு விவசாயிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின் றது.

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விதை உருளைக் கிழங்கின் அதிகரித்த விலை பெரும் நெருக்கடியாக இருந்து வருகின்றது. கடந்த வருடம் விவசாயிகள் 50 கிலோ நிறை கொண்ட விதை உருளைக் கிழங்கை 13 ஆயிரத்து 600 ரூபா விலை கொடுத்துக் கொள்வனவு செய்து நடுகை செய்தனர்.

கடந்த வருடமும் விதை கிழங்குக்கு மானிய உதவி வழங்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டபோதிலும் வழங்கப்படவில்லை. இந்த வருடம் மானிய விலையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அதிகாரிகள் தரப்பினால் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகக்கூடியது நான்கு அந்தர் கிழங்கு மானிய விலையில் வழங்கப்படும். மா னிய விலை விதை உருளைக் கிழங்குக்கு 50 வீதமான தொகையை விவசாயிகள் செலுத்தவேண்டும். மிகுதித் தொகை மானிய உதவியாக அரசு செலுத்தும். இதற்கு மேலதிகமான விதை உருளைக் கிழங்கை விவசாயிகள் முழுத் தொகையையும் செலுத்தியே வாங்கவேண்டும்.

மானியவிதைஉருளைக்கிழங்கு வாங்குவதற்காக விவசாயிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை விவசாயத் திணைக்களஅதிகாரிகளினால்மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (த-5-11)

# மருத்துவமனை விடுதியில் தாதி-பொதுமகன் கைகலப்பு

## கடும் வார்த்தையாடல்களை அடுத்து

யாழ்ப்பாணம், ஒக். 1

கடுமையான வார்த்தைப் பிரயோகம் தாதியையும் மற்றொருவரையும் கைகலப்பில் ஈடுபட வைத்ததோடு, அது பொலிஸ் நிலையம்வரை சென்று ஒருவர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

தெல்லிப்பழை வைத்தியசாலையில் முதியவர் ஒருவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவர் பொது மருத்துவ விடுதியில் முதலில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்குப் புற்றுநோய் இருந்ததால் அவருக்குக் கதிர்வீச்சுப் பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டது. அது பற்றிய விளக்கங்களை வழங்குவதற்காக வைத்தியசாலைக்கு உடனடியாக வருமாறு அந்த முதியவரின் மகனுக்குக் குறித்த பிரிவிலிருந்து அலைபேசியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் மகன் அவசர அவசரமாக வைத்தியசாலையின் பொது மருத்துவ விடுதிக்கு ஓடியுள்ளார். ஆனால் அவர் சென்றிருந்த நேரம் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் அல்ல.

அவர் திடீரெனப் பொதுமருத்துவ விடுதிக்குள் நுழைந்து தந்தையைத் தேட முற்பட்டுள்ளார். அதேநேரம் திடீரெனப் பொது மருத்துவ விடுதிக்குள் ஒருவர் நுழைந்ததை அவதானித்த அங்கு நின்றிருந்த தாதிய உத்தியோகத்தர் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளார். இதன்போது இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது பின்னர் கடுமையான வார்த்தைப் பிரயோகமாக மாறியுள்ளது. இதனால் இருவரும் கைகலப்பில் ஈடுபடுமளவுக்கு நிலமை மோசமாகியது. பின்னர் இருவரும் விலக்கிவிடப்பட்டனர்.

விடுதிக்குள் நுழைந்தவருக்கு ஏற்கனவே வைத்தியசாலையிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்ட விடயம் தாதிய உத்தியோகத்தருக்குத் தெரிந்திருக்கவில்லை. தந்தையார் விடுதி மாற்றப்பட்டமை மகனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அதனால் இந்த முரண்பாடு இடம்பெற்றபோதும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியதனாலேயே கைகலப்பு ஏற்படுமளவுக்கு நிலமை சென்றிருந்தது. கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் அவசியமற்றவை. அதை யாவரும் முதலில் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

முரண்பாட்டின் பின்னர் தாதிய உத்தியோகத்தர் தெல்லிப்பழைப் பொலிஸில் முறையிட்டிருந்தார். இதனால் வைத்தியசாலைக்குள் நுழைந்தவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எனினும் வைத்தியசாலை மட்டத்தில் தாதிய உத்தியோகத்தர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் தற்காலிகமாக வேறு பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு விசாரணை அறிக்கை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (த-4)

# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், ஒக்.1

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப் பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

யாழ். பிரதேசத்தில் கரணவாய், இலகாமம், நாவலர் மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி, சாமியன் அரசடி, விக்னேஸ்வரா, சம்பந்தர்கடை, கிழவி தோட்டம் , காளிகோயிலடி, யார்க்கரு, கலிகை, அரசடி, வலிக்கந்தோட்டம், துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திரம்மன் கோயிலடி, காளிகோயிலடி வதிரி, இரும்பு மதவடி,சக்களாவத்தை, தேவரையாளி, மனோகரா, திக்கம், திக்கம் சித்தி விநாயகர், முடக்காடு, மாலுசந்தி, அல்வாய், அல்வாய் பாரதிதாசன், முத்துமாரி அம்மன் கோயிலடி, நாவலடி அல்வாய், அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரி மூலை, இன்பர்சிட்டி பிள்ளையார் கோயிலடி,இன்பர்சிட்டி,இலகடி, அல்வாய் காந்தியூர், மந்திகை,கப்பூது, தெல்லிப்பழை, மாதனை, பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை, கரவெட்டி இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், நெல்லியடி கார்கில்ஸ் (சிலோன்) பிஎல்சி, சுப்பர்மடம் மரின் வெல்த் ஐஸ் தொழிற்சாலை, நெல்லியடி இலங்கை வங்கி, நெல்லியடி றூபின்ஸ் தனியார் வைத்தியசாலை,

கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஆனந்தபுரம் , உதயநகர், தொண்டமான்நகர், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம்,கனகாம்பிகைக் குளம், இரணைமடு, முறிகண்டி, அறிவியல்நகர், கொக்காவில், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரெட், மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், மாஸ் அக்டிவ், யுனிச்செலா பொறியியல் பீடம், விவசாயபீடம், நோர்த் கார்கில்ஸ் அக்றோ பூட், இராணுவபாசறை I மற்றும் II, இராணுவ பாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை,

வவுனியாப் பிரதேசத்தில் 1ஆம் குறுக்குத்தெரு, 2ஆம் குறுக்குத்தெரு, மில் வீதி,கந்தசாமி கோயில் வீதி, பெரியார்குளம் (பூந்தோட்டம்) ஓவியா விடுதி, நேரியகுளத்திலிருந்து செட்டி குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (த-ரி)





# யாழ்ப்பாணத்தில் நேற்று கலாசார விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 1

"எனினும் நாம் பறப்போம்" என்னும் தொனிப் பொருளில், சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கலாசார விழா யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது. இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று ஆரம்பமான நிகழ்வு, தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

தமிழ் கலாசார இசை நிகழ்வுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன், திரைப்பட இயக்குநரும் நடிகருமான கேசவராஜன் கேதாரநாதன், தென்பகுதியில் இருந்து வருகை தந்த சமூக ஆர்வலர்கள், சமய குருமார்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கலாசார விழாவில் தமிழிலும், சிங்களத்திலும் வெளிவந்த திரைப்படங்கள், குறுந்திரைப் படங்கள் திரையிடப்படுவதுடன். அவன்த ஆடிகலவால் கடந்த காலங்களில் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எதிராக வரையப்பட்ட கருத்துச் சித்திரங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கறுப்பு ஜூலையின் பின்பு என்ற தொனிப் பொருளிலான ஓவியக் கண்காட்சி மற்றும் நயன ஹாரி அபேநாயக்க, லால் ஹாகொட ஆகியோரின் ஒளிப்படங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கண்காட்சி முற்பகல் 10மணியிலிருந்து மாலை 6 மணிவரை நடைபெறும் என்பதை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-5-ரி7)

## வீதி விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 1

வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு [illegible] சமூக நிலையங்கள், சந்திகள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களுக்கு வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-5-108)

# டெங்கு ஒழிப்பு செயற்பாடு தென்மராட்சியில் தீவிரம்

## 6 பேருக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி ஒக்.1

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் வரை எழுதுமட்டுவாழ், வரணி, மட்டுவில் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தரிசிப்புகளில் வரணியில் ஒருவருக்கும் சரசாலைப் பகுதியில் மூவருக்கும் சங்கத்தானைப் பகுதியில் இருவருக்குமென ஆறு பேருக்கு எதிராக டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய நிலையில் குடியிருப்புகளை வைத்திருந்தனர் எனக் குற்றஞ்சாட்டி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அத்துடன் 200க்கு மேற்பட்ட குடியிருப்பாளர்களுக்கு இரு வாரகாலத்தினுள் காணிகளைத் துப்புரவு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தினமும் தரிசிப்புகளில் கலந்து கொள்ளும் அலுவலர்களுக்கு, டெங்குப் பரிசோதனை முறைகள் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படுவதாகவும், அதன் பின்னரே அவர்கள் பரிசோதனைக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ. சைக்கிளினுள் சிக்கிய பறவை 2 நாள்களின் பின் உயிருடன் மீட்பு



வவுனியா, ஒக். 1
மோட்டார் சைக்கிள் ஒன்றினுள் அகப்பட்டிருந்த பறவை இரண்டு நாள்களின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா புளியங்குளம் பகுதியிலிருந்து நகருக்கு வேலைக்குச் செல்லும் பெண் உத்தியோகத்தர் கடந்த புதன்கிழமை காலை மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, நொச்சிமோட்டை பாலத்தை அண்மித்த பகுதியில் பறவையொன்று மோட்டார் சைக்கிளில் அடிபட்டது.

மோதிய பறவை பறந்து சென்றுவிட்டதாகக் கருதிய உத்தியோகத்தர் தனது பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

மறுநாளும் வேலைக்குச் சென்று திருப்பிய அவர் பல்வேறு இடங்களுக்கும் சென்றுள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை காலை மோட்டார் சைக்கிளைக் கழுவும்போது பறவையின் முனகல் சத்தம் கேட்டுள்ளது. அப்போதுதான் மோட்டார் சைக்கிளின் முன் பகுதியில் பறவை மறைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவர் பறவையை பத்திரமாக மீட்டு அதனைப் பறக்கவிட்டுள்ளார். (த-5-402)

# வடக்கில் வீதி விபத்துகளால் 3 ஆண்டுகளில் 512 பேர் சாவு

## சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வில் வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்



வவுனியா, ஒக். 1
வடக்கில் கடந்த மூன்றாண்டுகளில் வீதி விபத்துக்களினால் 512 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் நடப்பு ஆண்டில் வன்னிப் பிராந்தியத்தில் 36 பேர் விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர் என வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

சாரதிகளுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் கடந்த மூன்றாண்டுகளில் மாத்திரம் 512 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர். 2013 ஆம் ஆண்டு 163 பேரும், 2014 ஆம் ஆண்டு 153 பேரும், 2015 ஆம் ஆண்டு 196 பேரும் வீதி விபத்துக்களால் வீணாகச் சாவடைந்துள்ளனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் வீதி விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. நடப்பு ஆண்டில், வவுனியாவில் 17 பேரும், மன்னாரில் 19 பேரும் வீதி விபத்துக்களால் சாவடைந்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களால் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகளவிலானோர் உயிரிழந்தனர். 2014 ஆம் ஆண்டு உங்களுக்கு அருகிலுள்ள அநுராதபுரத்திலேயே அதிகளவிலானோர் சாவடைந்தனர். இந்த ஆண்டு உங்களுக்கு அருகில் வீதி விபத்து வந்து விடக் கூடாது என்ற காரணத்தினால்தான் இந்தக் கூட்டத்தை நடத்துகின்றோம்.

வீதி விபத்துக்களில் அதிகளவில் மோட்டார் சைக்கிள்களே சிக்கியுள்ளன. வவுனியாவில் 14 மோட்டார் சைக்கிள்களும், மன்னாரில் 7 மோட்டார் சைக்கிள்களும் விபத்தில் சிக்கியுள்ளன. இரண்டாவதாக முச்சக்கரவண்டிகளே அதிகளவில் விபத்தில் சிக்கியுள்ளன. வவுனியாவில் 8 முச்சக்கர வண்டிகளும், மன்னாரில் 6 முச்சக்கர வண்டிகளும் இந்த ஆண்டு விபத்துக்களில் சிக்கியுள்ளன.

வீதி விபத்து உயிரிழப்புக்களில் 25 சதவீதமானவை, மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளால் ஏற்படுபவையாகவே இந்த ஆண்டு இருக்கின்றன.

வவுனியாவில் காலை 8 மணியிலிருந்து 9 மணி வரையான நேர இடைவெளியில் 16 விபத்துக்கள் இந்த ஆண்டு நடந்துள்ளன. பி.ப. 3 மணியிலிருந்து மாலை 4 மணி வரையான காலத்தில் 17 விபத்துக்களும், மாலை 4 மணியிலிருந்து மாலை 5 மணி வரையான நேர இடைவெளியில் 11 விபத்துக்களும், மாலை 5 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலான காலத்தில் 12 விபத்துக்களும், இரவு 7 மணியிலிருந்து இரவு 8 மணி வரையிலான நேர இடைவெளியில் 15 விபத்துக்களும் நடைபெற்றுள்ளன. இந்த நேர இடைவெளிகளிலேயே அதிகளவான விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அவதானமின்றி வாகனத்தைச் செலுத்துதல், முறையான பயிற்சிகள் இல்லாமல் வாகனத்தைச் செலுத்துதல், மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துதல், நித்திரையை முறித்து வாகனத்தைச் செலுத்துதல், அலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனத்தைச் செலுத்துதல் என்பன வீதி விபத்துக்குப் பிரதான காரணமாகின்றன.

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் சாகல ரட்ணாயக்கா யாழ். மாவட்டச் செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இறுக்கமான உத்தரவைப் பிறப்பித்திருந்தார். இதற்கமைய பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில், வீதி விபத்துத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம் - என்றார்.

இந்த நிகழ்வில் விபத்துத் தொடர்பான காணொலிகளும் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் துவிச்சக்கர வண்டிகளுக்கு இரவில் வெளிச்சம் தெரிவதற்கு ஸ்ரிக்கர்களும் இந்த நிகழ்வில் வைத்து ஒட்டப்பட்டன. (த-5)

# நந்திக் கடலில் கூட்டு வலை 12 மீனவர்களுக்குத் தண்டம்

முல்லைத்தீவு, ஒக். 1
நந்திக் கடலேரியில் தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளைப் பயன்படுத்திச் சட்டவிரோதமான முறையில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை மன்றில் முற்படுத்தியபோது குற்றத்தை ஏற்றுக் கொண்டமையைத் தொடர்ந்து நீதிவான் இவர்களுக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளார்.

முல்லை மாவட்டம் நந்திக் கடலேரியில் தடை செய்யப்பட்ட கூட்டு வலைகளைப் பயன் படுத்திச் சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்தொழிலில் ஈடுபடுவதாக முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து கடந்த புதன்கிழமை அதிகாலை அந்தப் பகுதிக்கு உதவிப் பணிப்பாளர் தலைமையில் விரைந்து சென்ற அதிகாரிகள் தேடுதல் நடத்திய போது 12 மீனவர்கள் அகப்பட்டுக்கொண்டனர்.

வலைகளைக் கைப்பற்றிய அதிகாரிகள் 12 மீனவர்களையும் கைது செய்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது, அவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்களுக்கு ஒரு லட்சத்து 15ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (த-5-115)

# ஆசிரியர்களின் சுய கோவைக் குறைபாடே பதவியுயர்வு தாமதத்துக்குக் காரணம்

## வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
கல்வி வலயங்களில் ஆசிரியர்களின் சுயகோவைகளில் உள்ள குறைபாடுகளாலேயே ஆசிரியர்களின் பதவியுயர்வுகளைச் சீர்செய்ய முடியாதுள்ளது. அவ்வாறு சீர் செய்யப்படாத ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சிடம் உள்ளன. உரிய ஆவணங்களை முன் வைத்துக் கோவையை முழுமைப்படுத்த அத் தகைய ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குங்கள்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் கேட்டுள்ளார் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன்.

வடக்கு மாகாணத்தின் கல்வி வீழ்ச்சி, அதற்கான காரணங்கள் தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், வடக்கு மாகாணத்தின் பிராந்திய செயலாளர்கள் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனையும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரையும் சந்தித்துக் கலந்துரையாடினர். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன் போதே வடக்குக் கல்வி அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரி வித்ததாவது:

கல்வி வீழ்ச்சிக்கான காரணத்தை தனியே அதிபர்கள், ஆசிரியர்கள் மீது சுமத்துவதை ஆசிரியர் சங்கம் ஏற்றுக் கொள்ளாது. வீழ்ச்சிக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு குறைபாடுகளே முழுக் காரணம். குறிப்பாக மாணவர்களிடையே பெருகி வரும் போதைப் பாவனை, கலாசாரப் பிறழ்வுகள் என[illegible] மாகாணத்தில் [illegible] நியமனங்கள், பதவியுயர்வுகள் என்பனவும் காரணம் என எடுத்துக் கூறப்பட்டது.

அதிபர்கள் ஆசிரியர்களின் நியமனங்களில் முறையற்ற தன்மைகள் நிலவுவதும், அதனால் பலர் விரக்திநிலை அடைந்துள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள், சம்பள நிலுவைகள் இதுவரை வழங்கப்படாதுள்ளன. ஆசிரியர்களுக்கு அதிகமான செயலமர்வுகளால் தனியொரு ஆசிரியரின் ஆளுமை வெகுவாக பாதிக்கப்படுவதோடு மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்க முடியாதுள்ளது.

அரசியல் தலையீடுகள் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மாணவர்களின் கல்வியில் கடும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அது எதிர் காலத்தில் தமிழ் இனத்தின் கல்வியை கேள்விக்குறியாக்கும். [illegible] காலங்களில் வடக்கு மாகா[illegible] கல்வி வளர்ச்சிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உறுதுணையாக இருக்கும். அதற்காகப் பல பணிகளை சங்கம் முன்னெடுத்து வருகிறது என்று சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

"கல்வியில் கடும் பின்னடைவு ஏற்பட்டதனை ஏற்றுக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவைகளுக்கு போதிய பணம் இல்லை. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். மாகாணத்துக்கு வழங்கப்படுகின்ற நிதியில் வேதனம் உள்ளிட்டவற்றை வழங்குவதற்குக்கூட மிகவும் கடினமான நிலை உள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்களின் கடமைப் பணிகளில் மாற்றம் தேவை. புதிய உலகமயமாக்கலுக்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். 21ஆம் நூற்றாண்டில் மாணவர்களின் எதிர்பார்ப்புகள் வித்தியாசமானவை. அவற்றைத் தகுந்த முறையில் நாம் நிறைவேற்ற வேண்டும்" என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவித்தார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கு திறப்பு விழாவும் பரிசில் தினமும்

தென்மராட்சி, ஒக். 1
கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் அமைக்கப்பட்ட செல்வநாயகதேவி அரங்கு திறப்பு விழாவும் பாடசாலை பரிசில் நாள் விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு புதிய அரங்கில் இடம் பெறும்.

பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை வங்கியாளர் க.விக்னேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக க.மகிந்தன், பழைய மாணவி திருமதி கஜேந்தினி மகிந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (த-9)

## நடமாடும் வரி அறவீட்டுச் சேவை

சாவகச்சேரி, ஒக். 1
உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு வரிகள் அறவீட்டுத் திட்டத்தின் கீழ் சபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் சாவகச்சேரி நகரசபையினர் நடமாடும்சேவையைநடத்தவுள்ளனர். மாதத்தின் பிரதி திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் வட்டார ரீதியாக நடமாடும் சேவைகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சபையின் ஒன்பதாம் வட்டார வரியிறுப்பாளர்களுக்கு எதிர்வரும் மூன்றாம் திகதி திங்கட்கிழமை மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திலும், எட்டாம் மற்றும் பதினோராம் வட்டார வரியிறுப்பாளர்களுக்கு எதிர்வரும் ஐந்தாம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஶ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்திலும் நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

ஆதன வரி வியாபார வர்த்தக உரிமக் கட்டணங்கள், சைக்கிள் இலக்கத் தகடுகள் போன்றவைகளுக்குக் கட்டணங்களை நடமாடும் சேவையில் செலுத்த முடியுமென நகரசபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார். (த-9)

## பரிசில் நாள் நிகழ்வு

தென்மராட்சி, ஒக். 1
மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மு.ப. 8.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் இடம்பெறும்

வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசாவும், கௌரவ விருந்தினர்களாக ஹற்றன் நஷனல் வங்கியின் கிளிநொச்சி மாவட்ட திட்ட நிறைவேற்று அலுவலர் ந.நந்தகோபன் மற்றும் கைதடிக் கிளை முகாமையாளர் ம.கோபிகிருஷ்ணாவும் கலந்து கொள்வர். (த-9)

# இவ்வாண்டு இறுதிக்குள் 454 ஏக்கர் காணி விடுவிப்பு

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 1
ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூனின் யாழ்ப்பாண வருகைக்கு முன்பதாக, விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு மக்களை அழைத்துச் சென்று காண்பித்த காணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இராணுவத்தினர் வசம் இருந்த 454 ஏக்கர் தனியார் காணிகளை முதற்கட்டமாக மீள்குடியேற்றத்துக்காக இவ்வருட இறுதிக்குள் விடுவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீமூன் இந்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். அவரது பயணத்துக்கு ஒரு வார காலத்துக்கு முன்னர், நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களில் ஒரு தொகுதியினர் அவர்களதுகாணிகள் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு, காணிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு காண்பிக் கப்பட்ட காணிகளே இந்த வருட இறுதிக்குள் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் காங்கேசன்துறை மேற்கில் (ஜே/233) 83.7 ஏக்கரும், காங்கேசன்துறை மத்தியில் (ஜே/234) 15.68 ஏக்கரும், காங்கேசன்துறை வடக்கில் (ஜே/235) 28.2 ஏக்கரும், தையிட்டி கிழக்கில் (ஜே/247) 77.2 ஏக்கரும், தையிட்டி வடக்கில் (ஜே/250) 249.24 ஏக்கருமாக 454 ஏக்கர் விடுவிக்கப்படவுள்ளது. (த-5)

## வருடாந்த நவராத்திரி உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 1
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயத்தின் வருடாந்த நவராத்திரி உற்சவம் இன்று சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு ஆரம்பமாகும். எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.பகல் 2மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து கண்ணகியம்மன் வெளிவீதிவலம் வந்து, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள இலுப்பையடி ஞான வைரவர் ஆலயத்தில் வன்னி வாழை வெட்டுதல் வைபவம் இடம் பெறும். (தி)

# பிரதேச செயலருக்கு நீதிமன்று எச்சரிக்கை

## இராணுவம் மணல் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கிய விவகாரத்தில்

கிளிநொச்சி, ஒக். 1
இராணுவம்மணல்ஏற்றுவதற்கு அனுமதி வழங்கிய விவகாரத்தில், மன்றில் முன்னிலையாகாத பிரதேச செயலரை எச்சரித்த நீதிமன்று, மணல் அகழப்படும் இடத்தைப் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பிரதேச செயலாளருக்கு உத்தரவிட்டது.


கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உருத்திரபுரம் கிராமத்தில் உள்ள குடமுருட்டிப் பாலத்துக்கு அருகில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகக் கிராம அலுவலரினால் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதனடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி நீதிவான், சட்டவிரோத மண்கடத்தல்காரர்கள் அமைத்திருந்த பாதையை அகற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்த இடத்தில் கடந்த 9ஆம் திகதி இராணுவத்தினர் மண் அகழ்வில் ஈடுபட்டிருப்பதை அறிந்த கிளிநொச்சி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று இராணுவத்தினரின் அனுமதி தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். முறையற்ற விதத்தில் அனுமதி வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதால் பிரதேச செயலாளரைக் கடந்த 14 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளையிடப்பட்டது. அவர் அன்று முன்னிலையாகவில்லை. அவர் சார்பாக ஒருவர் முன்னிலையாகியிருந்தார். அதனால் 28 ஆம் திகதி பிரதேச செயலாளரை மன்றில் முன்னிலையாகுமாறு பணிக்கப்பட்டது. அதன்படி நேற்று முன்தினம் தனது அறிக்கையை உத்தியோகத்தர் ஒருவர் மூலமாக மன்றுக்கு அனுப்பியிருந்தபோதும் பிரதேச செயலர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

இதனால் பிரதேச செயலரை உடனடியாக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளையிட்டது நீதிமன்று. அதனால் சிறிது நேரத்தில் நீதிமன்றில் பிரதேச செயலர் முன்னிலையானார். அதன்போது பிரதேச செயலர் நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டார். நீதிமன்ற நடவடிக்கையை அதிகாரிகள் புறக்கணிக்கும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

பின்னர், பிரதேச செயலரும், உதவிப் பிரதேச செயலரும் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்குமாறும் பணித்தது நீதிமன்று. அத்துடன் பிரதேச செயலரை, மணல் அகழப்படும் இடத்துக்குச் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது நீதிமன்று. (த-4-ரி3)

# 4 லட்சம் ரூபா பெறுமதியான 55 பாலைக் குற்றிகள் சிக்கின



கிளிநொச்சி, ஒக். 1
முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்துவதற்கு தயாரான நிலையில் இருந்த 4 லட்சம் ரூபா பெறுமதியான 55 பாலை மரக்குற்றிகள் கிளிநொச்சி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவின் சிறப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீபன் தலைமையில் பொலிஸ் பரிசோதகர்களான லால்குமார, ஐங்கரன், சியாம், ஏக்கநாயக்க, சோமரட்ன ஆகியோரினால், மாங்குளம் காட்டுப் பகுதியில் வைத்து கிளிநொச்சி - யாழ்ப்பாணம் சாலையில் பயணம் செய்யும் பேருந்தில் கடத்தப்பட்ட 4 லட்சம் ரூபா பெறுமதியான 12 அடி நீளமான 55 பாலை மரக்குறிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் மூவர் இதன் போது கைது செய்யப்பட்டனர். இந்த மரக் கடத்தல் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுவதாகவும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-5-35-ரி3)

# வலி. கிழக்கு பிரதான வீதிகளில் இரவில் வீசப்படும் குப்பைகள்

## சுகாதாரத்துக்குப் பெரும் பங்கம் உடன் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

அச்சுவேலி, ஒக்.1
இருபாலை, கோப்பாய் பகுதிகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் கழிவுகள், குப்பைகள் என்பன பிரதான வீதியோரங்களில் இரவு வேளையில் வீசப்படுகின்றன. இதனால் வீதியால் பயணம் செய்வோர் மற்றும் அந்தப் பகுதியில் குடியிருப்போர் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதுடன் பொதுச் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் பொலிஸார் இரவு ரோந்து நடவடிக்கையின்போது கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு வலி.கிழக்குபிரதேச செயலகப் பொலிஸ்–பொதுமக்கள் நல்லுறவுக்கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் கிராம அலுவலர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

கோப்பாய்,இருபாலைப் பகுதி வீதியோரங்களில் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு வெளியே உள்ளவர்களாலும், உள்ளூரில் வசிப்பவர்களினாலும் திட்டமிட்ட வகையில் இரவுவேளையில் குப்பைகள் கொண்டு வந்து வீசப்படுகின்றன.

மாமிசக் கழிவுகள் மற்றும் கழிவு உணவுப்பொருள்கள் உள்ளிட்ட குப்பைகளே இவ்வாறு இரவில் கொண்டு வந்து போடப்படுகின்றன. இவற்றைக் கட்டாக்காலி நாய்கள் குதறிவிடுகின்றன. இதனால் பொதுமக்கள், பயணிகள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகின்றனர். சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்படுகின்றது எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்குப் பதிலளித்த கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, குறித்த விடயம் தொடர்பாக மேலதிக கவனம் செலுத்தப்படுவதோடு, குறித்த வீதிகளில் இரவு ரோந்து நடவடிக்கையை அதிகரிப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கண்டறியப்பட்டால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (த-11)

# டிறிபேர்க் கல்லூரியில் பற் சிகிச்சை ஆய்வு

சாவகச்சேரி ஒக். 1
யாழ்.பிராந்திய பல் சுகாதாரப் பிரிவினர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் பங்களிப்புடன் பற்சிசிச்சை தொடர்பான தேசிய ஆய்வைச் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் மேற்கொண்டனர்.

கல்லூரி மாணவர்கள் மற்றும் 34 வயது தொடக்கம் 45 வரையான ஆண்கள், பெண்கள் 20 பேரும், 64 வயதுக்கும் 75 வயதுக்கும் இடைப்பட்ட 20 பேரும் ஆய்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்.பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் மருத்துவர் அகிலன் தலைமையிலான குழுவினர் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டுத் தூதர்களுக்கு

# விக்கி குறித்து விளக்கும் அரசு

### இனவாதத்துக்குத் தீனி போடும் செயற்பாடு என்றும் தெரியப்படுத்துமாம்

கொழும்பு, ஒக். 1

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனின் அண்மைய நடவடிக்கைகள் தொடர்பில் நாட்டிலுள்ள தூதுவர்களுக்கு விளக்கமளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இவரது அரசியல் நடவடிக்கைகள் தெற்கிலுள்ள இனவாதக் குழுக்களின் தேவைக்கு ஏற்ப தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தூதுவர்களுக்கு அரசு கூறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசு பெரிய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், விக்னேஸ்வரனின் இந்த நடவடிக்கை, தெற்கிலுள்ள இனவாதிகளின் செயற்பாடுகளுக்குத் தீனியாக அமைந்துள்ள தென்பதையும் தூதுவர்களுக்கு அரசு எடுத்துக் காட்டவுள்ளதாகவும் மூத்த அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சரின் இந்த அடிப்படைவாதச் சிந்தனையுடன் கூடிய அறிவிப்புக்கள் நாட்டின் பலத்த எதிர்ப்புக்களுக்கு உள்ளாகியுள்ளமை தொடர்பிலும் தூதுவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## மிகப்பெரிய கப்பல்கள் தரிப்பதற்கு திருமலையில் புதிய இறங்குதுறை

### அனுமதியளித்தது அமைச்சரவை



கொழும்பு, ஒக். 1

திருகோணமலை கடற்படைத் தளத்தில் மிகப் பெரிய கப்பல்கள் தரித்து நிற்கும் வகையில் புதிய இறங்குதுறை ஒன்றைக் கட்டுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கமைய, திருகோணமலை டொக்யார்ட் தளத்தில் 220 மீற்றர் நீளமும், 20 மீற்றர் அகலமும் கொண்ட விசாலமான இறங்குதுறை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் மிகப்பெரிய கப்பல்கள் இங்கு தரித்து நிற்கக்கூடிய வசதிகள் கிடைக்கும்.

உலகின் ஆழமான இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றான திருகோணமலைத் துறைமுகமே, ஆசியாவில் இரண்டாவது ஆழம் கூடிய இயற்கைத் துறைமுகமாகும்.

டொக்யார்ட் கடற்படைத் தளம், இலங்கைக் கடற்படையின் கிழக்கு பிராந்தியத் தலைமையகமாகச் செயற்படுகிறது.

இங்கு மிகப்பெரிய கப்பல்கள் தரித்து நிற்பதற்கான இறங்குதுறை ஒன்றைக் கட்டும் பணிகள் 1990இல் ஆரம்பிக்கப்பட்டபோதும், பல்வேறு காரணங்களால் அது இடைநிறுத்தப்பட்டது.

இலங்கைக் கடற்படை கடல் ரோந்துப் பணிகளுக்காக நான்கு புதிய மிகப் பெரிய கப்பல்களை 2017-2019 ஆண்டு காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளவுள்ள நிலையிலேயே, டொக்யார்ட்டில் புதிய இறங்குதுறையை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளன. (த)

## பட்ஜெட்டுக்கு முன்னர் வற் வரி சீர்திருத்த வரைவு

கொழும்பு, ஒக். 1

புதிய வற் வரி சீர்திருத்தம் தொடர்பான சட்ட வரைவு, சட்ட ரீதியான முறையில் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது, எந்தவிதமான எதிர்ப்புக்கள் வந்தாலும் அதற்கு முகம்கொடுக்க அரசு தயாராக வுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

புதிய வரவு-செலவுத் திட்டம் எந்தவொரு அரசியல் லாபங்களையும் கருத்திற் கொண்டு தயாரிக்கப்படுவதில்லை. எதிர்வரும் தேர்தலுக்கும் வரவு- செலவுத் திட்டத்துக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. நல்லாட்சி அரசுக்கு நாட்டு மக்கள் 5 வருடங்களுக்கு ஆணைவழங்கியுள்ளனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (த)

## வறுமையை ஒழிப்பதற்கே 2017 வரவு—செலவுத் திட்டம்

### நிதியமைச்சர் கூறுகிறார்

2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமானது வறுமையை ஒழிக்கும் நோக்குடனும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டுமே முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிவித்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, மாறாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அணியினர் குறிப்பிடுவது போல் தேர்தலை இலக்காகக் கொண்டு கொண்டு வரப்படப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத் தயாரிப்பு பணிகள் தற்போது மும்மரமாக நடைபெற்று வருகின்றன. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன உள்ளிட்ட மகிந்த அணியினர் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

எம்மிடம் கண்டுபிடித்த குறைகளை அவர்களது அரசு காலத்திலேயே நிவர்த்தி செய்திருந்தால் 90 வீதமான சிக்கல்கள் இல்லாது செய்திருக்க முடியும். அதை விடுத்து எமக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன. நெல் விலையை 40 ரூபாவாக நிர்ணயம் செய்தோம். நெல்லின் விலையை இதைவிட அதிகரித்தால் கொள்வனவாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

மக்களின் வாழ்க்கைச் சுமையை அதிகரிக்கும் வகையில் அரசு எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுக்காது. வரவு - செலவுத் திட்டம்கூட அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தேர்தல்களை இலக்காகக் கொண்டதன்றி, நாட்டின் வறுமையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையிலேயே கொண்டு வரப்படவுள்ளது.

இதனால் அரசின் வருமானமும் அதிகரிக்கப்படும். வற் வரியை அதிகரிக்கவுள்ளமையால் மட்டும் நாட்டின் வருமானம் 100 பில்லியனால் அதிகரிக்கவுள்ளது. இவற்றையெல்லாம் கொண்டு வறுமையற்ற நாடாக இலங்கையை மாற்றுவதே எமது அரசின் திட்டமாகும் - என்றார். (த-5)

## அடிப்படைவாதிகளுக்காகவே புதிய அரசமைப்பு உருவாக்கம்

### சாடுகின்றார் ஜி.எல். பீரிஸ்

கொழும்பு, ஒக். 1

அடிப்படைவாதிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கே புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் முயற்சியில் நல்லாட்சி அரசு இறங்கியுள்ளது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் மகிந்த அணியான பொது எதிரணி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமெனில், தற்போதுள்ள அரசமைப்பை மறுசீரமைப்புச் செய்தால் போதும். ஆனால், நல்லாட்சி அரசு அவ்வாறான நிலைப்பாட்டில் இல்லை. புதிய அரசமைப்பொன்று நாட்டுக்குத் தேவைப்படாத சூழலில் புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளதுடன், பன்னாட்டுக்கும் வாக்குறுதிகளைக் கொடுத்துவருகின்றது.

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிப்பதற்கான காரணம் தம்மை ஆட்சிப்பொறுப்புக்குக் கொண்டுவந்த அடிப்படைவாதிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கமாகும்- என்றார். (த)

## தீபாவளியை முன்னிட்டு மாணவருக்கு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் தீபாவளியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே பல்வேறு வகையான போட்டிகளை நடத்தவுள்ளது என அதன் பொதுச் செயலர் வே.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு என்ற விடயத்தை முன்னிறுத்தி கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியவை நடத்தப் படவுள்ளன. மாணவர்கள் தங்களது ஆக்கங்களை ஆசிரியர், அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சேர்.சிற்றம்பலம்ஏ.கார்டிணர்மாவத்தை, கொழும்பு - 02 எனும் முகவரிக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும் என அவர் கூறினார். (த-ரி)

### லசந்த கொலை விவகாரம்

## புலனாய்வு அதிகாரிக்கு தொடர்ந்தும் மறியல்

கொழும்பு, ஒக். 1

'சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் தலைமை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரியின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் இராணுவப் புலனாய்வு அதிகாரி நேற்றுமுன்தினம் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையிலேயே நீதிவான் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

கல்கிஸை நீதிவானின் உத்தரவுக்கு அமைய லசந்த விக்கிரமதுங்கவின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை பொரளை மயானத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு இரசாயனப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-5)

## வர்த்தகர் சுலைமான் படுகொலை; ஜி.பி.எஸ். உதவியுடன் விசாரணை

கொழும்பு, ஒக். 1

பம்பலப்பிட்டி வர்த்தகர் மொஹமட் சுலைமானின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 9 சந்தேகநபர்களினதும் வாகனங்கள் மற்றும் அலைபேசிகளை, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி ஜீ.பி.எஸ் தொழில்நுட்பம் கொண்டு சோதனைகளை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம், நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை உத்தரவிட்டது.

பம்பலப்பிட்டி வர்த்தகர் கொலை தொடர்பான வழக்கு விசாரணை, கொழும்பு மேலதிக நீதிவான் நிஷாந்த பீரிஸ் முன்னிலையில், நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, கொலைச் சந்தேகநபர்கள் 9 பேரும், மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன்போது, சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள், தங்களது கட்சிக்காரர்களுக்குப் பிணை வழங்குமாறுகோரி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

இருப்பினும், அந்த விண்ணப்பங்களை நிராகரித்த நீதிவான், இவர்கள் கொலைச் சந்தேகநபர்கள் என்பதால், அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க முடியாதென்று கூறியதுடன், அந்த 9பேரையும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த நிலையில், சுலைமானின் பிரேதபரிசோதனை அறிக்கையை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளதாக, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால், நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர் நேற்று ஒப்பாரி வைத்துப் போராட்டம்

## ஹற்றன் - நுவரெலியா வீதியை இடைமறித்து




கொழும்பு, ஒக். 1
தங்களுக்கான சம்பள உயர்வை உடன் வழங்குமாறு வலியுறுத்தியும், கடந்த ஒன்றரை வருடமாக இழுபறி நிலையிலுள்ள கூட்டு ஒப்பந்தத்தை நீக்குமாறு கோரியும் ஆயிரக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் ஹற்றன்-நுவரெலியா முதன்மை வீதியை மறித்து ஒப்பாரி வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 9 மணியளவில் இடம்பெற்றது.

ஹற்றன் மல்லியப்புச் சந்தியில் ஹற்றன்-நுவரெலியா முதன்மை வீதி மற்றும் ஹற்றன்-கொழும்பு முதன்மை வீதி ஆகியவற்றை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்கள், முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் ரொஷான் இராஜதுரையின் உருவப் பொம்மையை எரித்துத் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.





கொட்டகலை, பத்தனை ஆகிய பகுதிகளிலும் சுமார் 42 தோட்டங்களில் வசித்து வரும் ஐந்தாயிரம் தொழிலாளர்கள் கொட்டகலை நகரத்தில் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்தோடு கொட்ட கலை நகரத்தில் சில மணி நேரம் வர்த்தகர்கள் கடைகளை அடைத்துப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.

1000 ரூபா சம்பள உயர்வை வழங்குமாறும், ஏமாற்றுக் கூட்டு ஒப்பந்தத்தை நீக்குமாறும் கோரும் பதாகைகளை ஏந்தியவாறே தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக ஹற்றன்-நுவரெலியா முதன்மை வீதியின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதோடு, கொட்டகலை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள தண்டவாளத்திலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தரித்திருந்ததால் சில மணி நேரம் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. (கு)

# கணவரால் தாக்கப்பட்டு மனைவி சாவு

கொழும்பு, ஒக். 1
மாத்தளை, அகலவத்தை குடியேற்றப் பகுதியில் கணவரால் தாக்கப்பட்டு மனைவி உயிரிழந்துள்ளார்.

கணவன்-மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறு வலுவடைந்ததை அடுத்து, கணவன் கோடரியால் மனைவியைத் தாக்கினார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 18 வயதான பெண்ணொருவரே உயிரிழந்தார். சம்பவத்துடன் தொடர்புடைய கணவன் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (கு)

# ஹோட்டலில் தீ; ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக். 1
அம்பாறை, பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு தீ பரவியதில் 47 வயதான ஒருவர் தீயில் கருகி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். தெனியாய, கிரிவண்டோலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த செல்லையா காளிதாசன் என்பவரே இந்த இடரில் உயிரிழந்தார் என அடையாளம் காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# வலுவடைந்து வருகிறது இலங்கை-சீன நட்புறவு

## ஜனாதிபதி மைத்திரி மகிழ்ச்சி




கொழும்பு, ஒக். 1
இலங்கையும் சீனாவும் வரலாற்று ரீதியாகச் சிறந்த நட்புறவைப் பேணி வருகின்றன. அந்த நட்புறவை வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல தற்போதைய அரசு மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

67ஆவது சீன தேசிய தினம் மற்றும் சீன இலங்கை நட்புறவுச் சங்கத்துக்கு 35 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்கஞாபகார்த்தபன்னாட்டுமாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே நிலவும் நட்பானது அபிவிருத்தி மற்றும் முதலீட்டுத்துறைகளிலும் பன்னாட்டு மட்டத்திலும் இன்றுமிகவும்பலமாகவும்உயர்ந்த நிலையிலும் உள்ளது. சீனா எல்லா சந்தர்ப்பங்களிலும் எமக்காகக் குரல்கொடுத்து வரும் ஒரு நட்பு நாடு என்றும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டார்.

கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி உள்ளிட்ட சகல துறைகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் சீனா இலங்கைக்கு வழங்கி வரும் உதவிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி, தான் ஜனாதிபதியாகச் சீனாவுக்கு மேற்கொண்ட முதலாவது பயணத்தின்போது சீன அரசிடமிருந்தும் மக்களிடமிருந்தும் தமக்குக் கிடைக்கப் பெற்றவரவேற்பை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

இந்தப் பயணத்தின்போது சீன ஜனாதிபதியிடம் தான் முன்வைத்த வேண்டுகோளின் பேரில் இலங்கையில் சிறுநீரக நோயாளிகளுக்கான சிறப்பு சிறுநீரக வைத்திய சாலை சீனாவிடமிருந்து அண்மைக் காலத்தில் கிடைக்கப்பெற்ற நட்புப் பரிசாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்த வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூறினார். (கு)



இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்

புரட்டாதிச்சனிவார **சனீஸ்வரர்தோஷ** பரிகார ஹோமம்

**காலம்** - 01.10.2016 (3ஆம் சனிக்கிழமை)

நண்பகல் 12.00 மணிக்கு தேவேந்திர முகூர்த்தத்தில் சனீஸ்வரருக்கு சுவர்ண(தங்க) சூரிய கிரீடம் அணிவித்தல்.
அடியார்கள் இன்று முழுவதும் நளதீர்த்தத்தில் புனிதநீராடி, எள்ளுசுட்டி எரித்து, எள்சாதம் நைவேத்தியம் செய்து தோஷ பரிகாரம் செய்யலாம்.

**அன்னதானம் நடைபெறும்.**

ஆலயதர்மகர்த்தா.



வல்லிபுர ஆழ்வார்
இன்று (01.10.2016) சனிக்கிழமை
இரண்டாம் திருவிழா

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :

அன்னை முத்துமாரி பஸ்சேவை

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை




JETEX உள்நாடு
வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் கூரியர் சேவை எம்மால் வழங்கப்படும்

வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டுக்களையும் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பு | +94 77 544 9251 | | காலை | மாலை |
| யாழ்ப்பாணம் | +94 77 544 8503 | பருத்தித்துறை | 9.00 | 7.00 P.m |
| வல்வெட்டித்துறை | +94 21 226 1977 | யாழ்ப்பாணம் | 10.00 | 8.00 P.m |
| | +94 77 544 7359 | வெள்ளவத்தை | 9.00 | 7.00 P.m |
| நெல்லியடி | +9477 285 0285 | | | |
| பருத்தித்துறை | +9477 555 2973 | கொட்டாஞ்சேனை | 10.00 | 8.00 P.m |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேரினவாதத்தைக் கொழும்பு கட்டுப்படுத்தியேயாக வேண்டும்

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ். நகரத்தில் நடத்திய ஊர்வலத்தைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாதம் மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது. இப்போது அது தமிழர்களின் எல்லைக்கு வந்து தன் கோரப் பற்களைக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறது.

சிங்களக் கடும்போக்குவாத அமைப்பான பொது பல சேனா வவுனியாவில் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டம் சொல்லும் செய்தி, போர் ஓய்வின் பின்னர் மீண்டும் வெளிப்படையாகவே பேரினவாதச் செயற்பாடுகள் தலைதூக்கியிருக்கின்றன என்பது தான்.

பொது பல சேனா போன்ற கடும்போக்குவாத அமைப்புக்கள் மீண்டும் சன்னதம் கொள்வதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தீர்க்க தரிசன மற்ற முன்னகர்வுகளும் காரணம் என்பது ஒரு புறம் இருந்தாலும்கூட இதுபோன்ற நடவடிக்கைகள் வரவேற்புக்குரியவை அல்ல. முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்; கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

இது விக்னேஸ்வரனின் நடவடிக்கையால் வந்த விளைவு என்று கூறிவிட்டு கொழும்பு அரசு பின் வாங்கிவிட முடியாது என்பதை உறுதியாகத் திடமாகக் உணர்த்த வேண்டியிருக்கிறது.

வாய்ப்புக் கிடைத்துவிட்டது என்பதற்காக பொது பல சேனா போன்ற அமைப்புக்கள் விசத்தைக் கக்குவதை கொழும்பு அனுமதிக்குமானால், அது இலங்கை மீண்டும் அழிவுப் பாதையை நோக்கித் திரும்புவதை விரைவுபடுத்தும். எனவே சட்ட ரீதியாக இத்தகைய பேரினவாதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் இனத்துவேசத்தை வளர்க்கும் நடவடிக்கைகளை முடக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முதலமைச்சரின் ஊர்வலமும் அவரது உரையும் இனவாதமானவை என்று கொழும்பு அரசு கருதினால் அதனையும் சட்ட ரீதியாக எதிர்கொள்ள முடியும். அதனைவிடுத்து, விக்னேஸ்வரனின் ஊர்வலத்தைக் காரணம் காட்டிப் பொது பல சேனா போன்றவற்றின் செயற்பாடுகள் அனுமதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்வது இலங்கையில் நீடித்த அமைதிக்கான வழிவகையாக ஒருபோதும் இருக்காது.

தமிழர்களில் பெரும்பான்மையானோர் விக்னேஸ்வரனின் தற்போதைய நகர்வுகளை ஆதரிக்கவில்லை என்பதற்காக இலங்கையில் தமிழர்களுக்குப் பிரச்சினைகளே இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது கொழும்பு. தமிழரின் பிரச்சினைகளை வெளிப்படுத்த விக்னேஸ்வரன் தெரிந்து கொண்ட முறையும் காலமும் கூட்டணியும் அதன் பின்னால் உள்ள அவரது சுயநலனும் குறித்துத்தான் அவர்கள் கருத்து முரண்பாடு கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் இடையே உள்ள இந்த உள் முரண்பாட்டைச் சாதகமாக்கிக்கொண்டு சிங்கள இனவாதத் தரப்புக்களைக் கட்டுப்படுத்தாது விட்டுவிடலாம் என்று கொழும்பு ஒருபோதும் எண்ணக்கூடாது.

எனவே, பொது பல சேனா போன்ற கடும்போக்குவாத - பேரினவாதச் சக்திகளை - கட்டுப்படுத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகளை உடனடியாகக் கொழும்பு எடுக்கவேண்டும். தமிழர்களுக்கு எதிரான இனத் துவேசத்தை வளரவிடுவது, பிரதமர் ரணிலின் மாமனார் 1980களில் வளர்த்தெடுத்த அரசியல் நிலையை மீண்டும் ஏற்படுத்திவிடும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் கொழும்புக்கு அழுத்திச் சொல்ல வேண்டியது காலக் கடமை.

# தமிழர் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை குழப்பியவர்கள் இனவாத அரசியல்வாதிகளே

சிங்கள மூலம் மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளையில் நாட்டின் இரு பெரும் பௌத்தமத பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் நாட்டை முன்னேற்றுவதற்காகத் தேசிய அரசொன்றை நிறுவுமாறு ஆலோசனை வழங்கியிருந்தனர். 1988ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய வேளையில், இடைக்கால அரசொன்றை உருவாக்க வைக்க அந்தப் பௌத்தமத பீடங்களது தலைவர்கள் முயன்ற போதிலும், அவர்களது அந்த முயற்சி கைகூடவில்லை.

பிரேமதாச ஜனாதிபதிப் பதவியை ஏற்ற பின்னர், ஜே.வி.பியினரது கிளர்ச்சி நடவடிக்கைகள் தீவிரம் அடைந்தபோது, தேசிய அரசசொன்றை உருவாக்க பிரேமதாச விரும்பியபோதிலும், ஐ.தே.க. கட்சி அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்தன மற்றும் சபை முதல்வர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அந்த யோசனையைக் கடுமையாக எதிர்த்ததால், பிரேமதாசவின் விருப்பம் நிறைவேற இயலாது போய்விட்டது.

பிரேமதாசவின் படுகொலையை அடுத்து ஜனாதிபதியாகப் பதவியேற்ற டி.பி.விஜேதுங்கவின் நிர்வாக வேளையில், தேசிய அரசொன்றை உருவாக்க பௌத்த மதபீடங்களின் தலைவர்கள் முயன்ற போதிலும், சந்திரிகாவின் எதிர்ப்பால் அதுவும் நிறைவேறவில்லை.

பின்னர் சந்திரிகா ஜனாதிபதியாகிய பின்னர், தேசிய அரசொன்றை நிறுவுமாறு அந்தப் பௌத்த மத பீடங்களது தலைவர்கள் சந்திரிகாவுக்கு ஆலோசனை கூறினர். 2001ஆம் ஆண்டில், தேசிய அரசொன்றை நிறுவும் நோக்கில் சந்திரிகா, ஐ.தே.கட்சியுடன் பேச்சுக்களை ஆரம்பித்தார். குறித்த பேச்சுக்களில் ரணிலுக்குப் பிரதமர் பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டமையை மங்கள சமரவீர எதிர்த்தார். இதன் பயனாக தேசிய அரசமைக்கும் யோசனை கைவிடப்பட்டு, மங்கள சமரவீரவின் மத்தியஸ்தத்தில் ஜே.வி.பியுடன் இணைந்து தகுதிகாண் அரசொன்று நிறுவப்பட்டது. 2001ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி தோல்விகண்டு, ரணிலின் தலைமையிலான அரசு பதவியேற்ற வேளையிலும், தேசிய அரசொன்றை நிறுவ அந்த பௌத்த மதபீடங்களது தலைவர்கள் முயற்சிமேற்கொண்டனர். அந்த வேளையில் மகிந்த ராஜபக்ச கூட, தேசிய அரசொன்று நிறுவப்படவேண்டுமெனக் கடுமையாக வற்புறுத்தினார். ஆனால் ஜனாதிபதியான சந்திரிகா, பிரதமர் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசின் மூன்று அமைச்சுப் பதவிகளைத் தம்வசம் எடுத்துக் கொண்டதன் பின்னர், தேசிய அரசு அமைப்பது தொடர்பான பேச்சுக்கள், முன்னெடுக்கப்பட்ட போதிலும் திடீரென சந்திரிகா, ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசைக் கலைத்துவிட்டார்.

சந்திரிகா மகிந்தவைப் பிரதமராக நியமித்து அரசமைத்த பின்னர் தாம் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக ஜே.வி. பியினர் சந்திரிகாவை அச்சுறுத்தினர். இதனால் குழம்பிப்போன சந்திரிகா, ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட்டு, ரணிலுடன் இணைந்து தேசிய அரசொன்றை நிறுவ முயற்சித்தார்.

> **2001ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் தோல்வி கண்டு, ரணிலின் தலைமையிலான அரசு பதவியேற்ற வேளையிலும், தேசிய அரசொன்றை நிறுவ அந்த பௌத்த மத பீடங்களது தலைவர்கள் முயற்சி மேற்கொண்டனர். அந்த வேளையில் மகிந்த ராஜபக்ச கூட, தேசிய அரசொன்று நிறுவப்பட வேண்டுமெனக் கடுமையாக வற்புறுத்தினார்.**

அதனை எதிர்த்த மகிந்த அந்த வேளையில் ஜனாதிபதிப்பதவி, மற்றும் கட்சித் தலைமைப் பதவி என்பவற்றைக் கைப்பற்ற முயற்சித்தார்.

### மகிந்தகூட தேசிய அரசு யோசனைக்கு இணங்கவில்லை

2005ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய மகிந்தவை பௌத்த பீடங்களின் தலைவர்கள் ரணிலையும் இணைத்துக் கொண்டு தேசிய அரசொன்றை நிறுவுமாறு வற்புறுத்தினர். ஆனால் மகிந்தவின் சகோதரர்களான கோத்தபாய மற்றும் பசில் ஆகியோர் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். தேசியப் பிரச்சினை தொடர்பில் இணக்கப்பாடொன்றைக் காணமுன் வருமாறு கருஜயசூரியாவுக்கு மகிந்த அழைப்புவிடுத்தார். கருஜயசூரிய தரப்பினரை ஐ.தே.கட்சியிலிருந்து பிரித்தெடுத்து அரசுடன் இணைய வைக்கும் மகிந்தவின் அந்த யுக்தி பயனளித்தது.


போர் தீவிரமடைந்த வேளையிலும், போர் வெற்றிக்குத் தாம் ஒருவரே சொந்தம் கொண்டாடும் நோக்கில் மகிந்த செயற்பட்டார். ஐ.நா.மனித உரிமைகள் சபையின் இலங்கைக்கு எதிரான பிரேரணையைத் தோற்கடிக்க ரணில் அரசுக்கு உதவத் தயாராயிருந்த போதிலும், மகிந்த ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை சுதந்திரக் கட்சிக்கு கட்சிதாவ வைப்பித்தார்.

### பௌத்த மத பீடங்களது தலைவர்களுக்கு முயற்சி பயன் தந்தது

தேசிய அரசொன்றை நிறுவும் பௌத்த மத பீடங்களது தலைவர்களது முயற்சிக்கு, கடைசியில் மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஒன்றிணைந்து உருவாக்கிய தேசிய அரசின் மூலம் பயன் கிட்டியது.

தேசிய அரசின் செயற்பாடுகளை நலிவுபடுத்தும் நோக்கில், மகிந்த தரப்பினர், மதவாத, இனவாத கருத்துக்களைப் பரப்ப முனைகின்ற போதிலும், அது அவ்வளவு தூரம் வெற்றியளிக்குமொன்றாகத் தோன்றவில்லை.

பௌத்தமதத்துக்கான உரிய இடம் எப்போதும் பாதுகாக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபாலவும், பிரதமர் ரணிலும் தமக்கு உறுதியளித்துள்ளதாக அந்தப் பௌத்த மத பீடங்களது தலைவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். தேசிய அரசின் திட்டங்களை விமர்சித்து நாட்டு மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் தமது முயற்சி தோல்வி கண்டு வருவதால், தற்போது மகிந்தவும் அவரது தரப்பினரும் குழம்பிப் போயுள்ளனர் என்பது அவர்கள் இந்த நாள்களில் வெளியிட்டுவரும் கருத்துக்களிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.உமாசுதன்

# தமிழர்களது இன்றைய தேவை அறிக்கையிடல்கள் அல்ல; முயற்சியாண்மையே!

இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் தனித்துவம் என்பது, தமிழ் மொழியின் காத்திரமும், அதன் அழகெனும் சூத்திரமும், தாய்மொழி யாய் தமிழர்களுக்கு தந்துவிட்ட அழிவிலாத அடையாளம் தான். மொழியின்வழி தமிழர்களின் கலை,கலாசார விழுமியங்கள், ஒழுக்க விழுமியங்கள், பொருண்மிய மேம்பாடு கள் என அத்தனையும் மிளிர்ந்திருந்தன. அதில் எந்த உடைவுகளும்,எடைபோடல்களும் இருந்ததில்லை.இறுக்கமான கட்டமைவுகளும், நல்வழிநடத் தல்களும் இந்த நிலைபேறான வடிவங்களை தமிழர்களுக்கான இலட்சணமாகத் தந்திருந்தன. இந்த நிலையிலே, 2009 களில் தமிழர்களுக்கெதிரான போர்க்குற்றங்களும்,பாரிய மனித உரிமை மீறல்களும் தந்துவிட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முடிவுறுத்தல் என்ற அரசின் கருத்தூட்டமானது, பாரிய இடைவிலகல்களைத் தமிழினத்தின் மத்தியிலே ஏற்படுத்திவிட்டிருக்கின்றது.நேர்த்தியான கட்டமைவு என்ற வரையறைகளினுள் இருந்து அத்தனையும் திட்ட மிட்ட அரசினதும் அரசு சார்ந்த பின்புலங்களினதும் நிகழ்ச்சி நிரலின் கீழான பிறழ்வாக மாற்றங்கண்டுள்ளது. ஒன்றுதிரண்டு தமிழின இருப்பினை ஆட்டங்காணச் செய்யும் புரள்வாக மூர்க்கம் பெற்றுள்ளது.

**தமிழ்ச் சமூகத்திடை இறுக்கமுற்ற சாபங்கள்**

கல்வியில் பின்னடைவு,அதீத மதுசாரங்களின் நுகர்வு, போதை வஸ்துக்களின் ஊடுகடத்தல்களும் கண்டு பிடித்தல்களும்,பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள்,அழிவின் உள சமூக மேம்பாடற்ற அபிவிருத்தி எனும் நாமங்களின் அதிமதுரங்கள்,தொழில்நுட்பங்களின் மட்டற்ற சிந்தனை உறைநிலை மகிழ்தல்கள் என அத்தனையும் தமிழ்சமூகத்திடை இறுக்கமுற்று அடக்கமாகிப் போயிருக்கின்றன.முடக்கமின்றி பல கலக்கங்களையும்,அலைக்கழிதல்களையும் அடியெடுத்துத் தந்திருக்கிறது.மீள்தல் என்பதற்கான ஒரேயொரு வழி என்பது விழிப்புணர்விலும், ஒன்றுபட்ட மக்களின் பொறுப்புணர்விலும் தங்கி வாழ்கிறது. கட்டமைவான தமிழ்ச் சமூகம், இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். விடுதலைக்கான சிந்தனை உபாயங்களை கண்டு கொள்ள வேண்டும். நிகழ்காலங்கள் என்பது சொல்லி நகரக்கூடிய வியாக்கியானங்கள் இவையே! இந்தச் சந் தர்ப்பத்திலே, அகிம்சை வழிப் போராட்டம், ஆயுதவழிப் போராட்டம் என்பவை வெற்றி பெறவில்லை என்ற கட்டமிடல்களின் பின்னணியாக, தமிழினத்துக்கு தற் போதைய நிலமைகளில் காலம் தந்துவிட்ட ஒரேயொரு கரம் பற்றுதல்களாக சொல்லப்படுகின்ற அரசியல் நெறிமுறைகளும் எதிர்மறையாக அதிர் வுறுகின்றன. குறிப்பாக, ஜனநாயக நீரோட்டம் என்று கருத்துரைக்கப்படுகின்ற மாகாண மத்திய தமிழர் பிரதிநிதித்துவங்கள், ஒன்றுபட்ட நடைமுறைகளினுள் இயை புறுவதாகத் தெரியவில்லை.

கல்வியில் பின்னடைவு, அதீத மதுசாரங்களின் நுகர்வு, போதை வஸ்துக்களின் ஊடுகடத்தல்களும் கண்டு பிடித்தல்களும், பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள், அழிவின் உள சமூக மேம்பாடற்ற அபிவிருத்த் எனும் நாமங்களின் அதிமதுரங்கள்,தொழில்நுட்பங் களின் மட்டற்ற சிந்தனை உறைநிலை மகிழ்தல்கள் என அத்தனையும் தமிழ்சமூகத்திடை இறுக்கமுற்று அடக்கமாகிப்போயிருக்கின்றன.

**முரண்படும் வார்த்தை நாட்டங்களில் தூவல்கள்**

பன்னாட்டு விசாரணைகள்,அதற்கிசைவான நீதிப் பொறிமுறைகள், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுகள், சமத்துவம், அதன் வழி நல்லிணக்கம் என்றபடியான வார்த்தை நாட்டங்களின் தூவல்கள் மேற்குலக வட்டாரங்களினுள்ளும் அவர்களின் எடுபிடியான,தன்னலன் சார் அடி பிடியான இராஜதந்திர நிரல்களினுள்ளும் முரணுறுகின்றன.அரச தரப்பும் அதற்கிசைந்து தன்னிலைகளை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கின்றன.

இதனிடையே தமிழருக்கான தீர்வுகள், அதற்கிசைவான அதிகார வகையுறல்கள் என்பவற்றை தேடிப் பெறுவதில் இருந்துவருகின்ற இடைவிலகல்கள் அதிகமாகின்றன. மாகாணத்தவர்கள் தலைமைத்துவம் என்ற வரையறைகளை மீறிய செயல்நிலைகளினுள் நாட்டம் பெற்றிருக்கின்றனர். அறிக்கையிடல்களையும், பிரகடனங்களையும் வாய்கிழியச் சொல்லி ஆர்ப்பரிக்கின்றனர்.கால நகர்விடை எதுதேவை,எது தேவையற்றது என்ற திட்டமிடலின்றி அரசியல் சுயலாபம் கருதித் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள எத்தனிக்கின்றனர். உண்மையிலே தமிழர்கள் கடந்துவந்த வரலாற்றின் பாதைகள் சிந்திக்க வேண்டிய நியாயங்கள் பலதை ஆதாரபூர்வமாக சொல்லி நிற்கும். பதவிக்காக வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களை இணைக்க இடம் தரப்படமாட்டாது என்ற மேலெழுகைகளும், இராணுவ முகாம்களை மீளப்பெறும் தீர்மானங்களும் சாதகமற்றுப்போகும். ஆக,தமிழர்கள் ஏன் இன்னமும் நிர்க்கதியில்..?? என்ற பொருள் கோடல்களுக்கான விடைகளை சரியான முறையிலே கண்டுகொண்டு அந்தப் பாதைகளை ஒன்றிணைந்த தலைமைத்துவங்களாக செப்பனிட முன்வர வேண்டும். அரசியல் மெழுக்கிட்டு தமிழர் நலனை பாதிக்கும் வார்த்தைகளின் சுருக்கிடல்களையும் ஆறப் பழசான தீர்வுகளைக் கண்டு கொள்ளாத அறிக்கையிடல்களின் சுருக்கெழுத்து நகர்வுகளும், அரசியல் சித்து விளையாட்டுக்களும் தேவையற்றவை.

## பொறுப்புணர்ந்து நடப்பார்களா?

நானும் எனது குடும்பத்தாரும் கடந்த ஆனி மாதம் 19ஆம் திகதியன்று நயினாதீவுக்குத் தேர்த்திருவிழாவுக்குச் சென்று மாலை 6.45 மணியளவில் குறிகாட்டுவான் திரும்பி குறிகாட்டுவான் பஸ்தரிப்பு நிலையத்தில் யாழ்.பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது இ.போ.ச பஸ்ஸொன்றின் சாரதி (பஸ் இல, 3655) தனது பஸ்ஸில் இடமுள்ளது என்று கூறி அதில் ஏறுமாறு அழைத்தார். நாங்களும் சென்று ஏறினோம். நான் கொண்டு வந்த 'பாக்'கை என்னுடன் கொண்டு சென்று ஆசனத்தில் உட்கார்ந்தேன். பின்னால் பிள்ளைகளும் தாயாரும் 'பாக்'குடன் ஏறினார்கள். பின் பஸ்ஸில் சனம் நிறைந்து விட்டது. 8.30 மணியளவில் பஸ் யாழ்ப்பாணத்துக்கு வந்தது. 'பாக்'கை எடுத்துக் கொள்ளுங்கள் என்றேன். சாரதி இஞ்சின் பெட்டி மேல் வைக்கச்சொன்னார், அதில் வைத்து விட்டோம் என்றனர். பிள்ளைகளும் மனைவியும் 'பாக்'கை எடுக்கச் சென்ற போது 'பாக்' வைத்த இடத்தில் இருக்கவில்லை. சாரதியைக் கேட்டோம். எனக்குத் தெரியாது என்றார். நீங்கள் தானே இதில் வைக்கச் சொன்னீங்களாம். என்றேன். வேறுபலரும் வைத்தார்கள் அவர்கள் எடுத்திருப்பார்கள் என்று கூறினார். இது நியாயமான பதிலா? நாங்கள் பஸ்ஸின் உள்ளே நின்றபோது பஸ்ஸால் இறங்குமாறு கூறினார். நாங்கள் பஸ்ஸில் ஏறும் போது பிரயாணிகள் குறைவு. எங்களுடன் பாக்கைக் கொண்டு செல்வதற்கு கஷ்டமோ, இடைஞ்சலோ இருக்கவில்லை. அப்படி இருந்தும் அவர் அதில் வைக்கச் சொன்னதன் அர்த்தம் என்ன? வைக்கச் சொன்னவர் 'பாக்'கைப் பாதுகாத்து இருக்க வேண்டும்தானே? பேசாமல் விட்டுவிட்டால் எங்களுடன் பாதுகாத்துக் கொண்டு வந்து இருப்போம். நாங்களாக வைக்கவில்லை. அவரே வைக்கும்படி கூறினார். உதவி செய்வதாகக் கூறி நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டார் 15,000 ரூபா பெறுமதியான உடுப்புக்கள் அந்த 'பாக்'குக்குள் இருந்தன. இதை யாழ். பஸ் நிலைய முகாமையாளரிடம் தெரியப்படுத்தி விலாசத்தைக் கொடுத்தபோது அதனைப்பெற மறுத்து விட்டார். நாளையோ மறுநாளோ வந்து பாருங்கள் என்றார். நாலைந்து தடவைகள் சென்று கேட்டோம். குறித்த சாரதியைச் சந்திக்கவில்லை. விசாரிக்கவில்லை என்றார்கள். இன்று வரை தவறிய பாக் கிடைக்கவுமில்லை. அது குறித்துப் பதிலும் இல்லை. எனவேதான் வாசகர் திருமுகத்தின் ஊடாக அறியத் தருகின்றேன். ஏன் என்றால் என் போன்று வேறு எவரும் எம்மைப் போன்று ஏமாந்து போகக்கூடாது என்பதற்காகவே.

'பாக்'கை எடுத்தவரும் தெரியாமல் எடுக்கவில்லை. தெரிந்தே எடுத்துள்ளார் என்றே தோன்றுகின்றது. எனவே அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாதீர்கள். 'பாக்'கை எடுத்தவர்களும் கோயிலுக்குச் சென்று வழிபட்டதில் எந்தவொரு பயன் ஏதும் இல்லை என்பதைப்புரிந்து கொள்ளவும்.

ஏ.பால்ராஜ் (பாலன்) சாவகச்சேரி.

## பாராட்டுக்கள் ஊக்கம் தருபவை

மதிப்பிற்கும் மேன்மைக்குரிய உதயன் குடும்பத்தினருக்கு எனது மனப்பூர்வமான இனிய வணக்கங்கள்.

எனக்கு முதலமைச்சர் விருது கிடைக்கப் பெற்ற சூட்டோடு சூடாக, எனதருமை உதயன் அதனைப் பாராட்டியமையானது... இன்னும் மேலே மேலே போய்விட்டது மாதிரியானதொரு வளர்த்தியாய் என்னை ஆட்கொண்டும் தான் விட்டதே. எனது ஆக்கங்களை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து எனது இலக்கிய வளர்ச்சியை இன்னும் வேகப்படுத்தி வைத்த உதயனை மறக்கமுடியாது. இது ஒரு மேன்மை கொள் வாழ்த்தே. இது எத்தனையோ பேர்கள் வாழ்த்தியமைக்குச் சமன். இந்த இலக்கிய உலகில் யான் கொஞ்சம் முழிப்பாய் இருப்பது கண்டு நொந்து போயிருப்பவர்கள் பலபேர் இருக்கிறார்களே! விரைவில் வெளியிடப்படவிருக்கும் எனது அடுத்த சிறுகதைத் தொகுதியான குசேலத்தில் எனது உதயன் கதைகள் அணிதிரண்டு வருகின்றன!!

அ.இராசதுரை
தையிட்டி. காங்கேசன்துறை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் பதற்றம்

பாகிஸ்தான் எல்லைக்குள் இந்திய இராணுவம் அத்துமீறி நுழைந்து ஆயுதக்குழுக்களின் முகாம்களை தகர்த்ததைத் தொடர்ந்து இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பதற்ற நிலை நிலவுகிறது.

காஷ்மீர் எல்லையில் உள்ள யூரிப்பகுதியில் இந்திய இராணுவத்தின் முகாம் மீது ஆயுதக் குழுக்கள் அண்மையில் தாக்குதல் நடத்தின. இதில் 17 இந்திய இராணுவச் சிப்பாய்கள் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். இதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்த இந்தியா, நேற்றுமுன்தினம் அதிகாலை 2.5 கிலோ மீற்றர் வரை பாகிஸ்தானுக்குள் ஊடுருவி ஆயுதக்குழுக்களின் முகாம்கள் மீது வான் வழியாகவும், தரை வழியாகவும் தாக்குதல் நடத்தியது. ஆயுதக்குழுக்களின் முகாம்கள் தரைமட்டமாகின. தமது எல்லைக்குள் ஊடுவியதைக் கண்டித்த பாகிஸ்தான், தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்றும் அறிவித்தது. இதனையடுத்து இந்திய எல்லைப்பகுதியிலுள்ள மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இரு நாட்டின் எல்லைப் புறங்களிலும் போர்ச் சூழலும் பதற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

(ம-ரி4)



# முன்னாள் இஸ்ரேல் பிரதமருக்கு 70 உலக தலைவர்கள் அஞ்சலி

ஜெருசலேம், ஒக். 1

இஸ்ரேல் முன்னாள் பிரதமரும், சமாதானத்துக்கான நோபல் பரிசு வென்றவருமான சீமோன் பெரிஸ் தனது 93 ஆவது வயதில் கடந்த புதன்கிழமை சாவடைந்ததையடுத்து உலகத் தலைவர்கள் பலரும் ஒன்றுகூடி அவருக்கு நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பரம எதிரி நாடுகளான இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தியமைக்காக 1994 ஆம் ஆண்டு பெரிஸுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இதனையடுத்து அவர் உலக மக்கள் பலராலும் விரும்பப்படும் நபராக மாறினார். உலகத் தலைவர்களிடையேயும் அவருக்கு பெரும் மரியாதை இருந்தது. கடந்த புதன்கிழமை சீமோன் பெரிஸ் இறந்தார். அவரது இறுதிச் சடங்கு நேற்று 8 ஆயிரம் படைவீரர்களின் மரியாதையுடன் நடைபெற்றது. இறுதிச் சடங்கில் பாரக் ஒபாமா, பில் கிளிங்டன், பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ், கனடியப் பிரதமர் உட்பட 70 உலகத் தலைவர்கள் திரண்டு சீமோன் பெரிஸுக்கு அஞ்சலி செலுத்தினர். (ம-ரி4)





# 75 ஆயிரம் நைஜீரியக் குழ… பட்டினிச்சாவை எதிர்கொள்ளும்…

நைஜீரியாவில் 75 ஆயிரம் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் எச்சரித்தது.

நைஜீரியாவில் போகோஹறாம் ஆயுதக்குழு நிலைகொண்டுள்ளது. கடந்த ஏழு வருடங்களாக போகோஹறாம் ஆயுதக் குழுவுக்கும் அரச தரப்புக்கும் இடையே நடைபெற்ற போரால் கிட்டத்தட்ட 17 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். 20 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 4 லட்சம் சிறுவர்கள் போசணைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 லட்சம் மக்கள் உணவுத்தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர். இவை ஏற்கனவே வெளிவந்த அறிக்கைகள். இந்த நிலையில் 75 ஆயிரம் குழந்தைகள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் நேற்றுமுன்தினம் எச்சரித்தது.

உலகிலேயே மிக மோசமான மனிதாா்த்த நெருக்கடியில் நைஜீரியா உள்ளது. ஊட்டச்சத்துக் குறைபாடு சொல்லொணா நிலமைக்குச் சென்றுள்ளது. உதவிபுரிபவர்களும் உலக நாடுகளும் துரிதமாக இதனைத் தடுக்கச் செயற்பட வேண்டும். ஊட்டச்சத்துக் குறைபாட்டில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இரண்டாம் நிலை நோய்களான வயிற்றுப் போக்கு, மூச்சுக்குழல் கிருமி நோய் ஆகியவற்றினால் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக அளவில் இப்படிப்பட்ட நிலையை நீங்கள் பார்க்க முடியாது. 5 ஆண்டுகளுக்கு முன்பு சோமாலியக் குழந்தைகள் எதிர்கொண்ட அதே

நிலையைத்…
தைகள் எதி…
கள் சபையி…
நைஜீரியக்…
தொங்கிக் …
மான உதவி…
குழந்தைக…
வடையச் …
கவும் பல் …
கின்றன. …
துன்பத்துக்…
உணவு உ…
என்ற நிலை…
ஒரு வேலை…
என யுனி…



# நெருப்புடன் விளையாட வேண்டாம் ஜப்பானுக்கு சீனா கடும் எச்சரிக்கை

தென் சீனக் கடல் பகுதியில் அமெரிக்காவுடன் இணைந்து ஜப்பான் ரோந்துப் பணியில் ஈடுபடப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து, குறித்த அறிவிப்பு தம்மைச் சீண்டும் நடவடிக்கை எனத் தெரிவித்த சீனா, நெருப்புடன் விளையாட வேண்டாம் என ஜப்பானை எச்சரித்தது.

தென் சீனக் கடல் பகுதிக்கு பல நாடுகள் சொந்தம் கொண்டாடுகின்றன. சீனா, வியட்நாம், தைவான், ஜப்பான், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே ஆகிய நாடுகளே அவ்வாறு சொந்தம் கொண்டாடுகின்றன. குறித்த பகுதியில் சீனா, தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட மிகையாக முனைப்புக் காட்டியது. இந்த விவகாரம் தொடர்பாக பிலிப்பைன்ஸ், பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தது. சீனாவுக்கு தென்சீனக் கடலில் உரிமையில்லை என்று தீர்ப்பு வெளியானது. முடிவை ஏற்றுக்கொள்ளாத சீனா, குறித்த கடல்பகுதி தொடர்பான தனது போக்கை மாற்றிக்கொள்ளும் விதத்தில் இல்லை. இந்த நிலையில் அமரிக்காவுடன் இணைந்து குறித்த பகுதியில் ரோந்துப் பயிற்சியில் ஈடுபடப் போவதாக ஜப்பான் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தது. ஜப்பானின் இந்த அறிவிப்பு தம்மைச்சீண்டும் நடவடிக்கை எனத் தெரிவித்த சீனா, நெருப்புடன் விளையாட வேண்டாம் என கடும் எச்சரிக்கையும் விடுத்தது. (ம-ரி4)

# அலெ… நிறுத்…

அமெரிக்கா…

வொஷிங்ரன், ஒக்…
சிரியாவின் அலெ…
நகரில் முன்னெ…
பட்டுவரும் தாக்…
களை நிறுத்தும் என…
இல்லை என அமெ…
வுக்கு பதில் வழங்…
ரஷ்யா.
சிரியாவில் அர…
போக்கை தீர்மான…
இரு பெரும் சக்தி…
அமெரிக்காவுக்கு…
யாவுக்கும் இடை…
நடைபெற்ற சமாதா…
பந்தம் முறிவடைந்…
தொடர்ந்து சி…
இரண்டாவது பெ…
அலெப்போ நகரில்…
சுக்கு எதிரான கிளர்…
எதிராக சிரிய அர…
ரஷ்யாவும் கடும்…
கடைப்பிடித்து வ…
இந்தத் தாக்குதல்…
ஒரு வாரத்தில் கிட்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவறாது வாக்களியுங்கள் ஆனால் ட்ரம்புக்கு அல்ல

## யு.எஸ்.ஏ. ருடே அதிரடி




வொஷிங்ரன், ஒக்.1

அமெரிக்க ஊடகமான யு.எஸ்.ஏ. ருடே பத்திரிகை ஜனாதிபதி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்புக்கு வாக்களிக்க வேண்டாம் என நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் பகிரங்கமாகக் குறிப்பிட்டது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இருபெரும் கட்சிகளில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். தேர்தல் முழக்கங்கள் சூடு பிடித்துள்ளன. டொனால்ட், ஹிலாரி இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்த நிலையில் அமெரிக்காவின் பிரதான ஊடகங்களில் ஒன்றான யு.எஸ்.ஏ. ருடேயின் இந்தக்கருத்து டொனால்ட்டுக்கு பின்னடைவைக் கொண்டு வரும் என்று கருதப்படுகிறது.

எமது 34 வருட பத்திரிகை வரலாற்றில் ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் நாம் எந்தக்கருத்தையும் ஆசிரியர் தலையங்கத்தில் முன்வைத்ததில்லை. ஒவ்வொரு தேர்தலும் வித்தியாசமானது. இவ்வருட தேர்தலும் அவ்வாறு தான். நாட்டின் நலம் தான் எமக்குப் பிரதானம். ட்ரம்ப் வேட்பாளராகத் தடம்பதித்த கடந்த 15 மாதங்களில் இடம்பெற்ற விடயங்கள் அடிப்படையில் நாம் இந்த ஆசிரிய தலைப்பை தீர்மா னித்தோம்.

ட்ரம்புக்கு சட்டரீதியில் பல பிரச்சினைகள் உண்டு. அவை தொடர்பாக மக்கள் ஆர்பாட்டங்கள் செய்த போதும் அவர் இதுவரை உரிய பதில் வழங்கவில்லை. அத்துடன் அவரது வெளிநாட்டுக் கொள்கைகள், பயணங்கள், நாட்டுக்கு உகந்தனவாக இல்லை. இனப் பாகுபாட்டையும், மத ரீதியான பிணக்குகளையும் அவரது கொள்கைகள் தோற்றுவிக்கக்கூடியன. ஏற்கனவே நாட்டில் ஆபிரிக்க அமெரிக்க பிரச்சினைகள் தலை தூக்கியுள்ள நிலையில், அவரது கொள்கைகள் மேலும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும்.

மேலும் அவரது வர்த்தகமும், முகாமைத்துவமும் சிறப்பானவை அல்ல. ஆயிரக்கணக்காக விதிமீறல் முறைப்பாடுகள் அவர்மீது பதியப்பட்டுள்ளன. அவரது வர்த்தகங்களில் பல இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. அவரது வரி ஏய்ப்புத் தொடர்பாக பிரத்தியேக சர்ச்சை வெடித்துள்ளது. கடந்த 40 வருடங்களில் அவர் வரிகளைச் செலுத்தவில்லை.

இவற்றை வெளிப்படுத்துவதன் அர்த்தம் ஹிலாரிக்கு நாம் ஆதரவு வழங்குவோம் என்றது அல்ல. பொது மக்களாகிய நீங்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர்கள் தொடர்பாகப் பெற்றுக் கொண்ட தகவல்கள்தான் இவை. வாக்களியுங்கள் ஆனால் டொனால்ட் ட்ரம்புக்கு அல்ல என யு.எஸ்.ஏ. ருடே தனது ஆசிரிய தலைப்பை முடித்துள்ளது. (ம-ரி4)

# ...ழந்தைகள் ...அபாயம்

...த்தான் தற்போது நைஜீரியக் குழந்
...திர்கொண்டுள்ளனர் என ஐக்கிய நாடு
...யின் குழந்தைகள் நிதியம் எச்சரித்தது.
...க் குழந்தைகளின் உயிர் நுலிழையில்
... கொண்டிருக்கிறது. மிகமிக அவசர
...வி அவர்களுக்குத் தேவை. அத்தனை
...களதும் போசாக்கு மட்டத்தை உயர்
... செய்யவும் பட்டினிச் சாவைத் தவிர்க்
... மில்லியன் டொலர்கள் தேவைப்படு
... நைஜீரிய மக்கள் சொல்லொணாத்
...க்கு ஆளாகின்றனர். பலர் ஒருவேளை
...ண்பதே சில நாள்களுக்கு ஒருமுறை
...ல இருந்து வருகிறது. அதுவும் அந்த
...ளையும் கஞ்சி மட்டுமே கிடைக்கிறது
...செப் தெரிவித்தது. (ம-ரி4)

# ஆஸ்திரேலியாவில் கடுமையான புயல்

சிட்னி, ஒக். 1

ஆஸ்திரேலியாவின் தெற்குப் பகுதியை நேற்றுமுன்தினம் குறுகிய இடைவெளிக்குள் இரு புயல்கள் தாக்கின.

ஆஸ்திரேலியாவின் தெற்குப் பகுதியை கடந்த 50 வருடங்களில் இல்லாத அளவுக்கு மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் இந்த இரு புயல்களும் தாக்கின. பிரதான மின்வழங்கி சேதமடைந்ததாலும், கம்பங்கள் முறிந்ததாலும் தெற்கு ஆஸ்திரேலியாவின் பெரும் பகுதி இருளில் மூழ்கியது. 80 ஆயிரம் மின்னல்கள் மின்னின. புயலை அடுத்துப் பெய்த மழையால் வீதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. வானியல் நிபுணர்கள் புயலை முன்கூட்டியே கணித்தமையால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. மக்கள் தமது உணவை ஏற்கனவே கொள்வனவு செய்து வைத்தமையால் உணவுக்கு தட்டுப்பாடும் நிலவவில்லை. (ம-ரி4)



சீனாவின் சாங்சி பகுதியில் அமைந்துள்ள பொகொங் என்ற கோவில், மரத்தை மட்டும் பாவித்து செய்யப்பட்ட உலகின் மிக உயரமான கோவில் என்ற கின்னஸ் சாதனையைப் படைத்தது. 1056 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்தக் கோவில், 67.31 மீற்றர் உயரம் உடையது. பகோடா என்ற ஒருவகை மரமே இந்தக் கோயிலின் கட்டுமானத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது. 54 வகையான மரக்கட்டடக் கலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (ம-ரி4)

# ...லப்போ தாக்குதல்களை ...ந்தும் எண்ணம் இல்லை

## ...காவுக்கு ரஷ்யா பதில்



...1
...லப்போ
...டுக்கப்
...க்குதல்
...ண்ணம்
...மரிக்கா
...ங்கியது

...ரசியல்
...னிக்கும்
...களான
...ம், ரஷ்
...டையில்
...ான ஒப்
...ந்ததைத்
... சிரியாவின்
...பரிய நகராக
...ில் உள்ள அர
...ர்ச்சிக் குழுவுக்கு
...ரச படையும்,
...ம் போக்கைக்
... வருகின்றன.
...களால் கடந்த
...ட்டத்தட்ட 600

பொதுமக்கள் சாவடைந்தனர். நகரின் பிரதான நீர்த்தாங்கியும் தகர்க்கப்பட்டதால் தண்ணீருக்கு அல்லல்பட வேண்டிய நிலையிலும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். போரைக் கைவிடும்படி ஐக்கிய நாடுகள் சபை விடுத்த அழைப்பும் நிராகரிக்கப்பட்ட நிலையில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா கொதித்தெழுந்து, அலெப்போ நகரில் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை உடன் நிறுத்துமாறும் அல்லாவிட்டால், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக ரஷ்யாவுடன் இணைந்து தாக்குதல் நடத்தும் ஒப்பந்தத்தை அமெரிக்காகைவிட வேண்டி வரலாம் எனவும் எச்சரித்தது. ஆனால் குறித்த நகரில் மேற்கொள்ளப் பட்டுவரும் தாக்குதல்கள் நிறுத்தப்படமாட்டாது என்று ரஷ்யா அறிவித்தது. சிரியாவில் போரை நிறுத்த வேண்டிய அவசியம் தென்படவில்லை. [illegible] களை இலக்குவைத்தே போர் இடம் பெறுகின்றது என ரஷ்ய தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருச்செல்வம் தவரத்தினம்

இந்துமதம் பரந்த நோக்கோடு மனித வாழ்வை மேம்படுத்தத் தக்க வகையிலுள்ளது. முன்னைப் பழம் பொருட்கும் முன்னணிப் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாக விளங்குகின்ற ஒரு வாழ்வியல் நெறியாகும். சமய வழியூடாக சமய, சமூக விழாக்கள், விரதங்கள் பண்டிகைகளை வகுத்து சமூக கலாசார ஒன்றிணைப்பின் ஊடாக மகிழ்ச்சியான நல்வாழ்வுக்கு வழிகாட்டுகின்றது. அந்த வகையிலே நவராத்திரிவிழா பல்வேறு சமயத்தவரையும் கவர்ந்துஈர்க்கின்றவகையில் தொழில் நிறுவனங்கள், பொதுநிறுவனங்கள், இல்லங்கள் என மக்களால் எங்கும் கொண்டாடப்படுகின்றது. நவராத்திரி வருடத்தில் நான்கு மாதங்களில் வருகின்றது. தை மாதத்து அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாள்களும் வரும் நாள்களை மகாநவராத்திரி என்று அழைப்பர். பங்குனி மாத வளர்பிறை முதல் வரும் ஒன்பது நாள்களும் வசந்த நவராத்திரி என்றும், ஆனி மாத வளர்பிறை பிரதமை முதல்வரும் ஒன்பது நாள்களும் நவராத்திரி என்றும் புரட்டாதி மாதத்தில் வளர்பிறையை அடுத்துவரும் ஒன்பது நாள்களும் சாரதா நவராத்திரி என்றும் பத்தாம் நாள் விஜயதசமி என்றும் கொண்டாடுகின்றோம். சக்தி விரதங்களிலே நவராத்திரி விரதம் மிகவும் முக்கியத்துவம் உடையது. இந்த வருடம் நவராத்திரி விழா பதினொரு நாள்கள் வருகின்றது. அதற்கான காரண காரியங்களை நோக்குவோம். சமயவிழாக்கள், கிழமை, மாதம், நட்சத்திரம், திதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அனுஷ்டிக்கப்படுகின்றன.

அந்தவகையில் இந்தவருடம் புரட்டாதி மாதத்து பூர்வ பட்ச பிரதமையானது இன்று காலை 6 மணிக்கு ஆரம்பமாகிறது. எனவே கும்பம் வைத்தல் நிகழ்வு காலை சூரிய உதயம் 6.05க்கு பின் ஆரம்பிக்கலாம். திதியை அடிப்படையாகக் கொண்ட இந்த நவராத்திரி விரதத்தின் 10 ஆம் நாள் எதிர்வரும் 10ஆம் திகதியாகும். மாலை 6.30 மணிவரை நவமித்திதி உள்ளது. அதன் பின்னரே தசமித் திதி கூடுகின்றது. எனவே விஜயதசமி என்பது இரு காரியங்களுடன் தொடர்புபட்டது.

1. ஏடுதொடக்கலும் விஜயதசமிப் பூசையும்
2. மானம்பூத் திருவிழா (மகிடாசுர சங்காரம்)

ஏடுதொடக்கல் மதியத்தின் முன் வருவது சிறந்ததாகவும், மானம்பூத் திருவிழா மாலை 3 மணியளவிலும் முன் இரவு வரை நடத்தப்படும். எனவே 11ஆம் திகதி மாலை 6.11 மணிக்கு முன்பாக மகிடா சுர சங்காரம் இந்த முறை செய்ய வேண்டும். நவராத்திரி காலத்தில் சக்தியை ஆகாவனம் பண்ணி கும்பம் வைத்தலுடன் நவராத்திரி ஆரம்பமாகின்றது. முதல்மூன்றுநாள்களும் கிரியா சக்தியான அன்னை துர்க்கைக்கும் அடுத்த மூன்று நாள்கள் இச்சாசக்தியாகிய திருமகளுக்கும் இறுதி மூன்று நாள்களும் ஞானசக்தியாகிய கலை மகளையும் வழிபடுகின்றோம். இந்துசமய வழிபாட்டு முறைகள் இந்திய துணைக் கண்டத்தில் இந்தியாவை அடிப்படையாக வைத்து ஆரம்பமானவை. இது சமய சமூக விழாவாக இருப்பதனால் வட இந்தியாவில் விழாக்கள் ஒரு விதமாகவும் தென்னிந்தியாவில் வேறுபட்டும் கொண்டாடப்படும். முதல் நாள் அம்பிகையை குமாரி வடிவமாக அலங்கரித்து மல்லிகை மலர் சூடி, வெண்பொங்கல் படைத்து வணங்குதல் வேண்டும். இரண்டாம் நாள் இராஜ ராஜஜேஸ்வரியாக மல்லிகை துளசிமாலை சார்த்தியும் புளியோதரை படைக்கலாம். 3ஆம் நாள் அம்பிகையை கல்யாணியாக உரு வகித்து சம்பங்கி மரிக்கொழுந்து மாலையால் அலங்கரித்து சர்க்கரை பொங்கல் படைக்கலாம். 4 ஆம் நாள் ரோகிணி தேவியாக உருவகித்து யாதி மல்லிகை முல்லை ஆகியவற்றால் அலங்கரித்து கதம்பசாதம் படைத்து வழிபடலாம். 5ஆம் நாள் காளி தேவியாக உருவகித்து பாரியாத மலர்களால் அலங்கரித்து தயிர்சாதம் படைத்து வழிபடலாம். 6ஆம் நாளில் சண்டியாதேவியாக உருவகித்து செம்பருத்திப் பூ, தேங்காய் சாதம் படைத்து வழிபடலாம். 7 ஆம் நாளில் அன்ன பூரணியாக மாதுளம் பூ, தாளம் பூ ஆகியவற்றால் அலங்கரித்து எலுமிச்சை சாதம் படைத்து வழிபட லாம். 8ஆம் நாள் அட்டதேவிகளும் எழுந்தருளும் துர்க்கையாக ரோஜாப்பூ சென்னிறப்பூக்களால் அலங்கரித்து பாயாசம் படைத்து வழிபடலாம். 9 ஆம் நாள் சிவசக்தியாகவும் சுமத்திராதேவி, காமேஸ்வரியாக, உருவகித்து செந்தாமரை மலர்களால் அலங்கரித்து பால் சாதம் படையல் செய்யலாம். நவராத்திரி காலங்களில் செந்தாமரை, செவ்வலரி, ரோஜா, செம்பகப்பூ, செம்பருத்திப்பூ, கதம்பம் பூ, மல்லிகை, சம்பங்கி, மரிக் கொழுந்து, துளசி ஆகிய மலர்களால் அர்ச்சனை செய்வது சிறப்பானதாகும்.

நாவற்குழியூர் ச.சிவராசா

# இன்று உலக முதியோர் தினம்




இயற்கையில் இருக்கின்ற எல்லாமே பருவ மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டவை. மனித வாழ்க்கையும் அவ்வாறேதான் அமைகிறது. இதனை ஆங்கிலக் கவி சேக்ஸ்பியர் அவதானித்தார். வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் ஆகிய பருவங்களை முறையே விடலை, இளமை, முதுமை, முடிவு என்பவையாக உருவாக்கினார். பிறப்பு, வளர்ச்சி, மூப்பு, சாக்காடு ஆகியவை மனித வாழ்வில் தவிர்க்க முடியாதவை. எனவே ஒவ்வொரு பருவத்தையும் மகிழ்ச்சியாகத் தயார் நிலையில் எதிர் கொள்ளும்போது ஒருவனுடைய வாழ்க்கை அர்த்தமுடையதாய் அமைகிறது. இன்றைய நவீன உலகில் மருத்துவம், தொழில்நுட்பம், போசாக்கு மட்டம் முதலியன சிறப்பாக வளர்ந்து விட்டன. அதனால் மனிதனின் சீவிய காலமும் நீண்டுவிட்டது. உலக நாடுகளின் முதியோர் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. எமது நாட்டிலும் இதே நிலைமையை அவதானிக்கின்றோம். முதியவரை ஓரிடத்தில் இருத்தி உணவு, உடை முதலிய கொடுத்துப் பாதுகாப்பது அரசுக்குப் பெரும் சுமையாக மாறி வருகிறது. ஆகவே, அவர்களிடம் இருக்கின்ற அனுபவம், திறமை, ஆளுமை முதலியவற்றை நாட்டுக்கு மீள்சுழற்சி செய்யும் பிரயத்தனங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. முதுமையின் ஆரம்பம் அறுபது அகவையில் என்றாலும் சேவைக் காலத்தை அறுபத்து ஐந்து ஆக உயர்த்தி விட்டார்கள். தனியார் துறைகளில் தகுதியான முதியவர்களின் சேவை வேண்டப்படுகின்றது.

முதுமை என்பது மீண்டும் ஒரு பிள்ளைப் பருவத்தின் ஆரம்பம் எனலாம். காலச் சக்கரமும் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு தடவை மாறுகிறது. கிரக நிலைகள் முதலியவையும் அறுபது ஆண்டு முடிவில் பிறக்கும்போது உள்ள திசைக்கு மாறி விடும். இன்றைய நிலையில் வாழும் முறைமை மாறிவிட்டது. எமது இளைய தலைமுறையினர் தடுமாற்றத்துடன் வாழத் தலைப்படுகிறார்கள். ஒரு பகுதியினர் சமூக விரோதச் செயல்களிலும் வன்முறைகளிலும் ஈடுபட்டு மறியலில் இருக்கிறார்கள். இன்னும் ஒரு பகுதியினர் தொழில் தேடி வெளிநாடுகளுக்குப் போகிறார்கள். வேறொரு பகுதியினர் வாழ்க்கைத் தேர்ச்சியில் எந்தத் திறன் விருத்தியையும் எட்டாமல் அன்றாடம் காய்ச்சிகளாக ஆகிவிட்டார்கள்.

மேலே சொல்லியவர்கள் நீங்கலாக எஞ்சியவர்களே ஓரளவுக்கு வாழ்க்கையை நடத்தும் திறனுடையவராய் உள்ளனர். இதனால் முதியவர்கள் பெரும்பாலும் உதவி தேவைப்படும் நிலையிலேயே இருக்கிறார்கள். தங்களுடைய தனிமையைப் போக்குவதற்கு வழிவகையைத் தேடுகிறார்கள். உறவுக்கும் அன்புக்கும் ஏங்கி நெஞ்சம் புண்ணாகி துன்பத்தில் ஆழ்ந்து விடுகின்றனர்.

சில வீடுகளில் பெற்றோரை வேண்டாததொன்றாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாட்டன் ஒருவர் இறந்த பின்பு அவரது பேரன் ஒரு காரியம் செய்தான். அவர் பாவித்த சாப்பாட்டுத் தட்டு, குவளை, சிறிய வாளி என்பவற்றை அவன் பத்திரப்படுத்தினான். தகப்பனார் வீசி விடும்படி கூறினார். அப்பா! நீங்கள் தாத்தாவான பிறகு பாவிப்பதற்கு இவை தேவைப்படும் என்றான் மகன். முற்பகல் செய்வது தானே பிற்பகல் விளையப் போகிறது. எனவே இன்றைய குடும்பங்கள் பெற்றோரை மதிப்பதற்கும் அனுசரித்துப் போவதற்கும் பழக வேண்டியதாய் உள்ளன. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.

வெளிநாட்டுக் காசு மட்டும் மூத்தோரின் மனப் புண்ணுக்கு மருந்தாகாது. இன்றைய இளந்தலைமுறையினரே நாளைய முதியவர்களாவர். இவர்களின் சமுதாயப் பிரஞ்ஞை அற்ற செயற்பாடுகளின் பலாபலனையும் இவர்களே அனுபவிக்க வேண்டியவர்கள் ஆவர். தலைநகருக்கு உத்தியோகம் பார்க்கச் சென்ற மகன் ஒருவன் தாயாருக்குக் கடிதம் எழுதுவதையும் நிறுத்தி விட்டான். தபால்காரனிடம் கடிதம் வந்ததா என்று ஒவ்வொருநாளும் காத்திருந்து விசாரித்துக் கொண்டாள். ஒருநாள் அவளைக் காணாது தபால்காரன் வீட்டினுள்ளே சென்று பார்த்தான். இறுதியாக உள்ள மூச்சுக்களை மட்டும் எண்ணிக்கொண்டிருந்த மூதாட்டியின் கண்கள் கடிதம் வந்ததா என்று விசாரித்தன. வராத கடிதத்தை வந்து விட்டதாகச் சொல்லி சில வரிகளை வாசித்துக் காட்டினார். அவரின் கற்பனை வரிகளால் பூரித்துப் போனாள். அவளுடைய உயிர் அமைதியாக உடலைப் பிரிந்து சென்றது.

உலகைத் துறந்த பட்டினத்தாரும் தாயனைத் துறக்கவில்லை. தன்னை வளர்த்த நன்றிக்காக தன் உயிரையே விலை கொடுத்த நாய்களின் கதைகளைப் படிக்கிறோம். இந்த விலங்கை விடவும் கீழானவராக மாறிவிட்ட மனிதனை என்னென்பது. முதியோர் காப்பகங்கள் தான் அதிகமாகி வருவதாக எல்லோரும் கவலைப்படுகிறார்கள். மேற்கத்தைய பாணியில் எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டு வருபவர்களுக்கு முதியோர் காப்பகங்கள் விருப்பத்துக்குரியவனாக இருக்கலாம். எமது பண்பாட்டில் இது இன்னுமொரு சீரழிவே ஆகும் என்றால் அது மிகையாகாது.

முதுமை அடைந்த உடலுக்கும் மனதுக்கும் எல்லாமே வேறுபடுகின்றன. வைத்தியம், உணவு, உடற்பயிற்சி, உளவள ஆற்றுப்படுத்தல் உதவியென எல்லாம் வேறுபடுகின்றன. இதனால் இவர்கள் எல்லாவற்றிலும் மற்றவர்களோடு ஒத்துப்போக முடிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமைக்குத் துணையாகும் தனிமை

த.கிருபாகரன்

இலங்கையில் அறுபது வயதைக் கடந்தவர்கள் மூத்தோர்கள் ஆகி விடுகின்றார்கள். குடும்பங்களில் மூத்தோர்களின் இருப்பு என்பது கேள்விக்குறியாகப் போகுமளவுக்கு குழப்பங்கள் நிறைந்துள்ளன. மூத்தோர்கள் தங்களுடன் மற்றவர்கள் கதைக்க வேண்டும் என்பதை விட தாங்கள் மற்றவர்களுடன் கதைக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள். மூத்தோரின் சிறப்பு அனுபவத்தின் இருப்பு ஆகும். அனுபவங்களை கலசங்களாகக் கொண்ட ஒவ்வொரு மூத்த குடிமகனும் நாட்டின் மிகப்பெரிய சொத்து. பன்னாட்டு முதியோர் வாரமாகிய ஒக்ரோபர் 01முதல் ஒக்ரோபர் 7 வரையான காலப்பகுதியில் எமது மூத்தோருக்காகச் சிந்திப்பது சிறந்த விடயமாகும்.

உலகில் எந்தப் பொருளும் அழிவடையும் என்பது விதியாகும். இருப்பினும் இரண்டே இரண்டு விடயங்கள் மட்டும் பழமையடைய பழமையடைய பெருமையடைகின்றன. ஒன்று ஆலயங்கள். தொன்மையான ஆலயங்களை வழிபடும்போது வேண்டுதல் நிறைவடைகின்றது. ஆத்மிக அதிர்வுகளால் காலம் காலமாக நிரப்பப்பட்ட இந்தச் சூழலுக்கு கடவுளின் சக்தி இருப்பதாக வேதங்களில் கூறப்பட்டுள்ளது. நேரான நல்ல சிந்தனைகள் நல்லதையே விளைவிக்கும் என்பதும் ஆய்வுகளின் முடிவாக உள்ளது. மொத்தத்தில் உயரிய சக்தி ஒன்று இத்தகைய நிலைமைக்கு வழிகோலியுள்ளது. இரண்டாவது மூத்தோரின் வயது முதுமையடைய முதுமையடைய மூத்தோருக்கு மிகப்பெரிய சக்தி கிடைத்து விடுகின்றது. இதனால் தான் மூத்தோரின் ஆசீர்வாதம் என்பது இறைவனின் ஆசீர்வாதத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. குழந்தையாகப் பிறந்த மனிதன் குழந்தையாகியே இறக்கின்றான். முதுமையில் ஒரு வளர்ந்த குழந்தையாகவே இருக்கின்றான். குழந்தைக்குரிய குணங்களில் மிதக்கின்றான். தோற்றமும் மனங்களின் மாற்றமும் முதுமைத் தோற்றத்தை வரவழைத்து குழந்தைக் குணத்தை இருப்பிடமாக்கிக் கொள்கின்றன.

வீடுகளில் மூத்தவர்களின் தேவை என்பது இன்று இல்லாது போய்விட்டது. குழந்தைப் பராமரிப்புக்கு மட்டும் மூத்தோர் பயன்பாடு உள்ளவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். விருந்தினர்கள் வந்தால் கூட ஒதுங்க வேண்டியவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அல்லது கொல்லைப்புற அடுப்படியின் சொந்தக்காரர்களாக உயில் எழுதி வைக்கப்பட்டுள்ளனர். அன்பைக் கொட்டி பண்பை வளர்த்து சமூகத்தில் நெஞ்சை நிமிர்த்தி நடைபோடச் செய்தவர்களுக்கு 'முதுமை'ப் பட்டம் தனிமையைக் கொடுத்து நடைப்பிணமாக்கி உள்ளது. முதுமையில் கொடுமை தனிமை ஆகும். இதை வீடுகளில் அனுபவிக்கும் மூத்தோருக்கு காத்திரமாக வழி ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்காகத் தான் முதியோர் பகல் நிலையங்கள் கிராமங்களில் அவசியமாக்கப்பட்டுள்ளது. பொறி தட்டிய சிந்தனைகள் என்னுள் மீண்டும் உறைந்து கொள்கின்றன.

> மூத்தோர்களின் முகவுரைகள் சமூகத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். தன்னிகரில்லா உழைப்பின் செய்திகள் ஊன்றி உணர்த்தப்பட வேண்டும். பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்கும் பருவம் தான் முதுமைப்பருவம். இவையெல்லாம் இன்றைய சமூகத்தின் தேவைப்பாடாகவே உள்ளன. முதுமையின் இயலாமை என்பது தான், சமூகம் புறந்தள்ளுவதற்குரிய காரணியாக உள்ளது. இயலாமையில் பராமரிப்பது என்பது சவாலான ஒருவிடயமாக இருக்கின்றது.

மூத்தோர்களின் முகவுரைகள் சமூகத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். தன்னிகரில்லா உழைப்பின் செய்திகள் ஊன்றி உணர்த்தப்பட வேண்டும். பழைய நினைவுகளை மீட்டுப்பார்க்கும் பருவம் தான் முதுமைப் பருவம். இவையெல்லாம் இன்றைய சமூகத்தின் தேவைப்பாடாகவே உள்ளன. முதுமையின் இயலாமை என்பது தான், சமூகம் புறந்தள்ளுவதற்குரிய காரணியாக உள்ளது. இயலாமையில் பராமரிப்பது என்பது சவாலான ஒருவிடயமாக இருக்கின்றது. கூடவே அடம்பிடித்தல் என்பதும் இயலாமையின் தோற்றுவிப்பாக அமைகின்றது. இந்நிலையில் மிகமோசமான நிலையை மூத்தோர்கள் எதிர்நோக்குகின்றார்கள். இந்த நிலையில் அதிக காலம் உயிர்வாழ்பவர்கள் அழுதே காலத்தைக் கடத்துகின்றார்கள். இத்தகைய நிலையில் பராமரிப்பை ஒவ்வொரு குடும்பமும் தெரிந்திருப்பது அவசியமாகின்றது. இதற்காக அரச முதியோர் இல்லத்தில் முதியோர் பராமரிப்புச் சேவை தொண்டராகப் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நோயாளர் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு இவை இரண்டும் சேர்ந்த பராமரிப்பு ஒன்றே தேவையாக உள்ளது. இந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள் தனது குடும்பத்துக்கும் உதவலாம்; பிறர் குடும்பத்துக்கும் உதவலாம்.

சமூகத் தொடர்பாடல் என்பது சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய தன்மையை ஏற்படுத்துகின்றது. தனித்துவிடப்படுவது என்பது சமூகத் தொடர்பாடலை சரியாகப் பயன்படுத்தியவர்களுக்கு ஏற்பட்டதில்லை என்பது ஆய்வுகளின்முடிவாகி உள்ளது. முதுமையில் பரம்பரைக் குணங்கள் வெளிப்பட்டுவிடுகின்றன. இளமையில் கல்வியாலும் பழக்கவழக்கங்களாலும் அடைக்கப்பட்டிருந்த பரம்பரைக் குணங்கள் முதுமையில் பூதாகரமாகின்றன. சில கூடாத விடயங்கள் எல்லாம் வெளிப்படுகின்றன. இது இன்னொரு வகைக் சவாலாக உள்ளது. முதுமையில் அதீதமான ஆத்மிக ஈடுபாடுகள் இத்தகைய கூடாத குணங்கள் வெளிப்படுவதைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும் நேரான எண்ணங்கள் சுகமாக முதுமையடைதல் என்ற தத்துவத்தை கடைப்பிடிப்பவர்களும் இதிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். எமது மனதின்உறுதிதான்நிலைபேற்றுக்கு வழிசமைக்கும் என்ற சமூகவியல் உண்மையும் இந்த விடயத்தில் வலுச் சேர்க்கின்றது. மூத்தோர்களை ரோபோக்கள் போன்று கருதுதல் தவறாகும்.

மூத்தோர்களை மதிக்கும் சமூகமும் இருக்கின்றது. தமது பெற்றோர் வீதியில் அலைவது, முதியோர் இல்லங்களில் அனுமதிக்காக முயற்சிப்பது என்பவற்றை கௌரவக் குறைவாக கருதுகிறார்கள். குறிப்பாக தமது பெற்றோரை இத்தகைய நாடல்கள் ஏற்படும் போதெல்லாம் கவலை கொள்கின்றார்கள். முதியவர்களுக்கு ஏதோ தேடிய ஒன்று அந்தக் குடும்பத்தில் கிடைக்காமையே இதற்குக் காரணமாகின்றது. முதியவர்கள் நினைத்தது கிடைக்காவிட்டால் மீண்டும் மீண்டும் அவ்வப்போது நச்சரிப்பது வழக்கமாக உள்ளது. இந்த வேளையிலும் பராமரிப்பில் இடைவெளி ஏற்படுகின்றது. சிறுபிள்ளைகளை சமாளிப்பது போன்ற உத்தியே பயன்படுத்தப்பட வேண்டும். உடனடியான பாதகமான முடிவும் முதுமையைப் பாதிக்கின்றது. முடியாது என்பதையும் பக்குவமாகச் சொல்ல வேண்டிய தேவை உள்ளது. மூத்தோர் தம்மை ஒத்தவர்களின் கருத்துக்களை மட்டும் ஏற்பதில் ஆர்வம் உள்ளவர்களாக காணப்படுகின்றார்கள். எனவே மேதாவித்தனமான அணுகுமுறை சிறந்தது அல்ல.

முதுமையில் மனநிலை பாதிப்பு என்பது நிறைய அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது. இத்தகைய பராமரிப்பில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுதல் தேவையாக உள்ளது. அன்புடன் கண்களால் பாருங்கள், அன்புடன் காதுகளால் கேளுங்கள், அன்புடன் கரங்களால் கடமையாற்றுங்கள் அன்பான எண்ணங்களை எண்ணுங்கள், அன்பான வார்த்தைகளைப் பேசுங்கள், ஒவ்வொரு நாளத்திலும் அன்பை உணருங்கள்... என்ற தத்துவங்களை இந்தஇடத்தில் மீட்டுப்பார்க்க வேண்டி உள்ளது.

மகிழ்ச்சியாக இருக்கப்பழகுங்கள், பரிசுத்தமாக சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் பிறருக்கு உதவுங்கள், யாரையும் வெறுக்காதீர்கள், சுறுசுறுப்பாக இருங்கள், தினமும் உற்சாகமாக வரவேற்கத் தயாராகுங்கள். மகிழ்ச்சியாக இருக்க முயற்சி மேற்கொள்ளுங்கள் என முதியோர் பராமரிப்பின் சவால்களுக்கு தீர்வாக காற்றில் அசைந்து கொண்டிருந்த வாக்கியங்கள் விடை பகிர்ந்து கொள்கின்றன.

இன்று முதியோரின் இறப்பு என்பது சமூகத்தில் சமாளிக்க முடியாத செலவாக உள்ளது. இறப்பில் பெரிய ஒரு இருப்பு காலியாக்கப்பட வேண்டும். இதுவும் முதியோரை வைத்திருப்போருக்குப் புயமாக உள்ளது. இறுதிச்சடங்குகள் கூட இன்று பக்கேஜ் முறைக்கு மாறியுள்ளன. எந்தப் பக்கேஜைத் தெரிவு செய்வது என்பதும் ஊராரின் நேர்முக வர்ணனைக்கு ஈடுகொடுப்பது என்பதும் இறுதிச் சவாலாகும். எல்லோரது அபிப்பிராயங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். இல்லையேல் பிரேரணையில் தோற்றவர் நாடாளுமன்றத்தைவிட்டு வெளி நடப்புச் செய்வதைப்போல சாவுவீட்டிலிருந்து வெளிப்புநடப்புச் செய்துவிடுகிறார். ஒரு ஊரின் முழுப் புதினமும் கட்டவிழ்த்து விடப்படும் இடமாக சாவுவீடு, அதுவும் முதியவர் ஒருவரின் சாவுவீடு மறுபிறவி எடுத்துவிடுகின்றது. முதியவர்களின் இறப்பு நூலகங்களின் எரிப்புக்கு ஒப்பானது என்பார்கள் . இதற்கு மேலாக இன்று மூத்தோரின் சாவுவீட்டில் இன்னுமொரு குடும்பக் குழப்பத்துக்கான கருவும் உருவாக்கப்பட்டு விடுகின்றது. இதைப்பார்த்து பயந்து இறப்பதற்கு முன்பே முதியவர்கள் சாவீட்டிற்கென பணம் சேர்க்கும் கலாசாரம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் மூத்தோர்கள் சமூகத்தில் வைத்து பராமரிக்கப்படும்போது அவர்களின் முதுமையின் தேடலுக்கான விடயங்கள் கிடைத்துவிடுகின்றன. முதியோர் இல்லங்கள் மூத்தோரின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத்தீர்வு அல்ல. மூத்தோரைக் காத்தோர் உயர்வடைவர். மூத்தோரைப்பராமரித்தலே நாகரிகத்தின் வெளிப்பாடாகும். முதுமையில் தனிமை மிகக் கொடியது. எமது மூத்தோரை நாமும் பராமரித்து நாகரிகத்தின் வளர்ச்சிப்படிகளில் ஏறிக்கொள்வோம். முதுமைக்குத் துணையாகும் தனிமைக்கு விடை கொடுப்போம்.

கட்டுரையாளர்:
அத்தியட்சகர், அரசமுதியோர் இல்லம் கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சி.நற்குணலிங்கம்



# சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே!

இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி, அனைத்துலக சிறுவர் நாளாகும். இந்த நாளை பன்னாட்டு அரசுகளும், அமைப்புக்களும் , பாடசாலைகளும், தொண்டு நிறுவனங்களும் கொண்டாடி வருகின்றன. பதினெட்டு வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களே. உலக மக்களின் பெரும்பாலும் 1/3 பங்கினர் சிறுவர்களே. சிறுவர்கள் வருங்காலச் சிற்பிகள், நாட்டின் முதுகெலும்பு, வளம் மிக்க தூண்கள். எனவே சிறுவர்களை வளமுள்ளவர்களாக ஆக்க அத்தகைய திறன்களையும், தேர்ச்சிகளையும் சிறுவயதிலேயே உரமிட்டு, அடித்தளமிட்டு வளர்த்தெடுக்க வேண்டும். அவ்விதம் வளர்த்தெடுக்கத் தவறின் நாளைய உலகு களவு, கொலை, பலாத்காரம், வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம் என்பன நிறைந்த கலாசார சீரழிவுள்ள சமுதாயமாக அமையும் குழந்தையின் எதிர்காலம் நேரிய, சீரிய பாதையில் தடம்பதிக்க சிறுவயதிலேயே சிறந்த குறிக்கோள் அவசியம். சிறுவர்களை குறிக்கோளுடன் வளருங்கள். அந்தக் குறிக்கோள் பிள்ளையின் மனதிலும் ஊற்றெடுக்க பெற்றோர் வழி செய்ய வேண்டும். சிறுவயது முதலே பண்பாட்டு விழுமியங்களை ஊட்டி வளர்க்க வேண்டும். அதேவேளை பெற்றோர்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்களைக் கற்று அதன் வழி ஒழுகி பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். பெற்றோரின் தீய நடத்தைகள், வேண்டப்படாத பழக்க வழக்கங்கள் சிறுவர்களது மனதைப் பாதித்து அவர்களது கல்வி, ஒழுக்கம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கையையும் சீரழிக்கும். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்பதற்கமைய பெற்றோர் குழந்தைகள் விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

நல்ல எண்ணங்கள் மிகவும் வலிமையானவை. அவை நல்லவற்றையே கொண்டுவந்து சேர்க்கும். நீங்கள் உங்களை வலிமையானவராக நினைத்தால் வலிமையானவர்களாக மாறுவீர்கள். மாறாக பலவீனராக நினைத்தால் பலவீனமாகிவிடுவீர்கள் என்ற விவேகானந்தரின் நற்சிந்தனைகளை ஊட்டி வளருங்கள். மேலும் சிந்தனைகளை நேராக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சிந்தனைகளே வார்த்தைகளாகின்றன. வார்த்தைகளை நேராக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் வார்த்தைகளே செயலாகின்றன. செயல்களை நேராக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் செயல்களே நடத்தைகளாகின்றன. நடத்தைகளை நேராக வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் நடத்தைகள் உங்கள் விழுமியங் களாகின்றன. விழுமியங்களை நேராக வைத்துக் கொள்ளுங்கள் உங்கள் விழுமியங்கள் உங்கள் வாழ்க்கை இலக்காகின்றன.

சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகள், தேவைகள் என்பவற்றை சிறுவர்கள் சரியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை பன்னாட்டு சிறுவர் தினம் உணர்த்துகின்றது. 1979ஆம் ஆண்டு பன்னாட்டு சிறுவர் ஆண்டாக முதன் முதல் பிரகடனமானதிலிருந்து பன்னாட்டு சிறுவர் தினம் கொண்டாடப் படுகின்றது. எல்லாப்பிள்ளைகளும் வயது, பால், நிறம், சாதி, மதம், மொழி ஆகியவற்றால் வேறுபட்டிருப்பினும் சகல உரிமைகளையும் அனுபவிக்க சிறுவர்களுக்கு உரிமை உண்டு. சிறுவர்களது உரிமைகளை ஒவ்வொருவரும் பேணிப்பாதுகாக்க வேண்டும். சிறுவர்களுக்கென சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1990 செப்ரெம்பர் 20ஆம் திகதி நடைமுறைப் படுத்தப் பட்டது. இதில் இலங்கை 1991.07.12ஆம் திகதி அங்கத்துவ நாடாக தன்னை இணைத்துக் கொண்டது. சிறுவர்கள் பற்றிய சமவாயத்தில் 40 உறுப்புரைகள் சிறுவர்கள் பற்றியதாகும். இவ்வாறு அவர்களது உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட போதும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், சிறுவர் துஷ்பிரயோகம், கடத்துதல், விற்றல், பாலியல் சுரண்டல் போன்றவற்றால் சிறுவர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சிறுவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமைய வேண்டுமானால் சிறுவர்களது உரிமைகள் மீறப்படுவதை தடுத்து நிறுத்தி அவர்களதுஉரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

சிறுவர்களது உலகம் சிறுவர்களுக்கே. எதிர்கால சமூகமாக செயற்படப் போகின்றவர்கள் இன்றைய சிறுவர்களே. சிறந்த சிறுவர்கள் உருவாக்கத்தில் பெற்றோர் பங்களிப்பே முக்கியமானதாகும். பெற்றோருடனான தொடர்பிலும், இயல்பிலும், அளவிலும் சிறுவர்களது ஆளுமைச் சிதைவின் இயல்பும், அளவும் தங்கியுள்ளது. எனவே இரு பகுதியினருக்குமான தொடர்பு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். பள்ளிப்பருவத்திலே பெற்றோர் கற்றலுக்கான சூழலை வீட்டில் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மகிழ்ச்சிகரமான கற்றல் சிறுவர்களது அறிவையும் ஆளுமையையும் செழிப்பூட்டும். சிறுவர்கள் எப்போதும் பெற்றோரின் அரவணைப்பில் வாழ வேண்டும். சிறுவர்களது பாதுகாப்புக் கவசம் பெற்றோரே ஆகும். சிறுவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்டமைப்புக்குள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்கள்.

சிறுவர்களுக்கு சிறந்ததோர் சிறுவர் உலகத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அந்தச் சிறுவர்கள் பெரியவர்களானால் அவர்களைச் சிறந்ததோர் உலகின் பங்காளிகள் ஆக்குவதற்கும் சிறுவர்களை இன்றுமுதலே மதித்து நடக்க வேண்டும்.

இலங்கையில் ஒவ்வொரு நாளும் மூன்று தொடக்கம் ஐந்து சிறுவர்வரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுகின்றனர். ஹென்றிகெம்பி என்பவர் தவிர்க்கக்கூடிய சாதாரண விருத்திப் போக்கு நிலைகுலைதல் சிறுவர் துஷ்பிரயோகம் எனக்கூறுகின்றார்.

பெற்றோர்கள் சிறுவர்களது நோய் விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழியை மனதில்கொண்டு உண்ணுவதற்காக நாம் வாழாது, வாழ்வதற்காக உணவை உண்ண வேண்டும். போசாக்கான உணவில் கவனம் செலுத்த வேண்டும். பசிக்கும் போது புசிக்க வேண்டும். உடற்பயிற்சி, யோகா என்பவற்றிலும் சிந்தனை கொள்ள வேண்டும். தொட்டிற் பழக்கம் சுடுகாடுவரை. நல்ல ஒழுங்கு முறைகளை சிறுவயதிலேயே கற்றுக் கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் தேவையற்ற, பொருத்தமற்ற கட்டுப்பாடுகள், தவறான தண்டனை முறை, கல்வித்திணிப்புக்கள், மற்றும் உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகாத வகையில் எமது பார்வையை நாம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமான பிள்ளைகளே. அவர்களது தனித்துவமான ஆற்றல்களை உச்ச அளவில் விருத்தி செய்து நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான மனித வளங்களை விருத்தி செய்து நாட்டுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் சிறுவர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு எல்லோரையும் சாரும். எல்லோரும் ஒன்றுபட்டு இயங்கினால் சிறுவர் உலகம் சிறுவர்களுக்கானதாகவே அமையும்.

## இன்று உலக சிறுவர் தினம்



## புதியதோர் உலகம் செய்து மகிழ இளையோரே எழுந்துவாரீர்!

எதிர்கால விடியல்களே வரலாற்றேட்டில்
இணைகின்ற புதுவரிகள் நீங்களன்றோ
புதிரான புதிதான செயல்களாலே
பொன்னுலகைச் சமைக்கின்ற ஆக்கம் நீங்களே
கதிர்தோன்றி நிலாத்தோன்றி விண்மீன் தோன்றி
கண்டங்கள் தோன்றிவிட்டால் முழுமையுண்டா...?
மதியாலே மாறி நிற்கும் புதுமைக்கோலம்
மனிதகுல கைவண்ணப் படைப்பே யன்றோ...!

அன்னை தந்தையெனும் இருவர் சேர்ந்தே
அவ்விரவில் எழுதி வைத்த கவிதை நீங்கள்
பின்னர்வரும் உலகத்தார் உமை படிக்க
பெருமைமிகு காவியமாய் ஆக வேண்டும்
தன்னாலே வளர்வது தான் உடலம் ஆனால்
சலியாத படிப்பினாலே உழைப்பினாலே
பொன்னான மூளைவளம் பெருக்கவேண்டும்
புதுமைகளை பூமியிலே படைக்க வேண்டும்

மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வேண்டுமெனில் ஒற்றுமை வேண்டும்..! சொற்கேண்மை வேண்டும்..! உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்..!

தமிழர்களின் வரலாற்றிலே ஓய்வின்றிய இயங்கு நிலை என்பது என்றும் நலன் தரவில்லை. எப்போதும் முரண்களையே தந்துள்ளது. குறிப்பாக இந்த இயங்குநிலை என்பது உரிமை என்ற பணியோடு கலக்கமாகவே தொடர்புறுகிறது. கடந்து வந்த நீண்ட பயணங்களை எடுத்து நோக்கினால் நிம்மதிப் பெருமூச்சற்ற அமைதியின் அகிம்சாவாத தியானங்களும், போராட்டங்களும், ஊர் தாண்டிய ஓட்டங்களும் அதிகப் படியாகத் தந்தது வலிகளையே. தீராத ரணங்களையே. உண்மையிலே நியாயமான ஒன்றுதிரள்வும் அதன் வழி வந்த வீரம் என்ற திலகமிட்ட தியாகங்களும் செய்த அர்ப்பணிப்புகளும் பயன் தரவில்லை. திட்டமிட்ட செயலுருவங்கள் மூலம் தமிழின அழிவின் நிலைத்திருப்புக்கள் தாயகத்தில் நிலை நிறுத்தப்பட்டன. தற்போதும் நிலைநிறுத்தப்படுகின்றன.

இந்த நிலையிலே தமிழர்களிடம் இருந்து வருகின்ற விடுதலை உணர்வினையும் ஒற்றமையின் கூட்டிணைவான பகிர் வினையும் சிதைப்பதற்கான கைங்கரியங்கள் வடபுலத்தில் தீவிரம் பெற்றிருக்கின்றன. குறிப்பாக தற்காலத்தின்வழி தமிழர்களுக்கென குரல்தரவல்ல ஜனநாயகச் செயலிகள் என்று சொல்லப்படுபவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி அந்நிய ஊடுருவல்களின் பிரித்தாளும் தந்திரங்களுள் உட்புகுந்து கொண்டு இடர்படத் தொடங்கியுள்ளனர். மாகாணத்தின் தலைமைகள் தீர்க்கமான, திடமான முடிவெடுத்தலின்றி தன்னிச்சையான சிந்தனை வெளிகளின் நியாயப்படுத்தல்களோடு மாற்று வழிகளின் வழி பய ணிக்கத் தொடங்கியுள்ளனர்.

தீர்வுகள் என்ற தமிழர்களுக்கான ஒருமுகப் பயணங்களிடை இவர்கள் திரண்டு முட்டுக் கட்டை போடும்விதமான மாயா விகளாக இருமுக வேடங்களை தரிக்கத் தொடங்கியுள்ளனர். இதன் எதிர்வினைகள் தற்போது இனவாத முகங்களை தெற் கிலிருந்து வடக்கை நோக்கியதாக ஊர விட்டுள்ளது.

ஆக, விடுதலை வேண்டுமெனில் தூர நோக்குள்ள ஒற்றுமை எனும் சிந்தனை வெளியுள்ள மனிதர்களாக தமிழ்த் தலைமைத்துவங்கள் மாற்றங் கொள்ள வேண்டும். செயலாற்ற முன்வர வேண்டும்.! காரியங்களும் கதை பேசும்.! உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்...! அதற்காய் ஓர் கதை படியுங்கள்..!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக்கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங்குழல் வாசித்துக்கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகாய் ஒரு ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கமாய் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள்ளாள் முகத்தை நுழைத்துக்கொண்டு, எதையோ வேடிக்கை பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டியொன்று, உனக்கு என்னவேண்டும்? என்று கேட்டது.

ஓநாயும் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு நண்பா! இங்கே இளம் பச்சையான புற்கள் கிடைக்குமா என்றுதான் பார்க்கிறேன்! அவற்றில் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்றுவிட்டு, ஜில்லென்ற தண்ணீரைக் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை.. என்று வருத்தத்துடன் கூறியது.

அப்படியா ஓநாயரே! நீர் புல்லைச் சாப்பிடுவீரா? நீர் மாமிசம்தான் சாப்பிடுவதாக எனது அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே? என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி. அச்சச்சோ! அதெல்லாம் சுத்தப் பொய்! என்றது ஓநாய்.

அப்படியென்றால் இரும் ஓநாயாரே! நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கமாக இளம்புற்கள் இருக்குமிடத்தைக் உமக்குக் காட்டுகிறேன். நாம் இருவருமாகப் போவோம்! அதைச் சாப்பிட்டுவிட்டு, நண்பர்களாக சுதந்திரமாக சுற்றலாம்..! என்று சொல்லியது ஆட்டுக்குட்டி. வேலி இடுக்கின் வழியாக நுழைந்து கொண்டு, ஓநாயிருந்த பக்கமாகப் போனது.! தாமதமின்றி செயலருப்பெற்ற ஓநாய் அதன் மீது பாய்ந்தது. அதைக் கொன்று தின்றது. ஆட்டுக்குட்டியின் நம்பிக்கை வீண்போனது.!

உண்மையில் அந்த ஆட்டுக் குட்டிக்கு யார் நல்லவன் யார் கெட்டவன் என்பதனை சுய அறிவின்பால் தெரிந்து கொள்ள முடியவில்லை! அது போகட்டும், பரவாயில்லை. அனுபவம் நிறைந்தவர்களான அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், ஆட்டுக்குட்டி மதிப்புமிக்க தன் உயிரை இழந்திருக்காது அல்லவா!



# முதுமை என்பது ஒரு வரம்




பளையூர் பா.பாலாஜினி

வாழ்வின் பல அனுபவங்களையும், தடயங்களையும் சேமித்து வைத்திருக்கின்ற பொக்கிசங்கள் முதியவர்கள். மனித வாழ்வின் வரலாற்றை, பண்பாட்டை எடுத்துக் காட்டுகின்ற முக்கிய அடையாளமே இவர்கள் தான். முதியவர்கள் என்ற சிறப்புப் பெயர் இவர்களுக்கு வரக் காரணம் இவர்கள் வயதில் மூத்தவர்களாக இருப்பதால் மட்டுமல்ல அறிவில் சிறந்தவர்களாக இருப்பதனாலும் தான் இந்தப் பெயர் அவர்களுக்கு ஏற்பட்டது.

இத்தகைய மூத்தோர்கள் எமது வாழ்க்கைக்கு எவ்வளவு அத்தியாவசிமானவர்கள் என்று எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின் றீர்களா? இன்று எத்தனையோ நவீன இயந்திரங்களின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவற்றுக்கு அடிமைப்பட்டு அவல வாழ்க்கை வாழ்கின்றோம். சரியாக நின்று நிதானித்து சிந்திப்பதற்குக் கூட எமக்கு நேரம் கிடைப்பதேயில்லை. உணர்வுகளை இழந்துவிட்டு சடப்பொருள்களாக வாழ்கின்றோம். ஆனால், நமது மூத்தோர்கள் அப்படி வாழவில்லை. உணர்வுபூர்வமாக வாழ்ந்தவர்கள். அதனால் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் அணு அணுவாக அனுபவித்து அதன் அனுபவங்களை அடிமனதில் பதிய வைத்திருப்பார்கள். நாம் அவர்களுடன் இணைந்து வாழ்ந்தால் அவர்களின் அனுபவங்களைக் கொண்டு எங்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள நிச்சயமாக முடியும். அவர்களும் எங்களைப்போல இளமைக் காலத்தை அனுபவித்தவர்கள்தான். எனவே அவர்களை எதுவும் தெரியாதவர்கள் என்று மட்டமாக நினைத்துத் தள்ளிவிட முடியாது. நாம் தேடித் தேடிச் சென்று பழக வேண்டியவர்கள் தான் இவர்கள். ஆனால் இத்தகைய சிறப்பு மிக்கவர்கள் இன்று என்ன நிலையில் உள்ளார்கள்? அவர்கள் இளம் வயதினரால் கவனிக்கப்படுகின்றார்களா? என்றால் நிச்சயமாக இல்லை. அவர்கள் அநாதரவாக விடப்பட்டுள்ளார்கள் என்பதுதான் உண்மை.

சிறுவயதில் இருந்தே நம் பாடசாலைப் புத்தகங்களில் மூத்தோரைக் கனம் பண்ணு, முதியவர்களுக்கு உதவி செய் என பல வாசகங்களைப் படிக்கின்றோம். முதியோர்தினங்களில் பாடசாலை, மற்றும் சமூக ரீதியாக பல விழிப்புணர்வுப் பேரணிகளிலும் ஈடுபடுகின்றோம். இருந்தும் தனிப்பட்ட முறையில் வாழ்க்கை என்று வரும் போது முதியோரைக் கனம் பண்ணுவதிலும், பாதுகாப்பதிலும் பின்னிற்கின்றோம். அதற்குக் காரணம் என்னவாக இருக்கும்? பாடசாலைக் கற்பித்தல் முறைகளில் உள்ள குறைபாடுகளா? அல்லது நாம் அதனை உணர்ந்து கொண்ட விதத்தில் ஏதேனும் தவறுகளா? நிச்சயமாக தவறு முழுக்க எம்மில் தான் உள்ளது. நாம் படித்தவற்றை ஒரு போதும் வாழ்க்கையில் பிரயோகிப்பதே இல்லை.

முதியோர் இல்லங்களில் தம் பெற்றோர்களைக் கொண்டு விட்டவர்கள் பேரன் பேர்த்திகளை முதியோர்கள் முன் காட்டுவதில் கூட பின்னிற்கின்றார்கள். ஆனால் தாங்களும் ஒரு காலத்தில் முதியவர்கள் தான் என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் படித்தவர்கள் தான் படிக்காதவர்களையும் விட அதிக அளவில் முதியோர்களைத் தள்ளி வைக்கின்றனர். தங்களுடைய நாகரிகமான வாழ்க்கை முறைக்கு அவர்களால் பங்கம் ஏற்படுவதாக இவர்கள் கருதுகின்றார்கள். அவர்களுடன் வாழ்வதும் அவர்களுக்காக நேரத்தைச் செலவிடுவதும் வீண் என்று எண்ணுகின்றனர். அதிலும் இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டின் சிறுவர்கள் மிகவும் மோசம். முதியவர்களைத் தமது வீட்டில் வைத்திருந்தால் தமது நண்பர், நண்பிகள் எள்ளி நகையாடுவார்கள் என்று அஞ்சி வெறுத்தொதுக்குகின்றார்கள். நாள் முழுக்க இயந்திர மற்றும் நவீன சாதனங்களில் மூழ்கி இருக்கும் அவர்கள் அவற்றைவிட பெறுமதியான நூலகங்களைான முதியவர்களைத் தள்ளி வைக்கின்றோம் என்பதை கொஞ்சமும் சிந்திப்பதேயில்லை. இந்த நிலை தொடர்ந்தும் இவ்வாறே அமையும் என்றால் நிச் சயம் இளைஞர்களின் வாழ்க்கை இருளை நோக்கிப் போய்விடும். இது மறுக்கமுடியாத உண்மை.

ஆனாலும் இவ்வாறு அநாதரவாக விடப்படும் முதியவர்களைப் பேணிப்பாதுகாப்பதற்காக அரசும், வேறு பல அமைப்புகளும் முதியோர் இல்லங்களை அமைத்துச் செயற்படுத்துகின்றன. அவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்கின்றன. என்னதான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் தம் பிள்ளைகளுடனும், பேரன், பேர்த்திகளுடனும் வாழ்வதைப் போல சந்தோசம் அவர்களுக்குக் கிடைத்துவிடுமா? இல்லையே. மனம் விட்டுப் பேசுவதற்கு யாருமே இல்லாது தம்மன உணர்வுகளை எல்லாம் அடக்கிவைத்து வேதனைப்படுகின்றார்கள். மெத்தை வசதிகளோடு கூடிய படுக்கை அறைகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தாலும் பேரன், பேர்த்திகளின் மடியில் தலை வைத்துத் தூங்கத் தானே அவர்கள் ஆசைப்படுவார்கள்.

முதியோர் இல்லங்களில் தம் பெற்றோர்களைக் கொண்டு விட்டவர்கள் பேரன், பேர்த்திகளை முதியோர்கள் முன் காட்டுவதில்கூட பின்னிற்கின்றார்கள். ஆனால் தாங்களும் ஒரு காலத்தில் முதியவர்கள் தான் என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றார்கள். அத்தோடு தங்களுடைய இந்தக் குறைபாட்டை தம் பிள்ளைகளுக்கும் பழக்கிவிடுகின்றார்கள். இவ்வாறு நடப்பதனால் வழிவழியாக வருகின்ற பரம்பரை எல்லாம் முதியோர்களை மதிக்காத சமூகமாகவே உருவாகிவிடும். முதியோர் தினம் கொண்டாடப்படுவதே முதியவர்களை மதிக்க வேண்டும் என்ற பண்பை நம்மிடையே வளர்ப்பதற்குத் தான். அதிலும் சிறுவர் தினமான ஒக்ரோபர் 01 அன்று முதியோர் தினம் கொண்டாப்படுவது முதியவர்களும் ஒரு வகையில் சிறுவர்கள்தான் என்பதை உணர்த்துவதற்காகவே. சிறுவர்களைப் போலவே முதியவர்களுக்கும் நிறைய ஆசைகளும், ஏக்கங்களும் உண்டு. அவற்றை நிறைவேற்ற வேண்டிய கடமை எம்மைச் சார்ந்தது தான்.

வெளிநாடுகளிலெல்லாம் முதியோர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களின் ஆரோக்கியம் தொடர்பாகப் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. எமது நாட்டிலும், இதை விட முக்கியமான பல பிரச்சினைகளில் போராடவேண்டி ஏற்பட்டுள்ளதால் இதைப்பற்றிப் பெரிதாகக் கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை. நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்க ஜனாதிபதியாக வரும்போது அவரது வயது 76. பிரதமர் மோடியின் வயது 65.

பார்த்தீர்களா? முதியவர்கள் சமானியப்பட்டவர்கள் அல்ல. மிகச் சக்தி வாய்ந்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணவரை களமிறக்கிய சிம்ரன்!

திருமணம் செய்து கொண்ட பல மாஜி நடிகைகள் சினிமாவில் தொடர்ந்து ஒப்பந்தமாகி வருகின்றனர். ஆனால் முன்னணி நடிகையாக இருந்த சிம்ரனுக்குத்தான் மீள் வாய்ப்புப் பெரிதாக அமையவில்லை. 'ஆஹா கல்யாணம்' 'திரிஷா இல்லன்னா நயன்தாரா', 'கரையோரம்' போன்ற படங்களில் சிறிய அளவில் நடித்தவர்; தொடர்ந்து அழுத்தமான கதாபாத்திரங்களில் நடிக்க முயற்சித்து வருகிறார். அதோடு தனது கணவர் தீபக்கையும் முன்னணி நடிகர்களின் படங்களில் அறிமுகம் செய்ய வாய்ப்புக் கேட்டு வந்தார் சிம்ரன். ஆனால் அவர் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

அதனால் முன்னணி நடிகர்களின் படங்களுக்காக காத்திருந்து காலம் கடத்த வேண்டாம் என்று இப்போது தனது கணவர் தீபக்கை ஓடு ராஜா ஓடு என்ற படத்தில் வில்லனாக களமிறங்கி விட்டுள்ளார் சிம்ரன். நிஷாந்த் ரவீந்திரன், ஜதின் சங்கர்ராஜா என்ற இரட்டையர் இயக்கும் இந்தப் படத்தில் ஜோக்கர் குருசோம சுந்தரம் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். அவர்களுடன் சாருஹாசன், நாசர் போன்ற முன்னணி நடிகர்களும் நடிக்கும் இந்தப் படம் காமெடி கதையில் உருவாகி யிருக்கிறது.






# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 4 | 6 | 7 | | | |
| | | 3 | | | | | | |
| | | 8 | | | | | 1 | |
| | 7 | | 9 | | | | | 8 |
| 6 | | | | | | | | 2 |
| 1 | | | | | 5 | | 3 | |
| | 4 | | | | | 5 | | |
| | | | | | | 7 | | |
| | | | 8 | 2 | 4 | 3 | | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 7 | 1 | 6 | 2 | 4 | 5 | 3 |
| 5 | 1 | 3 | 8 | 7 | 4 | 9 | 6 | 2 |
| 2 | 4 | 6 | 9 | 3 | 5 | 1 | 8 | 7 |
| 3 | 6 | 9 | 7 | 8 | 1 | 5 | 2 | 4 |
| 7 | 5 | 2 | 4 | 9 | 6 | 3 | 1 | 8 |
| 1 | 8 | 4 | 5 | 2 | 3 | 7 | 9 | 6 |
| 6 | 7 | 5 | 3 | 1 | 8 | 2 | 4 | 9 |
| 4 | 3 | 8 | 2 | 5 | 9 | 6 | 7 | 1 |
| 9 | 2 | 1 | 6 | 4 | 7 | 8 | 3 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல்வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




ரீச்சர்: 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' இது பழமொழி; நீ இதுக்கு புதுமொழி சொல்லு!



மாணவன்: 'கழுகுக்கும் தன் குஞ்சு எவர்சில்வர் குஞ்சு' ரீச்சர்...!

டாக்டர்: ஏன் சார்... எதுக்கு நர்ஸ் கையை தடவிப் பார்த்தீங்க...?



நோயாளி: நீங்கதானே சொன்னீங்க... ஊசி போட்ட கையை நல்லா தடவிக் கொடுங்கனும் எண்டு...!




யாருடைய ஆசைகளும் நிறைவேறாமல் இருப்பதில்லை. முயலாதவர்களின் ஆசைகள் மட்டுமே நிறைவேறாமல் போய்விடுகிறது.




**மேடம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள், பாராட்டுப் பெறுவர்.


**இடபம்:** நீண்டநாள் பிரச்சினையில், நல்ல முடிவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.


**மிதுனம்:** பணிகளில் தகுந்த முன்னேற்பாட்டுடன் செயற்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள், பணம், நகையை இரவல் கொடுக்க வேண்டாம். உடல்நலத்தைப் பாதுகாக்கவும்.


**கடகம்:** பொதுநல சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தினருடன் சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.


**சிங்கம்:** நீங்கள் தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், விடா முயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.


**கன்னி:** செயல்களில் தர்ம, நியாயத்தை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிக்கானபுதியவாய்ப்புக்கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.


**துலாம்:** குடும்ப சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், விடா முயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள், பொருள்களை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.


**விருச்சிகம்:** தர்ம சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும். நண்பருடன், விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.


**தனுசு:** பேச்சு மற்றும் செயலில் சாதுர்யமாக விளங்குவீர்கள். எதிரிகள் இடம் மாறிப் போகிற சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.


**மகரம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் உருவாகலாம். உங்கள் நலன் விரும்புவரின் ஆலோசனை, நல்வழி காட்டும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் ஓரளவே கிடைக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்தைத் தவிர்க்கவும்.


**கும்பம்:** பிறருடன் பேசுவதில் நிதானத்தை பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில், நிலுவைப்பணியை நிறைவேற்றுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஆலோசனை, வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.


**மீனம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். ஆர்வத்துடன் பயன்படுத்தி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு



சிப்பிகளால் வடிவமைக்கப்பட்ட மணிக்கூடுகள் அறிமுகமாகியுள்ளன. மேசை மணிக் கூடுகளான இவை பல்வேறு பட்ட வடிவங்களில், பல சிப்பிகளால் உருவாகியுள்ளன. இவை 850 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இயற்கை பொருள்களால் உருவாக்கப்பட்டதால் அதிக அழகுடன் மிளிர்கின்றன.

## வெந்தய களி



தேவையான பொருள்கள்
பச்சரிசி – 1 கப்
வெந்தயம் – 1/4 கப்
கருப்பட்டி 100 கிராம்
தேங்காய் துருவல் – கால் கப்



செய்முறை:

அரிசி வெந்தயம் இரண்டையும் 2 மணி நேரம் ஊறவைத்து தோசைமாவு பதத்திற்கு அரைத்துக் கொள்ளவும்.

பாத்திரத்தில் கருப்பட்டி கொட்டி நீர் கலந்து, பாகுஆக்கி வடிகட்டி எடுக்கவும்.

பின்பு சட்டியில் அரைத்த மா கருப்பட்டி பாகு, தேங்காய் 2 டம்ளர் தண்ணீர் எல்லாம் நன்கு கலந்து அடுப்பில் வைத்து நன்கு கிளற வேண்டும்.

மா பாத்திரத்தில் ஒட்டாமல் திரண்டு வர வேண்டும். பச்சை தண்ணீரில் விரலை விட்டுவிட்டு மாவைத் தொட்டால் அது விரலில் ஒட்டக்கூடாது. அதுவே சரியான பதம்.

வெந்தயக்களி வெயில் காலத்திற்கு மிகவும் நல்லது. உடல் சூட்டைத் தணிக்கும்.

## நாளை

புரட்டாதி-16
ஞாயிற்றுக்கிழமை -02.10.2016
திதி:பிரதமை கா. 07.07
நட்சத்திரம்: சித்திரை பி.இ.02.43
ராகுகாலம்: 04.32-06.02 வரை
சுபநேரம்: 09.02-10.32 வரை

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 80 | 50 | 80 | 80 | 60 | 40 | 90 | 35 |
| கரட் | 80 | 100 | 120 | 120 | 100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 70 | 80 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 150 | 100 | 160 | 140 | 160–200 | 40 | 100 | 60 |
| பாகல் | 100 | 80 | 120 | 120 | 180–200 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 100 | 120 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 100 | 80 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 50 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 100 | 80 | 80 | 80 | 60–70 | - 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 70 | 60 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 170 | 60 | 100 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 50 | 50 | 60 | 60 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 60 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 60 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 160 | 200 | 200 | 200 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 100–120 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 30 | 40 | 35–40 | 35–40 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 110 | 110 | 120 | 120 | 100–140 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 250 | 260 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 90 | 160 | 120 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 100 | 90–100 | 200 | 80 | 100 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 1000 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 700 | 400 | 600 | 700 | 800 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 400 | 440 |
| சுறா | 500 | 700 | 500 | 800 | 800 | 700 | 600 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 500 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 500 | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | 300 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | – | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 400 | 300 | 300 |
| [illegible] | 100 | 200 | 50 | 70 | 80 | 200 | – |
| [illegible] | 400 | 250 | 300 | 400 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 400 | 200 | – |

## மருத்துவ பலன்கள் நிறைந்த அதிசயக்கனி எலுமிச்சை



- எலுமிச்சம் பழம் பித்தத்தைப் போக்கும், தலைவலி தீர்க்கும், மலச்சிக்கல் விலக்கும், தொண்டை வலியைப் போக்கும், வாந்தியை நிறுத்தும், காலராக் கிருமிகளை ஒழிக்கும், பல் நோய்களை குணப்படுத்தும், வாய் நாற்றத்தைப் போக்கும், சர்ம நோய்களைக் குணப்படுத்தும், வித்தை முறிக்கும், வாய்ப்புண்ணை ஆற்றும், தேள் கடிக்கு உதவும், மஞ்சக்காமாலையை நீக்கும், வீக்கத்தைக் குறைக்கும், வாயுவை அகற்றும், பசியை உண்டாக்கும், விரல் சுற்றிக்கு உதவும், யானைக்கால் வியாதியை குணப்படுத்தும்.
- தினமும் எலுமிச்சை உண்பவர்கள் கதிரியக்கத்தைத் தாங்கி தப்ப முடியும். புற்று நோய்க்காரர்களுக்கு எக்ஸ்ரே சிகிச்சையால் ஏற்படும் கதிரியக்கத்தைத் தீங்கையும் எலுமிச்சை தடுக்கிறது.
- விளையாட்டு, ஓட்டப் பந்தயம், கடுமையான வேலை இவற்றால் ஏற்படும் களைப்பை நீக்க ஒரு எலுமிச்சப் பழத்தை எடுத்து உடனே கடித்துச் சாற்றையோ அல்லது பிழிந்து சீனி போட்டோ குடித்தால் உடனடி தெம்பு ஏற்படும். [illegible] மீண்டும் உண்ணும்போது எலுமிச்சை பழச்சாறு [illegible] அஜீரணப் பிரச்சினைகள் நேர்வதைத் தடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## கூகுளின் அல்லோ

பிரபல இணைய தேடுபொறி நிறுவனமான கூகுள் அல்லோ என்ற பெயரில் புதிய செய்தி பரிமாற்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

கூகுள் நிறுவனம் இந்த ஆண்டு மே மாதம் டியூ எனப்படும் காணொளி அழைப்பு சேவை வசதி செயலி மற்றும் அல்லோ எனப்படும் செய்தி பரிமாற்ற செயலி ஆகியவற்றை கொண்டுவர உள்ளது என்று அறிவிப்பு செய்தது.

அதைத் தொடர்ந்து கடந்த மாதம் டியூ சேவை முறைப்படி அறிமுகம் செய்யப்பட்டது. ஒரு மாதத்துக்குள் பத்து லட்சம் பேர் அதனை தங்கள் அலைபேசிகளில் பதிவிறக்கம் செய்தனர். அதனைத் தொடர்ந்து கூகுள் தற்போது அல்லோ செய்தி பரிமாற்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.




இந்த அல்லோ செய்தி பரிமாற்ற செயலியானது உள்ளிணைந்த கூகுள் தேடுபொறி வசதியுடன் வெளிவருகிறது. இதன் காரணமாக ஏதாவது ஒரு விடயத்தை இணையத்தில் தேடுவதற்காக உரையாடல் செயலியிலிருந்து வெளியில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. கூகுள் உதவு ஒருங்கிணைப்பு வசதியும் இதில் இடம்பெற்றுள்ளது. மேலும் பயனாளர்கள் தங்கள் கூகுள் கணக்கை இத்துடன் இணைத்துக் கொள்ளலாம்.

அதில் பல்வேறு தரப்பினரும் பயன்படுத்துவதற்கு ஏதுவான எமோஜிகள் மற்றும் ஸ்டிக்கர்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால் வட்ஸ் அப்பில் இடம்பெற்றுள்ள கோப்புகள் பரிமாற்றம் மற்றும் குரல்வழி அழைப்பு வசதி போன்ற வசதிகள் தற்போது இந்தச் செயலியில் இடம்பெறவில்லை. ஆனால் வெகுவிரைவில் குரல்வழி அழைப்பு வசதி அல்லோ செயலியில் இடம்பெறுமென்று கூகுள் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வட்ஸ் அப்பின் புதிய வசதி

வட்ஸ் அப்பில் புதிய பதிப்பு வந்துள்ளது. அதில் குழு அரட்டையை அமைதியாக்கினாலும் (மியூட்) கூட அறிவுறுத்தல்களை நமக்கும் காண்பிக்கும் வகையில் இந்த புதிய பதிப்பு உள்ளது. இதனால் அறிவுறுத்தல்களில் இருந்து இனி வட்ஸ் அப் குழுக்களில் உள்ளவர்கள் தப்பிக்க முடியாது.

முகப்புத்தகத்தில் ரெக் செய்வது போல் வட்ஸ் அப் குழுவிலும் ரெக் செய்யும் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் விரும்பும் ஒருவருக்கு குழுவில் டேக் செய்து அனுப்ப முடியும்.




இதனால்முக்கியமான செய்திகளை யாரும் தவறாமல் படிக்க முடியும். இப்படி ரெக் செய்யப்படும் நபர், குழுவை அமைதியாக்கி வைத்திருந்தாலும் கூட, அறிவுறுத்தல்கள் காட்டும். அதே போல வட்ஸ்அப் கமரா கொண்டு செல்ஃபி எடுத்தால் பிளாஷ் செயற்படும்.

இது வட்ஸ்அப் கமராவுக்கு மட்டும்தான். அலைபேசி கமராவுக்குக் கிடையாது. அதே போல, உங்கள் அலைபேசியில் முன்பக்க பிளாஷ் இல்லையெனில் இந்த வசதி இருக்காது. அதே போல ரெக் செய்யும் இந்த அப்ளிகேன் ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ் பயனாளர்களுக்கு மட்டும் தான்.

# அதிநவீன ஏ.ரி.எம். இயந்திரங்கள் கொமர்ஷல் வங்கியால் அறிமுகம்




வழமையான ஏ.ரி.எம் மற்றும் பண வைப்பு இயந்திரங்களின் இயல்புகளுக்கு மேலதிகமாக சிறப்பியல்புகளைக் கொண்ட முன்னேற்றகரமான புதிய தலைமுறை இயந்திரங்களை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது. உடனடியாக கணக்கு வைப்பில் வரக்கூடிய விதத்திலான பண வைப்பு முறையும் இதில் அடங்கும்.

பணவைப்பு மற்றும் மீளப் பெறல் இயந்திரங்கள் கட்டம் கட்டமாக தனது 251 கிளைகளிலும் அறிமுகம் செய்யப்படும் என்று இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

கார்ட்டுகள் அற்ற பண வைப்பு இந்த இயந்திரங்கள் மூலம் சாத்தியமாகும். அத்தோடு புதிய பண வைப்பு இயந்திரம் மூலம் மூன்றாம் தரப்பு கணக்கிற்கான பண வைப்பும் சாத்தியமாகும். பாவனைப் பட்டியல் கட்டணங்களைச் செலுத்தல், கொமர்ஷல் வங்கி கிரடிட் கார்ட் கொடுப்பனவுகளைச் செலுத்தல் என்பனவற்றையும் இதனூடாகச் செய்யலாம் என்று வங்கி அறிவித்துள்ளது. ஒரே நேரத்தில் 200 நோட்டுக்களை எண்ணக் கூடிய அதிநவீன வசதி இந்த இயந்திரத்தில் காணப்படுவதால் இனிக் கடித உறைகளின் தேவையும் அவசியம் அற்றதாகின்றது. இதன் மூலம் சுற்றாடலுக்கு சிநேகமானதாகவும் இந்த இயந்திரம் அமைந்துள்ளது.

மேலதிகமாக இந்தப் புதிய இயந்திரங்கள் மீதிகளை சரிபார்த்தல், தொடர்புபட்ட கணக்குகளுக்கு இடையில் நிதிகளை மாற்றுதல், தனிப்பட்ட அடையாள இலக்கங்களை மாற்றல் ஆகிய சேவைகளையும் வழங்கக் கூடியவை. ஒவ்வொரு செயற்பாட்டுக்குமான விரிவான பற்றுச் சீட்டுக்களும் விநியோகிக்கப்படும் என வங்கி அறிவித்துள்ளது.

தொழில்நுட்பத்தின் மீதான எமது தொடர் கவனம் எமது திடசங்கற்பத்தால் தூண்டப்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வசதியான பாதுகாப்பான ஆற்றல் மிக்க வசதிகளை வழங்க வேண்டும் என்பதே எமது சங்கற்பமாகும் என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம்.

2015 இல் கொமர்ஷல் வங்கி புதிய தலைமுறை தன்னியக்க பண வைப்பு இயந்திரங்களை அறிமுகம் செய்தது. இதன் மூலம் முற்றாக காகிதப்பாவனை முடிவுக்குக்கொண்டு வரப்பட்டது. இது புதிய பசுமை வங்கி முறைக்கு வழிவகுத்தது. கொமர்ஷல் வங்கியின் டெபிட் அல்லது கிரடிட் அட்டை கொடுப்பனவுகளையும் இதன் மூலம் செய்யலாம். 5000, 1000, 500 மற்றும் 100 என நான்கு வகை பண நோட்டுக்களை இது ஏற்றுக் கொள்ளும். பழுதடைந்த அல்லது செல்லுபடியற்ற நாணயத் தாள்களும் ஏனைய வெளிநாட்டு நாணயத் தாள்களும் இந்த இயந்திரத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இவை ஒரு நிராகரிப்புத் தட்டின் மூலம் மீண்டும் வாடிக்கையாளருக்கே வழங்கப்படும். அதேபோல் நாணயக் குற்றிகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

வங்கியின் டிஜிட்டல் தளம் தற்போது வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக வங்கிச் சேவைகளைப் பெறக் கூடிய நான்கு வகை இயந்திரங்களின் சேவைகளை வழங்குகின்றது. பாரம்பரியமான ஏ.ரி.எம் இயந்திரங்கள், பண வைப்பு இயந்திரங்கள், காசோலை வைப்பு இயந்திரங்கள், தற்போதைய பண வைப்பு மற்றும் மீளப் பெறல் என்பனவையே அவையாகும்.

பணத்தை மீளப் பெறக் கூடிய 638 ஏ.ரி.எம் இயந்திர வலையமைப்பை வங்கி கொண்டுள்ளது. நாட்டில் தனி ஒரு வங்கி கொண்டுள்ள மிகப் பெரிய வலையமைப்பு இதுவாகும். ஒரு வங்கிக் கிளை ஒன்றுக்குள் பிரவேசித்துப் படிவங்களை நிரப்பாமலே தமது வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்ளக் கூடிய 700 தளங்களை வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது.

ஆறு வருடங்களாக தொடர்ந்து உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியான கொமர்ஷல் வங்கி நாடு முழுவதும் 251 கிளை வலையமைப்பைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

வணிகம்

# கைதடி சிறுவர் பாடசாலைக்கு கிறீன்கிறாஸ் ஹோட்டல் உதவி



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு, யாழ். கிறீன்கிறாஸ் ஹோட்டல் நிறுவனத்தினரால், கைதடி சிறுவர் பாடசாலையின், வாகனத் தரிப்பிடத்தைப் புனரமைத்து வழங்கும் நிகழ்வும், பாடசாலை சிறுவர்களின் மகிழ்ச்சியான கற்றலை ஊக்குவிக்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாகக் கட்டடச் சுவர்களில் கார்ட்டூன் சித்திரங்களை வரைந்து வழங்கும் நிகழ்வும் உலக சுற்றுலா தினமான கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் கிறீன்கிறாஸ் ஹோட்டல் நிறுவன ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (தி)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

30/9/2016 | www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 6.47 | 6,534.77 | 6,528.30 |
| S&P SL20 | -5.61 | 3,617.32 | 3,622.93 |
| வியாபாரப்புரள்வு | | 1,320,595,456 | 479,366,592 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 909,162,240 | 424,831,712 |
| விற்பனை | | 913,647,744 | 431,771,264 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 411,433,248 | 54,534,892 |
| விற்பனை | | 406,947,744 | 47,595,332 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| டிஸ்டில்லரீஸ் நிறுவனம் | DIST.N0000 | 240.00 | 1,487,615 | 353,985,196 |
| எல் பி பைனான்ஸ் | LFIN.N0000 | 126.90 | 1,504,380 | 191,055,683 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N0000 | 27.20 | 4,605,011 | 125,947,421 |
| பீப்பிள்ஸ் லீசிங் & பைனான்ஸ் | PLC.N0000 | 18.70 | 1,747,552 | 32,712,394 |
| கல்பிட்டிய பீச் ரிசார்ட் | CITK.N0000 | 5.00 | 6,295,299 | 31,992,675 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N0000 | 860.00 | 36,262 | 31,188,338 |
| லங்கா செஞ்சுரி இன்வெஸ்ட்மென்ட்ஸ் | GREG.N0000 | 12.60 | 2,496,614 | 30,783,942 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N0000 | 154.00 | 177,989 | 27,410,131 |
| சிலோன் கிறேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N0000 | 96.50 | 268,896 | 26,005,621 |
| ரோயல் செராமிக்ஸ் | RCL.N0000 | 124.70 | 203,729 | 25,648,810 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
அசோசியேட் மோட்டார் (AMF) பங்கு ஒன்றிற்கு Rs. 15.00
நமுனுகுல பிளான்டேஷன்ஸ் (NAMU) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.50
ஹிக்கடுவா பீச் ரிசார்ட் (CITH) - பங்கு ஒன்றிற்கு Rs. 0.10

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 229 |
| விலை உழைப்பு | 13.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

K.K.S.Road Jaffna - 212221455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம்...

தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

அரசியல் தீர்வு தொடர்பில் பல வேலைத் திட்டங்கள் எம்மால் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் எல்லா விடயங்களும் ஏதோ இரகசியமாக நடத்தப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்களை பல்வேறு தரப்பினரும் முன்வைக்கிறார்கள். ஏற்றுக்கொள்கின்றோம். சில விடயங்கள் இரகசியமாகத்தான் நடக்கின்றன. பேச்சுக்கள் சம்பந்தமான விடயங்கள் விரைவில் வெளிவரும். அதற்கான சூழலை ஏற்படுத்துவதில் நாங்கள் தீவிரமாக இறங்கியிருக்கின்றோம்.

நாங்கள் கடைப்பிடிக்கின்ற மௌனத்துக்குக் காரணங்கள் இருக்கின்றன. எமது முயற்சிகள் தொடர்பில் வெளியில் பேசுவதில்லை என்ற உறுதியான தீர்மானத்தில் இருக்கின்றோம். எதைப் பற்றிப் பேசுகின்றோம், எப்படியான இணக்கப்பாடுகள் பேச்சு மேடையில் எட்டப்பட்டன போன்ற விடயங்கள் வெளியே தெரிய வந்தால், அதில் பங்கெடுத்த ஒவ்வொரு கட்சியும் தமது நிலைப்பாடுகளைப் பகிரங்கப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படும்.

பகிரங்கப்படுத்திய பின்னர், பேச்சு மேசையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியாது. விடயம் தெரிந்தவர்களுக்கு இது விளங்கும். சில விடயங்களைச் சில காலத்துக்கு இரகசியமாக வைத்திருக்காவிட்டால் பேச்சு மேசை பலமற்றுப் போய்விடும்.

இப்போது நடக்கின்ற அரசமைப்பு உருவாக்கம் பற்றிய வழிகாட்டல் குழுக் கூட்டங்களில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டம் மாபெரும் திருப்பு முனையான கூட்டமாக அமைந்தது. நாட்டின் ஆட்சிமுறை எப்படி இருக்க வேண்டும், நாட்டின் ஆட்சியமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதில் பெரிய முன்னேற்றம் காணப்பட்டிருக்கின்றது.

அரசமைப்பு வழிநடத்தல் குழுக் கூட்டங்களில், கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பேசினால் பிரதமர், ஜனாதிபதி மற்றையவர்கள் எல்லோரும் அமைதியாகி விடுவார்கள். அப்படியான முறைக்குள்ளால் எமது நகர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இணக்கப்பாடுகள் பல எட்டப்பட்டுள்ளன.

ஒரு முக்கியமான விடயத்தில் மாற்றம் வந்திருக்கின்றது. அந்த மாற்றம் - திருப்பு முனை வருவதற்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவர் சொன்னார், ஏன் நீங்கள் இதை மட்டும் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஏனைய விடயங்களில் நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கிறோம்.

காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், ஆளுநர் முறைமாற்றம் என்று எல்லாவற்றிலும் நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கிறோம். கூடுதலான அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று இணங்கியிருக்கின்றோம். இந்த ஒருவிடயத்தில் மட்டும் ஏன் இறுகப் பிடித்திருக்கின்றீர்கள் என்று அவர் கேட்டார். அவருக்கு நான் சொன்னேன், எங்களுக்கு இந்த விடயம் முக்கியம். எனவே அதில் இறுக்கத்தை காட்டுகிறோம் என்றேன்.

கட்டாயம் இது நடக்கும் என்று கூறவில்லை. நடப்பதற்கு உரிய சந்தர்ப்பங்களை நாங்கள் செய்தோம் என்ற திருப்தி எங்களுக்கு இருக்க வேண்டும். எங்களால் இது நடக்காமல் விட்டது என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றோம். பேச்சு மேசையில் நாங்கள் செய்வது மட்டுமல்ல எங்கள் செயற்பாடும் அப்படி இருக்க வேண்டும். எனவே சில சந்தர்ப்பங்களில் நேரம் பொருத்தமில்லை எனக் கூறுகின்றோம்.

இதனை அடைவதற்கு நாங்கள் தடையாக இருந்தோம் என்று பன்னாட்டுச் சமூகமோ வேறு யாருமோ எங்களைக் குற்றம் சாட்டாதபடி நாங்கள் நடந்து கொள்கின்றோம்.

எங்கள் மக்கள் எங்களை நம்புவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. இடைக்கால அறிக்கை வெளிவருகின்றபோது எல்லாம் வெளிவரும். அது வரைக்கும் மக்கள் நம்பிக்கை காக்க வேண்டும். சில சில விடயங்கள் நடக்குமா நடக்குமா என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தால், எதுவும் நடக்காமலே போய்விடும். ஆட்சிமாற்றமும் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடக்குமா எனக் கேட்டு நம்பிக்கையிழந்திருந்தால் அது நடந்தேயிருக்காது என்றார்.

(வ-5-109)

## பொலிஸ்...

பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து, வீட்டில் அடையாளம் காணப்பட்ட பகுதியில் அம்மன் சிலையை தேடும் மண் அகழ்வு முயற்சிகள் நேற்று இடம்பெற்றன. மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் அகழ்வு முயற்சிகள் இடம்பெற்று 10 அடி ஆழம்வரை தோண்டப்பட்ட போதும், எந்த வகையிலான பொருள்களும் மீட்கப்படவில்லை.

மன்னார் எழுத்தூர் செல்வ நகர் பகுதியில் ஆசிரியர் ஒருவருடைய வீடு வளாகத்தில் 'அம்மன் சிலை' புதைக்கப்பட்டுள்ளதாக ஆசிரியருக்கு கனவுகள் வந்துள்ளன. இதை அடுத்து வீட்டில் தொடர்ச்சியாக இனம்தெரியாத நபர்களின் நடமாட்டமும் காணப்படுவதாகவும், இதனால் தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து, அந்த ஆசிரியர் கடந்த மாதம் 27 ஆம் திகதி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இந்த முறைப்பாடு தொடர்பாக மன்னார் நீதிவான் மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆசிரியரின் வீட்டில் அடையாளம் காணப்பட்ட பகுதியை அகழ்வதற்கு நடவடிக்கைகள் பொலிஸாரால் எடுக்கப்பட்டன. மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. சுமார் 10 அடி வரை தோண்டப்பட்ட போதும், எதிர்பார்த்த அம்மன் சிலையோ அல்லது வேறு எந்த தடயப் பொருட்களோ மீட்கப்படவில்லை. அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அகழ்வுப் பணியின் போது தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், தடயவியல் நிபுணத்துவ பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் முன்னிலையாகியிருந்தனர். சுமார் 2 மணித்தியாலங்கள் அகழ்வு பணிகள் இடம்பெற்றன.

(வ-5-21-56)

## பிரபாகரனின்...

முயற்சி உண்மையா னால், அது வெறும்கனவாக மாத்திரமே இருக்க முடியும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தமிழ் சமூகத்தை இக்கட்டான நிலைக்குக் கொண்டு செல்வதை விடுத்து, ஜனாதிபதி மற்றும் பிரதமருடனான பேச்சு மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வரவேண்டும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கோரிக்கைகள் புதிதானவையல்ல. இவை இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் முன்வைக்கப்படும் கோரிக்கைகளாகும். இவை நாட்டுக்குப் பொருந்தாதவை என்ற வகையில் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லையெனத் தெரிவித்து வருகிறார். மகிந்த ராஜபக்சவோ, அரசு வடக்கைப் பிரித்து வழங்கப் போவதாக கூறுகிறார்.

உண்மையில் இது இரண்டுமே நடக்கவில்லை. நாட்டைப் பிரிக்க விரும்பும் அடிப்படைவாதிகள் தெற்கில் போலவே வடக்கிலும் உள்ளனர். இவர்கள் இவ்வாறான சூழ்நிலைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். இதுவே நாட்டின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு பாதகமாக அமைகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

(வ-5)

## பொலிஸ் நிலையத்தில்...

விக்கப்படும் இடத்துக்கு நேற்று நேரில் சென்று தீவிர விசாரணைகளை மேற்கொண்டார் கம்பளை நீதிவான்.

மாதிரி ரீசேட்டைப் பயன்படுத்தித் தூக்குப்போட்டுக்காட்டுமாறு பொலிஸாரிடம் நீதிவான் பணித்தார். இரண்டு, மூன்று தடவைகளுக்கு மேல் அதைக் கண்காணித்தார். பின்னர் பதிவுகளை எடுத்துக் கொண்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் விளக்கம் கேட்ட நீதிவான், பல கோணங்களில் விசாரணைகளையும் முன்னெடுத்தார்.

புசல்லாவ ரொத்சைல்ட் தோட்டத்தைச் சேர்ந்த நடராஜ் ரவிச்சந்திரனின் உயிரிழப்புத் தொடர்பான வழக்கு கடந்த 23ஆம் திகதி கம்பளை நீதிவான் மன்றத் தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, சம்பவ இடத்தை தான் நேரில் பார்வையிட வேண்டுமென நீதிவான் சாந்தனி மீகொட தெரிவித் திருந்தார். இதற்கமையவே அவர் நேற்று அங்கு சென்றிருந்தார். இது தொடர்பான இரண்டாம் கட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறும்.

புசல்லாவ பொலிஸ் நிலையத்தில் தடுப்பிலிருந்த இளைஞர் மர்மமாக உயிரிழந்ததையடுத்து பிரதேச மக்கள் வீதியில் இறங்கி மாபெரும் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

(வ-5)

## கோத்தபாய...

தொடர்பில் விசாரணைக்காக நீதிமன்றத்தில் முன்னிலையான பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 8 பேரையும் நேற்று பிணையில் விடுவித்தது கொழும்பு நீதிவான் மன்றம்.

இது தொடர்பான விசாரணை கொழும்பு நீதிவான் மன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, தலைமை நீதிவான் கிஹான் பிலப்பிட்டி பிணை அனுமதியை வழங்கினார்.

கோத்தபாய ராஜபக்ச மற்றும் அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி உள்ளிட்ட 8 பேரும் தலா 2 இலட்சம் ரூபா காசுப் பிணை மற்றும் 10 மில்லியன் ரூபா ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு, அவர்கள் வெளிநாடு செல்லவும் நீதிமன்றம் தடை விதித்து.

இந்த விசாரணையின்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் நீதிமன்ற வளாகத்தில் பிரசன்னமாகியிருந்தார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்ட அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியம் மற்றும் அதில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் கோத்தபாய ராஜபக்சவிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

(வ-5)

## இது...

இந்தப் போராட்டத்தினால் ஏ-9 வீதியின் ஊடான போக்குவரத்தும் சில மணிநேரம் தடைப்பட்டது.

கொக்குவெளி, போகஸ்வெவ, மாமடு, மடுக்கந்த, கள்ளிக்குளம், அக்போபுர பிரதேசங்களிலிருந்து பேருந்துகளில் ஏற்றப்பட்ட மக்கள், அங்கிருந்து கொறவப்பொத்தான முதன்மை வீதியில் வெளிக்குளம் சந்திக்கு கொண்டுவரப்பட்டனர். அங்கே மக்களை இறக்க ஏற்பாட்டாளர்கள் முயற்சித்த போதும், பொலிஸார் இடம்கொடுக்கவில்லை. இதனையடுத்து இறம்பைக்குளம் விருந்தினர் விடுதிக்கு முன்பாக உள்ள வவுனியாக் குளத்தில் பேருந்துகளில் ஏற்றி வரப்பட்ட மக்களை ஏற்பாட்டாளர்கள் இறக்கினர். அங்கிருந்து ஊர்வலம் ஆரம்பமானது.

பசார் வீதியின் ஊடாக ஊர்வலம் சென்று கொண்டிருக்கும் போது, பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரரும் வந்து இணைந்து கொண்டார். அங்கிருந்து நகர சபையை வந்தடைந்த ஊர்வலம், பின்னர் பூங்கா வீதியின் ஊடாக காமினி பாடசாலைக்குச் சென்று அங்கிருந்து வவுனியா மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது.

இதன் போது ஏ-9 வீதியை முற்றாக மறித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸார் வீதியின் கரையில் நின்று போராட்டம் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு இணங்கவில்லை. சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் ஏ-9 வீதியின் ஊடாக ஒரு வழிப் பாதைக்கு மாத்திரம் போராட்டக்காரர்கள் இடம் கொடுத்தனர்.

'இது சிறிலங்கா, தமிழ்நாடு அல்ல', 'விக்னேஸ்வரன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்', 'யாழ்ப்பாணத்தில் நடந்த ஊர்வலத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்', 'இலங்கை நாட்டில் பிரிவினைவாதம் வேண்டாம்', 'இது எங்கள் தேசம்' எனக் கோசமிட்டனர். அத்துடன் பதாகைகளையும் தாங்கிப் பிடித்திருந்தனர். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனை தீவிரவாதி என்று வர்ணித்து கடுமையான கோசங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

போராட்டத்தின் முடிவில் வவுனியா மாவட்டச் செயலரிடம் மனுக் கையளிக்கப்பட்டது.

(வ-5)

## அரசியல்...

நால்வரின் வழக்குகள் கடந்த இரு தினங்களில் நீதிமன்றினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மன்றில் முன்னிலையாகிய அரச சட்டத்தரணிகள் புனர்வாழ்வுக்கு விடுவிப்பதற்கான எந்த அறிவித்தல்களும் தமக்கு கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்தனர்.

இந்த நிலையில் இரு அரசியல் கைதிகள் தமது குற்றங்களை நீதிமன்றில் நேற்று ஒப்புக் கொண்ட நிலையில் அவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகளில், பாரதூரம் குறைந்த குற்றச்சாட்டுடைய 23 பேரை புனர்வாழ்வு வழங்கி விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் இணக்கம் தெரிவித்தது. அந்தக் கைதிகள் ஏற்கனவே சிறையில் இருந்த காலத்தை தண்டனைக் காலமாக கருதி, அவர்களின் குற்றச்சாட்டுக்களைக் குறைத்து விடுவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கைதிகளின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, அவர்களின் வழக்குகளை முடிவுக்கு கொண்டு வந்து ஆறு மாத காலப் புனர்வாழ்வு வழங்கி விடுவிக்க சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இது தொடர்பில் நீதி அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சுக்கு ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டது.

23 பெயர்கள் அடங்கிய பட்டியலில் உள்ள இருவருக்கு கடந்த 28 ஆம் திகதி வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது.



இதன் போது வழக்கு அடுத்த தவணைக்கு திகதி வழங்கப்பட்டது. அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவது தொடர்பிலான எந்தக்கருத்தையும் அரச சட்டத்தரணி மன்றில் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் கொழும்பில் நேற்று இடம்பெற்ற வழக்கில், இரு அரசியல் கைதிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது. 23 பெயர்கள் அடங்கிய பட்டியலில் அவர்களது பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அரச சட்டத்தரணி, இவர்களைப் புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்வதற்கான எந்த அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று மன்றில் தெரிவித்தார்.

இதனையடுத்து ஏ.நகுலராசா என்ற அரசியல் கைதிக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனையும் ஒரு வருடம் புனர்வாழ்வும், கெங்காதரன் என்ற அரசியல் கைதிக்கு இரண்டு வருடம் சிறைத் தண்டனையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

(வ-5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 30.09.2016 | வெற்றி வாரம் 2037 | வர்ணம் சிவப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
03 13 23 44
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ. 3, 884, 920/=
[illegible]

## துயர் பகிர்கின்றோம்



எமது நிறுவன வைத்திய
அதிகாரி **ஜீவகன் சுதர்சனி**
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சுப்பிரமணியம்
இரத்தினசிங்கம்**

அவரின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதேச வைத்தியசாலை,
குருநகர்.

மாவட்ட வைத்திய அதிகாரி
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் நீரியல் வள
முகாமைத்துவ உதவியாளராக பணிபுரியும்
**திருமதி அமுதினி பொன்திவாகர்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் இராமநாதன் இராமச்சந்திரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

உதவிப் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்,
கடற்தொழில் நீரியல்வள துறைத்திணைக்களம்.

### வீடு வாடகைக்கு

இல.129 நாவலர் வீதியிலுள்ள
முற்றிலும் ரைல்ஸ் பதித்த மாடிவீடு
வாடகைக்கு உண்டு.
**077 1476932, 076 9277796**

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

5 நாள், 2 மாத
ஊர்க்கோழிக்குஞ்சுகள்,
வான்கோழிக்குஞ்சுகள்
விற்பனைக்குண்டு.
**077 245 3673**

### தவறிவிட்டது

இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த
நா.நந்தவேல் என்பவருடைய தே.அ.அட்டை
(781654582V) மற்றும் ஆவணங்கள்
அடங்கிய பேஸ் ஒன்று மருதனார்மடம்
சந்தையில் 25.09.2016 அன்று தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
**தொடர்பு: 077 4563660**

### விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலிருந்த (டாட்டா
909NPLJXXX) 25000Km
ஓடியது விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு: 076 7049048**

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபை உறுப்பினர்களின் வழிபடுநர் சபை உறுப்பினர்களுக்கான அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மாவட்ட நீதிமன்றம் - ஊர்காவற்றுறையினால் TR/10 வழக்கில் 06.02.1985இல் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் முகாமைத்திட்டம் ஒன்றின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி முகாமைத்திட்டத்தின் பிரிவு 8(3) இன் கீழ் வழிபடுநர் சபையின் ஒவ்வொரு பொதுக் கூட்டமும் கூட்ட வேண்டிய முறைபற்றியும் பிரிவு 10 இன் கீழ் வழிபடுநர் சபையின் விசேட பொதுக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய முறைபற்றியும் கூறப்படுகின்றது.

முகாமைத் திட்டத்தில் கூறப்பட்டவற்றுக்கு முரணாக "பொதுக்கூட்டமெனத்" தலைப்பிட்டு விசேட பொதுக்கூட்டமொன்றினை செயலாளர் அவர்கள் தன்னிச்சையாக அறங்காவலர் சபையின் தீர்மானமின்றி அறங்காவலர்களுக்குத் தெரியாமல் 02.10.2016 இல் கூட்டுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த 25.09.2016 இல் நடந்த அறங்காவலர் சபைக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு அறங்காவலர் சபையின் தீர்மானமின்றி தன்னிச்சையாக செயலாளரினால் கூட்டப்பட்டும் வழிபடுனர் சபையின் பொதுக்கூட்டம் முகாமைத்திட்டத்திற்குப் புறம்பானதுடன் சட்டத்துக்கு முரணானதாகவும், சட்ட வலுவற்றதெனவும் கூறப்பட்டதுடன் கூட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டுமென முன்மொழிந்து வழிமொழியப்பட்டது. எனினும் செயலாளர் வழிபடுநர் சபையின் கூட்டத்தினை பிழையாகவும், தவறாகவும், சட்ட முரணாகவும், முகாமைத்திட்டத்துக்கு முரணாகவும் கூட்ட தொடர்ந்தும் முயன்று வருகின்றார்.

குறித்த 02.10.2016 ஆம் திகதி கூட்டப்படவுள்ள கூட்டம் முகாமைத்திட்டத்துக்கு முரணான கூட்டமெனவும் இக்கூட்ட அறிவித்தலை புறந்தள்ளி வழிபடுநர் சபை உறுப்பினர்கள் சமுகமளிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் வழிபடுநர் சபை உறுப்பினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

வழிபடுநர் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் முகாமைத்திட்டத்தின் பிரிவு 19(1)இற்கு அமைவாக 2017 பெப்ரவரி மாதம் முறையான அறிவித்தல் வழங்கப்பட்டுக் கூட்டப்படும்.

**– அறங்காவலர் சபை உறுப்பினர்கள்**

**அறங்காவலர் சபை உறுப்பினர்கள் விவரம்**

[illegible] (தலைவர் - மரபுவழி அறங்காவலர்), கு.சரவணபவானந்தன் (மரபுவழி அறங்காவலர்), [illegible] (அறங்காவலர்), கோ.வாமதாசன் (அறங்காவலர்), [illegible] (அறங்காவலர்), த.அமிர்தராசா (அறங்காவலர்), ந.சுரேஸ்குமார் (அறங்காவலர்), [illegible] (அறங்காவலர்), கே.நாகேஸ்வரன் (மரபுவழி அறங்காவலர்)

# தனியார் அனல் மின் நிலையத்தை அகற்றுமாறு கோரிப் போராட்டம்

அம்பாறை, ஒக். 1
நிந்தவூர் 23 ஆம் பிரிவில் இயங்கி வரும் நெல் உமிமூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தனியார் அனல் மின் நிலையத்தை மூடி அகற்றுமாறு கோரி நேற்று வெள்ளிக்கிழமை நிந்தவூரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

நிந்தவூர் ஜும் ஆ பள்ளிவாசல் முன்றிலிலிருந்து ஜும் ஆ தொழுகையின் பின் ஆரம்பமான இந்தப் பேரணி நிந்தவூர் பிரதேச செயலகம் வரை இடம் பெற்றது.

தனியார் அனல் மின்நிலையம் அமைந்திருக்கும் அட்டப்பள்ளம் பிரதேச மற்றும் நிந்தவூரைச் சேர்ந்த பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணியின் இறுதியில் அனல்மின் நிலையத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சுட்டிக்காட்டியும், அனல் மின் நிலையத்தை மூடி அகற்றுமாறு வலியுறுத்தியும் நிந்தவூர் பிரதேச செயலாளரிடம் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் மனுக் கையளிக்கப்பட்டது.

"மக்கள் வாழும் பகுதியில் அனல் மின் நிலையம் அமைய அனுமதித்தது யார்?" "சுகாதாரப் பிரதி அமைச்சரே எம்மைப் பாதுகாருங்கள்", "இதய நோயாளியாகி எங்கே போய் வாழ்வது", "தனித் தொழிலதிபர்களைப் பாதுகாக்காதே", "எம் சாதாரண வாழ்க்கையை மீட்டுத்தருக", "சாம்பலும் சோறும் தின்ன வைக்காதே", என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை பேரணியில் கலந்து கொண்டோர் ஏந்தியிருந்தனர்.

இந்த அனல் மின் நிலையத்தை மூடிவிடுமாறு தகுந்த காரணங்களுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டி வருகின்ற போதிலும் அரசியல் ஆதரவும் பணபலமும் மேலோங்கி தொடர்ந்தும் இயங்கி வருவதாக பிரதேச செயலாளரிடம்கையளிக்கப்பட்ட மனுவில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் ஆட்சேபனை தொடர்பில், உயர் தொழில் நுட்பவியலாளகளின் தொழில்நுட்ப ஆய்வு செய்யப்பட்டு அனல்மின் நிலையம் தொடர்பில் அறிக்கை பெறப்படவுள்ளதுடன் இதன் பின்னர் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பிரதேச செயலாளர் நிபா உம்மா ஜலீல் உறுதியளித்தார். (த-5-30)

---

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நின்ற 3 இளைஞர்கள் மீது நேற்று இரவு கொலைவெறித் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. மூன்று மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அந்த இளைஞர்கள் மீது சரமாரியாக வாள் வெட்டுத் தாக்குதல் மேற் கொண்டு விட்டு தப்பித்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் அத்தியடியைச் சேர்ந்த புவிதன், கோபிதன் , அஜந்தன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் ரயில் நிலையம் எதிரே உள்ள சில்லறை வியாபார நிலையத்தின் உரிமையாளர் மற்றும் அவரது சகோதரன் உள்ளிட்ட மூவர் மீது நேற்று இரவு 8 மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாள் வெட்டுத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இவ்வாறு வாள் வெட்டுத் தாக்குதல் இடம்பெற்றதையடுத்து காயமடைந்தவர்கள் எழுப்பிய அவலக் குரல் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தவேளையில், தாக்குதல் தாரிகள் அந்த இடத்திலிருந்து தப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதன்போது தாக்குதலுக்குள்ளான மூவர்மீது வாள்வெட்டும் ஒருவர் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் இருந்து உதவி கோரியதையடுத்து வாள் வெட்டுக்கு இலக்கான மூவரும் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில்சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞர்களின் உறவினர்கள் வைத்தியசாலையில் குவிந்தனர். இதன் போது யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் வைத்தியசாலையில் விசாரணைகளை மேற் கொண்டனர்.

வாள் வெட்டில் ஈடுபட்டவர்கள் என கருதப்படுபவர்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் தாக்குதல்தாரிகளை பொலிஸார் தேடிவருகின்றனர். (வ -101)

## உதவுங்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கிளிநொச்சிப் பொதுச் சந்தை வர்த்தகர்கள் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்ட வர்த்தகர்களே மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர். கடந்த 16ஆம் திகதி கிளிநொச்சி பொதுச் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்துக் காரண மாக முழுமையாகவும், பகுதியளவிலுமாக 124 வியாபார நிலையங்கள் அழிவடைந்தன.

போரும், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வும், அதன் விளைவாக ஏற்பட்ட உயிர், உடமைகள் இழப்பும் எனப் பல்வேறு அழிவுகளிலிருந்து ஓரளவுக்கு மீண்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள், மொத்த வியாபாரிகள் ஆகியோரிடம் கடன்களை பெற்றுள்ளோம். அந்தக் கடன் முதலீட்டுடன் எங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்தோம்.

இதன் மூலம் இனிமேலாவது எங்கள் வாழ்வில் சிறிய முன்னேற்றத்தையாவது எட்டமுடியும் என்று நம்பினோம். முன்னேற்றப் பாதையில் ஒரு சில அடிகளை எடுத்து வைக்க முன், தீ எல்லாவற்றையும் முற்று முழுதாக நாசமாக்கிவிட்டது. எமது ஒரேயொரு வாழ்வாதாரமாக இருந்த கடைகள் இன்று சாம்பல் மேடாக காட்சியளிக்கிறது.

பல தடவைகள பல அழிவுகளுக்கு முகம் கொடுத்து மீண்ட கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகளாகிய நாம், தற்போது மீள முடியாத அளவுக்கு தீ எல்லாவற்றையும் எரித்து சாம்பலாக்கியுள்ளது. எங்களுடைய வியாபாரிகள் இனி உதவிகள் இன்றி வழமைக்குத் திரும்ப முடியாத நிர்க்கதியான நிலையில் நம்பிக்கையற்று காணப்படுகின்றனர்.

ஆகவே எமக்குத் தற்போது இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை நீங்கள் நீட்டுகின்ற கருணைமிக்க உதவிக் கரமே!. கடன் சுமையை தாங்க முடியாது தத்தளிக்கும் உறவுகளுக்கு கை கொடுத்து உதவுங்கள் எனக்கேட்கின்றோம்.

இந்த உருக்கமான வேண்டுகோளை சாம்பல் மேட்டில் இருந்து உரிமையுடன் புலம்பெயர் எம் உறவுகள், புலம்பெயர் பொது அமைப்புகள், மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியோரிடம் கோருகின்றோம்.

உங்களால் முடிந்த உதவிகளை நேரடியாக சந்தை வர்த்தக சங்கத்தின் ஊடாக மேற்கொள்ளுங்கள். எமக்கான உதவிக்கரத்தை நீட்டுவோர் கிளிநொச்சி சந்தை வர்த்தக சங்கத்துடன் நேரடியாகவோ, தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொண்டு, சங்கத்தின் கணக்கு இலக்கத்துக்கு உதவுங்கள். இலங்கை வங்கி கிளிநொச்சி கிளை. நடைமுறை கணக்கு இல. 79718505, தொலைபேசி இலக்கங்கள் 0778666737, 0778114187, 0773830489 இவற்றின் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் என்று கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

(வ-5-ரி3-34-35)

## விளக்கமில்லாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்து வருவதாக, இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா குற்றம் சுமத்தினார். இதற்குப் பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நான் தெரிவித்த தகவல்களை செய்தியை சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளாமல் அவசரப்பட்டு அறிக்கை விடக் கூடாது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியிருந்தார் என்று நான் எந்தவொரு இடத்திலும் சொல்லவில்லை.

மேலும், முஸ்லிம் மக்களுடைய முழுச் சம்மதத்துடன் தான் இப்போதும் வடக்கு கிழக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். முஸ்லிம்களுக்கான தனி அலகுக் கோரிக்கையை தமிழர் தரப்பு ஒருபோதுமே நிராகரிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனிக்கட்டி ஆலையில் திருட்டு; சந்தேகத்தில் 7 பேர் கைது

முல்லைத்தீவு பனிக்கட்டித் தொழிற்சாலையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டனர் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களிலும் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்பது அவர்களிடம் மேற்கொண்ட ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட சிலாவத்தைப் பகுதியில் உள்ள பனிக்கட்டித் தொழிற்சாலை கடந்த 28ஆம் திகதி இரவு வேளை உடைக்கப்பட்டு பல பொருள்கள் திருடப்பட்டன. இது தொடர்பாக அதன் உரிமையாளர் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். முறைப்பாடு தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் லால் சந்திரசிறி, குற்றப்பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் றம்பண்டா மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் பூ.கஜேந்திரன் அடங்கிய குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விசாரணைகளின் போதே குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய 7 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் இருவர் யாழ்ப்பாணம், கொடிகாமம், புதுக்குடியிருப்புப் பகுதிகளில் இடம்பெற்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக வழக்குகள் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பதிவாகி உள்ளமை தெரியவந்தது. விசாரணைகளின்போது சந்தேக நபர்களால் திருடப்பட்ட இலத்திரனியல் பொருள்களும் மீட்கப்பட்டன என்று முல்லைத்தீவுப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-21,ரி7)

## மரண அறிவித்தல்

திருமதி

### தங்கலக்ஷ்மி குமாரசாமி



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கலக்ஷ்மி குமாரசாமி நேற்று (30.09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விதானை கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வனசமலர் சண்முகநாதன் மற்றும் கருணாதேவி மனோகரபூபன், சண்முகநாதன் நந்தா, ஜெயந்தி ரூபகுமார், பிரேமா ஸ்கந்தராஜா, மஞ்சுளா செல்வன், மிதுலா ரவிகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 4921557,**
**077 3144787, 077 1337894**

## மரண அறிவித்தல்

திருமதி **செல்லம்மா கந்தையா**



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், தற்போது புங்குடுதீவில் வசித்துவந்தவருமான திருமதி செல்லம்மா கந்தையா நேற்று (30.09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தங்கமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும் அமிர்தம், தியாகராசா, பொன்னாச்சி, சிவபாக்கியம் (சின்னமணி) ஆகியோரின் அன்புத்தாயும் நல்லதம்பி, புவனேஸ்வரி, நாகராஜா, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புமாமியும் பொன்னம்மா, வெற்றிவேலு, வேலுப்பிள்ளை, கனகரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் இராசம்மா, கிருஷ்ணபிள்ளை, ஞானம்மா, வைத்திலிங்கம், குழந்தைவேலு ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5ஆம் வட்டாரம்,**
**இறுப்பிட்டி, புங்குடுதீவு.**

**தகவல்**
**க. தியாகராஜா.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

(ARCHITECT, சமாதான நீதிவான்)



பாண்டியன் தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் கடந்த (28.09.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இரத்தினம் தம்பதியரின் மகனும், மல்லிகா அவர்களின் அன்புக் கணவரும், தயாபரன் (லண்டன்), காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் சத்தியவாணி (கனடா), Dr.சுதர்ஷனி, சாயினி (லண்டன்), சஞ்சீவன் (AMT - Accountant) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், சுதர்மா (லண்டன்), சற்குணராஜா (கனடா), Dr.ஜீவகன், நீலகரன் (ராஜ்-DIRECTOR, S&N (PVT) COM .UK), சங்கீதா ஆகியோரின் மாமனும், சக்திகிரிவன், கவிநயா, கிரிஷிகேஷன், சுவேத்தா, ஷேயோன்சரிஷ், சக்திவிதூசன், சயனா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல. 73, கொழும்புத் துறை வீதி,**
**பாண்டியன் தாழ்வு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை நாகரத்தினம்

**(பிரபல இரசாயனவியல் ஆசிரியர்,**
**ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யாழ். மத்திய கல்லூரி)**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 17 . 11 . 1945 |  | 30 . 09 . 2016 |

பெரியபளையைப் பிறப்பிடமாகவும், யாழ். நல்லூர் வைமன் வீதியை முன்னைய வதிவிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான தாமோதரம்பிள்ளை நாகரத்தினம் (பிரபல இரசாயனவியல் ஆசிரியர் ) கொழும்பில் நேற்று (30.09.2016) காலமானார்.

அன்னார் செல்வநாயகியின் அன்புக்கணவரும் சுபோதினி, சுசிந்தினி (ஆசிரியர்-கொழும்பு), நிருத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமலிங்கம் (சட்டத்தரணி -கொழும்பு), உமாசங்கர் (இரசாயனயவியல் - ஆசிரியர்) ஆகியோரின் மாமனும் அபிசன் (C/Hindu College), அபிவர்மன் (Royal College), அக்சியா ஆகியோரின் பேரனும் சுவாமிநாதன், தர்மகுலசிங்கம், தர்மராசசிங்கம் காலஞ்சென்ற தனபாலசிங்கம், அரியமலர், அருமைநாதன், திருச்செல்வநாதன், சிவநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் புகழுடம்பு கல்கிசை மகிந்தமலர்ச்சாலையில் 01.10.2016 சனிக்கிழமை காலை 8 மணியில் இருந்து பி.ப. 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் இடம்பெற்று பிற்பகல் ஒரு மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**அ. பிரேமலிங்கம் (மருமகன்)**
**077 9113042, 011 2362208**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யங்ஹென்றிஸ் - விண்மீன் இறுதியில் மோதத் தகுதி

கரணவாய், ஒக். 1
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் வி.கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் வி.கழகம் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளது.
பாரதியின் மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து நடைபெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்கிறார். இறுதியாட்டத்துக்கு முன்னதாக நடைபெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-422-108)

## தட்டெறிதல் போட்டியில் தகுதி இழந்தது வடக்கு

யாழ்ப்பாணம், ஒக். 1
தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்றுநடைபெற்ற ஆண்கள் பிரிவு தட்டெறிதலில், வடமாகாண வீரர்கள் முதல் எட்டு வீரர்களுக்கான தகுதியை இழந்து பதக்கத்துக்கான போட்டியிலிருந்து விலகினர்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன. ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் வடமாகாணத்தை பிரதி நிதித்துவம் செய்த எஸ்.பிரகாஷ்ராஜ் 32.45 மீற்றர் தூரத்துக்கு எறிந்திருந்தார். ஆனால் அவரால் முதல் எட்டு வீரர்களுக்கான போட்டிக்குத் தகுதி பெற முடியவில்லை. வடமாகாணத்தின் ஏனைய வீரர்களான ஏ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.செல்வரஜீவன் இருவரும் போட்டியில் பங்குபற்றவில்லை.
இந்தப் போட்டியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிக் 42.34 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் தென்மாகாணத்தைச் சேர்ந்த நிரோசன் 41.77 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் தென்மாகாணத்தைச் சேர்ந்த சதுரங்க 40.95 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)


கிழக்கு மாகாண வீரர் ஆசிக்



# பெண்கள் பிரிவு கயிறிழுத்தலில் வடக்கு அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 1
தேசியமட்ட கயிறு இழுத்தல் போட்டியில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து வடமேல் மாகாண அணி மோதியது. மூன்று சுற்றுக்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு சுற்றுக்களின் முடிவில் இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பதிவுசெய்தமையால் மூன்றாவது சுற்றிலேயே அரையிறுதிக்குத் தகுதி பெறும் அணியை தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. அந்தச் சுற்றை வடக்கு அணி கைப்பற்றியதையடுத்து அந்த அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து வடமத்திய மாகாண அணி மோதவுள்ளது. (ம-23)

# தேசியமட்ட கடற்கரை கபடி; வடக்கு அணி காலிறுதிக்கு

யாழ்ப்பாணம், ஒக். 1
தேசியமட்ட கடற்கரை கபடித் தொடரில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.
வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற இந்த காலிறுதிக்குத் தகுதி பெறும் போட்டியில், வடமாகாண அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதியது. இதில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய வடமாகாண அணி 59:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
இன்று நடைபெறவுள்ள காலிறுதியாட்டத்தில் வடக்கு மாகாண பெண்கள் அணி சப்பிரகமுவா மாகாண பெண்கள் அணியை எதிர்த்து பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (ம-422)

## நவஜீவன்ஸ் – வளர்மதி இறுதியில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 1
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ், புத்தூர் வளர்மதி அணிகள் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றன.
கலைமதியின் கரப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் முதலிரு செற்களையும் முறையே 25:23, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. மூன்றாவது, நான்காவது செற்களை மட்டுவில் மோகனதாஸ் அணி 25:20, 27:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செற்றை 18:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய நவஜீவன்ஸ் அணி, முடிவில் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நாயன்மார்க்கட்டு பாரதி வி.கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் 25:15, 25:20, 25:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வளர்மதி அணி நேர் செற் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# இந்திய அணி மந்தமான தொடக்கம்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் முடிவில் இந்திய அணி 239-7 என்று மந்தமான தொடக்கம் கண்டது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. கம்பீர் இந்திய அணிக்கு திரும்பினாலும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் அவர் இணைக்கப்படவில்லை.
ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் முரளி விஜய். ஒரே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் தவான். சக ஆரம்ப வீரரான முரளி விஜய் 9 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அணித்தலைவரான கோக்லியும் நிலைக்கவில்லை. 36 ஓட்டங்களுக்கு முன்வரிசையை இழந்தது இந்திய அணி. ரகானே, புஜாரா இணை இன்னிங்ஸைக் கட்டமைத்தது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து இணைப்பாட்டமாக 141 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 77 ஓட்டங்களுடன் ரகானேயை பட்டேலும், 87 ஓட்டங்களுடன் புஜாராவை வாக்நெரும் வெளியேற்றினர். ரோகித் சர்மாவால் தாக்கத்தை ஏற்படுத்த இயலவில்லை. அஸ்வின் 26 ஓட்டங்களைச் சேர்த்தார். நாள் முடிவில் இந்தியா 239-7 என்ற நிலையில் உள்ளது. சஹா 14 ஓட்டங்களுடனும், ஜடேஜா ஓட்டத்தையும் பெறாத நிலையிலும் களத்தில் உள்ளனர்.
பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பாக ஹென்றி 3 இலக்குகளையும், பட்டேல் 2 இலக்குகளையும், போல்ட், வாக்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குண்டெறிதலில் பதக்கமில்லை

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு குண்டெறிதல் போட்டியில் வடக்கு மாகாணத்துக்கு பதக்கங்கள் கிடைக்கவில்லை.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை பெண்களுக்கான குண்டெறிதல் போட்டி நடைபெற்றது. வட மாகாணத்துக்கு பதக்கங்கள் எவையும் கிடைக்கவில்லை. வடமாகாண வீராங்கனையான என். ரிசாந்தினி 9 மீற்றர் 51 சென்ரி மீற்றர் தூரத்துக்கு எறிந்து எட்டாம் இடத்தைப் பிடித்தார். வடக்கின் சிறந்த பெறுபேறாக இதுவே பதிவானது. தங்கப் பதக்கத்தை 15.25 மீற்றர் தூரத்துக்கு எறிந்து கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெர்னாண்டோவும், வெள்ளிப் பதக்கத்தை 11.85 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தென்மாகாணத்தைச் சேர்ந்த பிரியங்கா குமாரியும், வெண்கலப் பதக்கத்தை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ரிசார்ட் 11.46 மீற்றர் தூரத்துக்கு எறிந்தும் கைப்பற்றினர்.

(ம-422)

## தேசியத் தடகளத்தில் இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசியமட்ட தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இரண்டாம் நாளாகிய இன்று ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல், பெண்களுக்கான 100 மீற்றர் சட்டவேலி, ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி, இருபாலாருக்குமான 800 மீற்றர், பெண்களுக்கான நீளம் பாய்தல், ஆண்களுக்கான குண்டெறிதல், பெண்களுக்கான தட்டெறிதல், இருபாலாருக்குமான 400 மீற்றர், ஆண்களுக்கான நீளம் பாய்தல், பெண்களுக்கான ஈட்டி எறிதல், இருபாலாருக்குமான 100 மீற்றர் தெரிவுப் போட்டிகள், இருபாலாருக்குமான 1500 மீற்றர் தெரிவுப் போட்டிகள், 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டம், 4 வீராங்கனைகள் பங்கு பற்றும் 100 மீற்றர் அஞ்ச லோட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

(ம-422)



# கோலூன்றிப் பாய்தலில் அனித்தா புதிய சாதனை

## வெண்கலமும் வடக்கிடம்



யாழ்ப்பாணம், ஒக். 1

தேசிய தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய ஜெ.அனித்தா தேசியத்தில் சாதனை படைத்து தங்கம் வென்றார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தல் போட்டி நேற்றுக் காலை நடைபெற்றது. வடமாகாணத்தின் சார்பாக களமிறங்கிய ஜெ.அனித்தா 3 மீற்றர் 41 சென்ரிமீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தேசியமட்டத்தில் சாதனை படைத்து தங்கப் பதக்கத்தை வென்றார். பொலனறுவையைச் சேர்ந்த வீராங்கனையான கசில்டா டெல்ருக்கி 3.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து நிலைநாட்டியிருந்த சாதனையையே அனித்தா தகர்த்தார். வடமாகாணத்தின் சார்பாகக் களமிறங்கிய சுகித்தா 3.10 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

(ம-23-422)

## தேசியமட்ட கயிறு இழுத்தல்; வடக்கு அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசியமட்ட கயிறு இழுத்தல் போட்டியில் ஆண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி அரையிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

வடக்கு மாகாண அணி தனது காலிறுதிப் போட்டியில் ஊவா மாகாண அணியுடன் நேற்று மோதுவதாக இருந்தது. ஊவா மாகாண அணி சமுகம் தராதமையை அடுத்து வடக்கு மாகாண அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. கிழக்கு மாகாண அணியை எதிர்த்து வடக்கு மாகாண அணி இன்று அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

(ம-23)

## போட்டியை நிறைவுசெய்யாத வடக்கு வீர, வீராங்கனைகள்

யாழ்ப்பாணம், ஒக் 1

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற நெடுந்தூர ஓட்டங்களில் வடக்கு மாகாண வீர, வீராங்கனைகள் போட்டியை நிறைவு செய்யாமல் பாதியுடன் வெளியேறினர்.

துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர், பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஆகிய போட்டிகள் நேற்றுக் காலை நடைபெற்றன. ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து மூன்று வீரர்கள் கலந்துகொண்டனர். எட்டாவது சுற்றுடன் அனைவரும் போட்டியிலிருந்து வெளி யேறினர். தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட வீராங்கனை எட்டாவது சுற்றுடன் போட்டியிலிருந்து விலகினார்.

(ம-23)



ஆண்களுக்கான தேசியமட்ட உயரம்பாய்தல் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. வடமாகாணத்தைப் பிரதிநிதித் துவம் செய்து களம் இறங்கிய ஆர்.சதீசன் தனது முதல் பாய்ச்சலின் எத்தனிப்பின்போது காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக போட்டியிலிருந்து விலகினார். வடமாகாணத்தின் ஏனைய வீரர்களான எஸ்.சரத்பாபு, பி.நவீன் இருவரும் சமுகம் தரவில்லை.

(ம-422-23)

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் வடக்கு மாகாணம் இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், ஒக். 1

தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாண அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுக் காலை இந்த அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. வடக்கு மாகாண பெண்கள் அணியை எதிர்த்து வடமேல் மாகாண பெண்கள் அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு கால் பாதிகளையும் 18:7, 17:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய வடக்கு மாகாண அணி முதல் பாதியின் முடிவில் 35:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது. மூன்றாம், நான்காம் கால் பாதிகளிலும் வடக்கின் ஆதிக்கமே மிகுந்திருந்தது. மூன்றாம் கால்பாதியை 12:10 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும், நான்காவது கால் பாதியை 8:6 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் வடக்கு மாகாண அணி கைப்பற்றியதையடுத்து முடிவில் அந்த அணி 55:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. அந்த அணி இன்று தனது இறுதியாட்டத்தில் மேல மாகாண அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

(ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டோனியின் வாழ்க்கையை புறக்கணித்த பாகிஸ்தான்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ள எம்.எஸ்.டோனி தி அன் ரோல்ட் ஸ்ரோறி என்ற திரைப்படம் பாகிஸ்தானில் வெளியிடப்படவில்லை.

ஏராளமான மொழிகளில் 60 நாடுகளில் 4 ஆயிரத்து 500 திரையரங்குகளில் எம்.எஸ்.டோனி தி அன் ரோல்ட் ஸ்ரோறி திரைப்படம் நேற்றுத் திரைக்கு வந்தது. ஆனால் குறித்த படத்தைத் திரையிட பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் இடையில் தற்போது நிலவும் அரசியல் குழப்பங்களே திரைப்படத்துக்குத் தடைவிதிக்கப்படக் காரணம் என்று கருதப்படு கின்ற போதிலும், தணிக்கைக்குழு சான்றிதழ் அளிக்கவில்லைஎன்றுபாகிஸ்தான்தரப்பில்தெரிவிக்கப்பட்டது.

# நூறு வீரர்களை ஒப்பந்தம் செய்ய இலங்கை கிரிக்கெட் சபை திட்டம்

நூறு வீரர்களிடையே ஒப்பந்தம் மேற்கொண்டு அவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வளர்த்தெடுக்க இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது.

இலங்கை ஏ கிரிக்கெட் அணியின் 30 வீரர்கள், தேசிய அணியின் 25 வீரர்கள், 20 வளர்ந்துவரும் கிரிக்கெட் வீரர்கள், மாகாண, கழக மட்டங்களில் 25 வீரர்கள் என மொத்தம் நூறு வீரர்களை இலங்கை கிரிக்கெட் சபை விரைவில் ஒப்பந்தம் செய்யவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒப்பந்தம் செய்யும் வீரர்களைத் தொடர்ந்து பயிற்றுவித்து, ஏனைய வீரர்களை குறித்த ஒப்பந்தத்துக்குள் உள்வாங்கி இலங்கை கிரிக்கெட் அணியை பலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பன்னாட்டு கிரிக்கெட் சபையில் ஆதிக்கம் செலுத்தும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆகியன இவ்வாறானதொரு திட்டத்தையே பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



லா லிகா தொடரில் நாளை நடைபெறவுள்ள புருசியா டொட்மண்ட், ரியல் மட்ரிட் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபடும் மட்ரிட் அணியின் தலைவர் ராமோஸ் மற்றும் நட்சத்திர வீரரான றொனால்டோ. (ம)

## வெளியேறியது வடக்கு அணி

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசியமட்ட கடற்கரை கபடியில் ஆண்கள் பிரிவில் வடமாகாண அணி முதல் சுற்றுடன் வெளியேறியது. வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் வடக்கு அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதியது. இதில் வடமாகாண அணி 24:58 என்றபுள்ளிகளின் அடிப்படையில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது. (ம-422)


## போட்டிக்கு வரவில்லை வடக்கின் வீராங்கனைகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசியமட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற முப்பாய்ச்சல் போட்டியில் வடக்கு வீராங்கனைகள் எவரும் போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகின்றது. பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டி நேற்று நடைபெற்றது. வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யவிருந்த ஜே.சுகிர்தா, ஏ.எம்.தயாந்தினி, ஏ.வி.ஜஸ்மிதா ஆகியோர் போட்டியில் கலந்து கொள்ளவில்லை. (ம-422)

# மன்செஸ்டர் யுனைற்ரெட் போராடி வெற்றிபெற்றது



ஐரோப்பிய கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணி போராடி வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் யுனைற்ரெட்டை எதிர்த்து சோர்யா பலப்பரீட்சை நடத்தியது. சோர்யா கத்துக்குட்டி அணியாக இருந்தபோதிலும் மன்செஸ்டர் யுனைற்ரெட்டுக்கு மிகுந்த சோதனையை வழங்கியது. கோல் கணக்கு இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 65 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டரின் நட்சத்திர வீரரான இப்ராகிமோவிக் பதிவுசெய்த கோலே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைற்ரெட் வெற்றிபெற்றது. (ம)

## அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழி படுனர் மகா சபையின் சிறப்புப் பொதுக் கூட்டம்.

இடம் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கல்யாண மண்டபம்.

காலம் - 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை

நேரம்- காலை 10.30 மணி

தலைவர்- ஆ. தியாகராசா அவர்கள்

கோவிலின் வழிபடுநர் மகா சபையின் சிறப்புப் பொதுக் கூட்டம் 02.10.2016 அன்று காலை 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. எனவே அனைத்து வழிபடுநர் மகாசபையின் உறுப்பினர்களை யும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இறைபணியில்
செயலாளர்,
திரு. பொ. அன்பரசன்

## மனமார்ந்த வாழ்த்துக்கள்



கல்விக்கொடையாளன்
பதிவரோதயன்
இராசையா
குவேந்திரநாதன்
அவர்களின் தொடரும்
சமூகப்பணியைப் பாராட்டி
29.09.2016 அன்று யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரி
சமூகத்தால் நடைபெற்ற கௌரவிப்பு விழாவின்போது
இருபத்தைந்து (25) மாணவர்களுக்கு அன்பளிப்புக்களும்
எட்டு (08) மாணவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு
ஊக்குவிப்பு நிதியும் வழங்கி சமூகத்தினருக்கு
எடுத்துக்காட்டாக விளங்கும் இராசையா குவேந்திரநாதன்
அவர்களின் சேவையினை நாமும் மனதாரப்
பாராட்டுகின்றோம்.
ஐங்கரன் களஞ்சியம்
இல.06, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.
Congratulations Congratulations
(J.4976) (13.18)

## வாகன சாரதி தேவை

யாழ் நகரில் இயங்கும் ஒரு வர்த்தக ஸ்தாபனத்திற்கு அனுபவம் மிக்க வாகன சாரதி தேவை. விரும்புவோர் கீழ் காணப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
30 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 6569617
071 4273035

## வெல்டர் தேவை

யாழ் நகரப் பகுதியில் இயங்கும் இஞ்ஜினியரிங் வேக்ஸ் சொப்பிற்கு வெல்டர் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் தேவை.
gasswelding, gasscutting வேலைகள்
தெரிந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு
தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 071 4273035

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org